கிராமநலம்



தமிழ்நாட்டு மக்களின் அன்பு கனிந்த வரவேற்பை எலிசபெத் ராணி உவகையோடு ஏற்று மகிழ்ந்தார்.

CONNEMARA PUBLIC LIBRARY
6 APR 1961

மார்ச் '61

13 ந.பை

"ஈடு செய்யமுடியாத இழப்பு"



உள்நாட்டுத் துறை அமைச்சர் திரு. கோவிந்த வல்லப பந்த் அவர்கள் காலமானுர் என்ற செய்தி கேட்டு, நாடு பூராவுமே கண்ணீர் வடித்தது. தேசியப் போராட்டத்திலே பெரும் பங்கெடுத்துக் கொண்ட முன்னணி வீரர், பழுத்த அரசியல் அனுபவம் படைத்த இணையற்ற ராஜதந்திரி, குறையற்ற நிறை வாழ்வு கண்ட அண்ணலார் திரு. பந்த் அவர்களின் இழப்பு, ஈடு செய்ய முடியாத பெரிய இழப்பாகும். நாட்டின் நல்வாழ்விலே அக்கறை கொண்டு அல்லும் பகலும் தேசத்திற்காகவே பாடு பட்டு மறைந்த அந்த மாவீரருக்கு, நம்முடைய அஞ்சலியைச் செலுத்துவோமாக......

* * * *

"பண்டித பந்தின் மரணம் நாட்டிற்கு மகத்தான நஷ்டமாகும். இந்த நஷ்டத்தை ஈடு செய்வது கடினம். முதிர்ந்த பெருந்தலைவர்கள் ஒருவர்பின் ஒருவராக மறைந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் காட்டிய வழியை நாம் கடைப்பிடித்து, நாட்டின் முன்னேற்றத்தைப் பாதுகாக்கமுடியும் என்று நம்புகிறேம்."

திரு கு. காமராஜ்
முதல் அமைச்சர்.

கிராம நலம்

“கிராமங்கள் வாழ, கிராமப் பொருள் ஓங்க
திட்டங்கள் மேற்கொள்வோம் சேர்ந்து”

— காந்தி மணிக்குறள்.

மாடி 6 | மார்ச் 1961 | படி 6

பொருளடக்கம்

	பக்கம்.
“பஞ்சாயத்து ஆட்சி திறமையோடு நடைபெற”—பிரதமக் காரியதரிசியின் வேண்டுகோள்	2
சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்—காரைக்கேணி	4
“காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்”—திரு. வெ. சாமிநாத சர்மா ..	8
கேள்வியும் பதிலும்	12
பஞ்சாயத்து ஆட்சி—அரசாங்க ஆணை	15
“நாட்டையுயர்த்தும் கூட்டுறவு” (பாட்டு)—திருச்சி வாசுதேவன் ..	15
அளவுள்ள குடும்பம்—அரசாங்க ஆணை	16
“கிராம சேவிகைகள் தேர்ந்தெடுத்தல்”	16
வானொலி நிகழ்ச்சிகள்	17
தமிழ் ஆராய்ச்சியாளருக்கு கல்வி அமைச்சர் வேண்டுகோள்	18
“புனிதன்தனை வாழ்த்தி நிற்போம்”—(பாட்டு)	19
புதிய முறைகளைக் கையாளும் விவசாயிகளுக்கு	20
“விழிப்புக்கொள்! தூங்காதே!”—(பாட்டு)	20
பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு தேர்தல் அதிகாரியின் வேண்டுகோள் ..	21
1961–62-ன் நிதி நிலை அறிக்கை—விசேஷ அம்சங்கள்	22
இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் உதயம்	22
பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு கிராம அபிவிருத்திக் கமிஷனரின் கடிதம்.	27

பகுதி-2

கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை 16–2–61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண்—411	(i)—(iv)
கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை 25–1–61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண்—211	(v—xx)

‘கிராம நல’ இதழ்
ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி,
ஐ.சி.எஸ்.,
பிரதமச் செயலாளர்.

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி
கிராம அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ எஸ் கிருஷ்ணசாமி பிள்ளை
துணைக் காரியதரிசி [பஞ்சாயத்து]

ஸ்ரீ கே சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [பயிற்சி]

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [வேலைமுறை]

ஸ்ரீ எஸ். வேங்கட்ரமணன்,
ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி, நிதித்துறை [திட்டம்]

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி-
ஆசிரியர்.

“கிராம நலம்” பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் “ஆசிரியர், “கிராம நலம்”, கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9” என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கிராம நலம்–சந்தா விவரம்

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் “கிராம நலம்” பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் ‘பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9” என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டா. வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது.

"பஞ்சாயத்து ஆட்சி திறமையோடு நடைபெற...

பஞ்சாயத்துத் தலைவர்கள்–கிராம உத்தியோகஸ்தர்கள் ஒன்றுபட்டு உழைக்க முன்வரவேண்டும்"

(பிரதம காரியதரிசி திரு. ஆர். ஏ. கோபாலசாமி,ஐ.சி.எஸ்,. அவர்களின் அறிவுரை)

[தமிழ்நாடு அரசாங்கத்தின் நிர்வாக வரலாற்றில் முக்கிய இடம் பெறத்தக்க, அறிவுரை ஒன்றை, கீழே வெளியிடுவதில், மகிழ்ச்சி அடைகிறோம். எதிர்கால சமுதாயம், 'ஜன நாயக'த்தில் வேரூன்றி, 'பொருளாதார' வளம்பெற்றுப் பூத்துக்குலுங்கி, 'சுக வாழ்வு' என்னும் பழங்களைப் பெற்று, இந்நாட்டு மக்களெல்லோரும் இன்ப மடைய வேண்டுமானால், அரசாங்க ஆட்சி அமைப்பு, கட்டுக்கோப்பு குலையாமல், உறுதியோடு நின்று, திறமையோடு கடமை செய்யும் வகையில், விளங்க வேண்டும்.

இதற்கு, பழைய அனுபவமும், புதிய லட்சியமும், தக்கவகையில் ஒன்று கலந்து, முன்னேற்றப் பாதையை நோக்கி, ஆனந்தமாகச் செல்லவேண்டும். அப்போது தான், காந்தியடிகள் கண்ட 'ராம ராஜ்யம்'—நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் கிராம ராஜ்யம்—நமது அரசாங்கத் திட்டமான 'புதிய பஞ்சாயத்து ஆட்சி'—செம்மையான முறையில் நடைபெற வழி பிறக்கும்.

பஞ்சாயத்துத் தலைவர்களும் கிராம அதிகாரிகளும், கிராம ஆட்சியில் முக்கிய பங்கு கொள்ள வேண்டியவர்கள்; பொறுப்பும் கடமையும் உணர்ந்த பொதுஜன ஊழியர்கள். இவர்களிடையே இருக்கவேண்டிய நல்லுறவைப் பொறுத்தே, எதிர்கால கிராம அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேறும்.

எனவே, இந்த நல்லுறவை ஏற்படுத்துவதற்கான கடமைகளை, இந்த அறிவுரையில் ரத்தனச் சுருக்கமாகக் காணலாம். இன்றுள்ள சூழ்நிலையில், தமிழ்நாடு அரசாங கத்தின் பிரதம காரியதரிசி—மாநில சர்க்கார் நிர்வாக ஊழியர்கள் எல்லோருக்கும் தலைவராய் விளங்குகின்ற பெருமையும், பொறுப்பும், பழுத்த அனுபவமும் ஒருங்கே அமையப்பெற்ற பொதுஜன சேவையாளர்—கூறியுள்ள அனுபவ பூர்வ மான விஷயங்கள், வாசகர்களின் சிந்தனைக்குச் சிறந்த விருந்தாகும். முக்கியமாக, கிராம அதிகாரிகள், பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லோரும் ஆழ்ந்து படித்துப் பயனடைய வேண்டிய அறிவுரை இது—ஆசிரியர்.]

"பஞ்சாயத்து ஆட்சி திறமையாக நடைபெற வேண்டுமானால், அடிப் படையில் சில முக்கிய மாறுதல்கள் மிகவும் அவசியம். புதிய பஞ்சாயத்துச் சட்டத்தால் மட்டும், அதைச் செய்துவிட முடியாது. மக்களின் மனோபாவம் சரியான முறையில் மாறி, சௌஜன்ய பாவம் வளர வேண்டும். **ஒற்றுமை யும், கூட்டுறவும் அஸ்திவாரமாக அமைந்தால்தான், பஞ்சாயத்து நிர் வாகம் சிறந்த பலனளிக்கமுடியும்.**

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் இடையே, எத்தகைய மனோபாவம் இருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஆராய்ந்துவருகிறோம். சென்ற வருடம் எப்ரல், மே மாதங்களில் நடை பெற்ற பஞ்சாயத்து அபிவிருத்திக் கருத்தரங்குகளில், இதைப்பற்றி, பல பேருடன் நான் கலந்து பேசினேன். கலெக்டர் மாநாடுகளிலும், மற்ற முக் கியமான மாநாடுகளிலும் இதைப்பற்றி நுட்பமாக ஆராய்ந்து பார்த்தோம். பல மாதங்களாக நடைபெற்ற இந்த ஆழ்ந்த ஆராய்ச்சியின் விளைவாக, கிராம ஊழியர்களின் சம்பள உயர் வைப்பற்றிய அரசாங்க உத்தரவுகள் வெளியாகியிருப்பது எல்லோருக்கும் தெரியும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் புதிய பஞ் சாயத்துச் சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் பொறுப்பு, கிராம

உத்தியோகஸ்தர்களுக்குப் பெரிதும் உண்டு என்பதை, நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இதற்கு முக்கியமான காரணம் உண்டு. கடந்த பல ஆண்டுகளாக, நம் நாட்டில் நிர்வாக விஷயத்தில் கிராம அதிகாரிகள் தொடர்ந்து ஈடுபட்டு வந்திருக்கிருர்கள். இது சரித்திரம் கண்ட உண்மை. பல ஆண்டுகளாக, அவர்களிடம் சேர்ந்துள்ள அனுபவத்தை, நாம் வீணுக்காமல், சரியான வழியில் நம் நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்குத் தகுந்தவாறு பயன் படுத்திக்கொள்ள வேண்டும். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள், இந்த உண்மையைத் தக்கவாறு புரிந்து கொண்டு, உணர்ச்சிக்கு ஆளாகாமல் தக்க முறையில் நடந்து கொள்வார்களென்று நம்புகிறேன்.

நிர்வாக அனுபவத்தை பாழடிக்கவில்லை

1947-ல் நம் நாடு சுதந்திரம் அடைந்தபோது, நம் நாட்டிலிருந்த நிர்வாக அதிகாரிகளைப்பற்றி, முக்கியமாக, ஐ.சி.எஸ். அதிகாரிகளைப்பற்றி, இருந்து வந்த பொதுஜன அபிப்பிராயம், உங்களுக்கெல்லாம் நினைவிருக்கலாம். ஒரு சாரார் அவர்களை அறவே வெறுத்ததோடு, அவர்கள் நிர்வாகத்தில் தொடர்ந்து இருப்பதை தீவிரமாக எதிர்த்தனர். ஆனல் சர்தார் வல்லபாய் படேல் போன்ற அனுபவம் வாய்ந்த தேசத் தலைவர்களின் தீர்மானம், வேறு விதமாக இருந்தது. ஆவேசத்திற்கு இரையாகாமல், அவர்கள் செய்த துணிகர முடிவு என்ன என்பதும், உங்களுக்கு நன்ருகத் தெரியும். இன்றைய தினம், நம் நாட்டின் ஆட்சி முறை சரிவர நடைபெற்று, அதன் விளைவாக உலகப்புகழ் ஏற்பட்டிருக்கிறதென்ருல், அதற்குப் பல காரணங்கள் உண்டு. அனுபவம் வாய்ந்த நிர்வாக நிபுணர்களின் சேவையை, சுதந்திர இந்தியா பெறுவதற்கு, வழி செய்தது ஒரு காரணமாகும். இதன் மூலம், கடந்த பல ஆண்டுகளாக இந்நாட்டில் உருவாகி, வளம்பெற்ற நிர்வாக அனுபவத்தை நாம் போற்றிப் பாதுகாத்ததோடு, குடியரசுக்கேற்றவாறு மாற்றியமைத்து மெருகேற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதை என் இப்பொழுது குறிப்பிடுகிறேனென்ருல், கிராம உத்தியோகஸ்தர்களைப் பற்றி, ஒரு சில பஞ்சாயத்துத் தலைவர்கள், தம் விருப்புவெறுப்புகளை மனத்தில் கொண்டு, சில அபிப்பிராயங்களை, உணர்ச்சி வேகத்தோடு வெளியிடுகின்றனர். தனிப்பட்ட இந்த உணர்ச்சிகளும், ஆவேச மனப்பான்மையும் நல்ல நிர்வாகத்திற்குப் பாதகம் விளைவிக்கும். சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடைபெறுவதுதான் குடியரசாட்சி. எனவே, சமுதாயத்தின் நலனை லட்சியமாகக் கொண்டு நடைபெறும் புதிய பஞ்சாயத்து ஆட்சியில், சட்டதிட்டங்களைச் சரியான முறையில் புரிந்துகொண்டு, தக்க வகையில் காரியங்கள் செய்வதில் பயிற்சியும், திறமையும் பெற்ற கிராம உத்தியோகஸ்தர்களை, நாம் தகுந்த முறையில் ஈடுபடுத்த வேண்டும். இதற்காக ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை நாம் உண்டாக்கியிருக்கிறோம்.

கிராம உத்தியோகஸ்தர்கள் புதிய சூழ்நிலையை, சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். கிராமங்கள் சுபிட்சமாக இருந்தால்தான், நாடு சுபிட்சமாக இருக்கும். கிராம சுபிட்சத்திற்கு, கிராம சமுதாயம் முழுவதும்—அதாவது, கிராமங்களில் வாழ்கின்ற குடும்பங்கள் எல்லாம்—ஒற்றுமையாகவும் செழிப்பாகவும் இருப்பதற்கு, வழி ஏற்பட வேண்டும். பஞ்சாயத்து ஆட்சி, இந்த லட்சியத்தை மனத்தில் கொண்டு, ஒற்றுமையோடும், திறமையோடும் பொறுப்பேற்று வேலை செய்ய வேண்டியது அவசியம். இந்த லட்சியத்தை நிறைவேற்றும் பணியில், கிராம அதிகாரிகள், தாங்கள் பெற்றுள்ள அனுபவத்தை, நல்ல முறையில் பயன் படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்றவேண்டும்

எனவே, பஞ்சாயத்துத் தலைவர்களும், கிராம அதிகாரிகளும், ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டும் மனப்பான்மையை விட்டொழிக்க வேண்டும். கிராம நலனுக்காகப் பாடுபடும் சக ஊழியர்கள் என்ற முறையில், ஒற்றுமையோடும் உள்ளன்போடும் அவர்கள் ஒன்று கலந்து, பொறுப்புணர்ச்சியுடன் கடமை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஒற்றுமை உணர்ச்சி, கொஞ்சம் கொஞ்சமாகப் பரவி வருவதுகண்டு சந்தோஷமடைகிறேன். ஆயினும், ஒரு சில இடங்களில் பழைய சந்தேகங்களும், மனக்கசப்புகளும் இல்லாமலில்லை. காலப்போக்கில், இவையெல்லாம் நீங்குவதற்கான முறையில், பொதுஜனத் தலைவர்களும், அரசாங்க அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறேன்.

சென்னையில் நடைபெறும் பொருட்காட்சிக்குப் பல்வேறு மாவட்டங்களிலிருந்து நூற்றுக்கணக்கான பஞ்சாயத்துத் தலைவர்களை அழைத்து வந்து, பஞ்சாயத்து ஆட்சியின் விவரங்களை அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. நமது ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாக, நம் நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளை நேரில் கண்டறியவும், இதன் மூலம் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. பெரம்பூரிலுள்ள ரயில் பெட்டிகள் கட்டும் தொழிற்சாலை, கிண்டியிலுள்ள தொழிற்பேட்டை, மோட்டார் உற்பத்திச்சாலை, சைக்கிள் உற்பத்திச்சாலை முதலியவற்றை நேரில் கண்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்களுடைய கிராமங்களுக்குச் சென்றதும் தக்க வகையில் திட்டமிட்டு முன்னேறும் எண்ணத்தை உறுதியாக மேற்கொள்ளுவார்களாக. சிறப்பாக, உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கும் கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்கும், கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கும் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

"முயற்சி திருவினை ஆக்கும்"...

R.P.

(புதிய பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, நமது கிராமங்களிலே ஒரு புத்துணர்வும், விழிப்புணர்ச்சியும் மலர்ந்துள்ளன. ஊரை உயர்த்தும் திருப்பணியிலே, ஏராளமான கிராம மக்கள் சேவை மனப்பான்மையுடன் கலந்துகொள்கின்றனர். கிராமிய நல்வாழ்வே தேசிய நல் வாழ்வு என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் புதுப் பொலிவுடனும் புது வலிவுடனும் செயலாற்றுகின்றன.

மதுரை மாவட்டத்தில் கல்லுப்பட்டி வட்டாரத்தில் உள்ள காரைக்கேணி என்ற கிராமத்தில் கிராம மக்கள் கூட்டாக நின்று ஆற்றியுள்ள பணிகளை விவரிக்கிறது இக்கட்டுரை. "கிராம நலம்" உதவி ஆசிரியர் திரு. வ. சம்பந்தம் அவர்கள் இந்தக் கிராமத்திற்கு நேரில் சென்று, கிராம மக்களைச் சந்தித்து அவர்களுடன் அளவளாவி அறிந்து கொண்ட செய்திகளை இக்கட்டுரையில் காணலாம். இதைப் போன்ற சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள் தமிழ் நாட்டில் இன்னும் எத்தனையோ உண்டு. அவற்றின் விவரங்களை எல்லோரும் அறிந்து பயனடையும் வகையில் சுவைபட எழுதியனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். இத்தகைய கட்டுரைகள் "கிராம நலத்தில்" தொடர்ந்து வெளிவரும்.

—ஆசிரியர்.]

கூட்டுப் பணியின் கலங்கரை விளக்கம் "காரைக்கேணி" கிராமம்

கிராம அபிவிருத்தி வேலைகளில், கலங்கரை விளக்காகத் திகழ்கிறது, காரைக்கேணி கிராமம். மதுரை மாவட்டத்தில் கல்லுப்பட்டிக்கு 1½ மைலில் அமைந்துள்ளது, இக்கிராமம். சேவை மனப்பான்மையில் ஊறித் திளைத்துள்ள மதுரை மாவட்ட மக்களின் சீரிய பண்புக்கும், தளராத உழைப்புக்கும், கூட்டு முயற்சிக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது இந்தச் சிறு கிராமம். கிராமம் சிறியதானாலும், இதனுடைய கீர்த்தி பெரிது; தமிழ்நாட்டு கிராம வாழ்க்கையின் உண்மையான அம்சங்கள் அத்தனையும் தன்னகத்தே கொண்டு, சீரும் சிறப்புடனும் திகழ்கிறது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற லட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு, ஊருக்குச் செய்யும் நல் வாழ்வுத் திருப்பணியிலே இந்தக் கிராமத்து மக்கள் அத்தனைபேரும் முன்னோடிகளாக விளங்குகிறார்கள். தொண்டுள்ளம் படைத்த ஏராளமான இளைஞர்கள், ஊரை உயர்த்தும் திருப்பணியிலே தங்களைத் தாங்களே ஐக்கியப்படுத்திக் கொண்டுள்ளார்கள். தன்னிறைவு பெற்ற, பிறர் கையை எதிர்பாராத, பலம் பொருந்திய ஒரு லட்சிய கிராமமாக, தங்களுடைய கிராமத்தை மாற்றியமைக்கவேண்டுமென்று, தணியாத ஆர்வம் கொண்டு, சலியாமல் உழைக்கிறார்கள் இக்கிராம மக்கள். இந்த ஊர்ப் பஞ்சாயத்து, மிகவும் பலம் பொருந்தியது. கிராமத்தின் பொது அபிவிருத்தி, கிராமத்தின் பொதுக் காரியங்கள்தான் முதலில் நிற்கின்றன. **ஒற்றுமை உணர்வோடு, ஊக்கத்துடன் பாடுபட்டால் எந்தக் காரியத்தையும் செய்துவிடலாம் என்ற நம்பிக்கை இந்தக் கிராம மக்களிடம் வேரூன்றி இருக்கிறது.** ஊர் தான் பெரிது, தனி நபர் பெரிது அல்ல. எவ்வளவு பெரிய மனிதரானாலும் சரிதான், ஊருக்குப் பணிந்துதான் போகவேண்டும். ஊரின் முடிவுக்கு எல்லோரும் கட்டுப்பட்டுத்தான் வேண்டும். இந்த மகத்தான உண்மை காரைக்கேணி கிராமத்தில் எடுத்துச் செயலாற்றப்படும் காரியங்களின் எல்லா அம்சங்களிலும் பொதிந்து கிடப்பதைக் காணலாம்.

மகத்தான பணிகள்

சின்னஞ்சிறு ஊர், காரைக்கேணி. ஜனத்தொகை 1,020 தான். ஆனால் செய்துள்ள பணிகளோ மகத்தானவை. எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அரசாங்க உதவி கொண்டும், அரசாங்க உதவி இல்லாமலும், எவ்வளவோ பெரிய காரியங்களை எல்லாம் இந்தச் சின்னஞ் சிறு ஊர் நிறைவேற்றியுள்ளது. ஊரின் அருகாமையில் உள்ள ஏரிக் கண்மாயில் கரு வேல மரங்களை நட்டு வளர்த்து அதனால் மட்டும் போன தடவை 21 ஆயிரம் ரூபாய்க்கு வருமானம் கிராமத்திற்கு கிடைத்திருக்கிறது! குளம் இல்லாமல் கிடந்த கிராமத்திலே, இன்று அழகான குளம் இருக்கிறது! நாலு பக்கமும்

கான்கிரீட்டால் கரை கட்டி, மிக அழகான குளம் ஒன்றைக் கட்டி முடித்திருக்கிறார்கள்! இதற்கு 10,000 ரூபா செலவாகியது! குளத்தைச் சுற்றி தென்னங் கன்றுகள் ஏராளமாகப் போடப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு ஆண்டுகள் சென்றால், அந்த அழகான குளத் தைச் சுற்றி அருமையான பூங்கா ஒன்றே அமைந்து விடும் போலிருக்கிறது! குளத்திற்காகச் செலவிட்ட ரூ. 10,000-ம் கிராம மக்களுடையது. தாங்களே பயிரிட்டு வளர்த்த கருவேல மரங்களை ஏலம் விட்டதில் கிடைத்த பணத்தி லிருந்து இதற்காகச் செலவு செய்திருக்கிறார்கள்.

விவசாயத் துறையிலே சாதனைகள்

விவசாயத் துறையிலே காரைக்கேணி கிராமம் பெரும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. இந்தக் கிராமத்தில் விவசாயம் செய்யப்படுகிற நிலம் நஞ்சை 230.36 ஏக்கர் களும், புஞ்சை 1480 ஏக்கர்களும், தோட்ட நிலம் 14.78 ஏக்கர்களும் ஆகும். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் னால் விவசாயத்தில் அக்கறையே கொள்ளாத மக்களாய் இருந்தார்கள் இந்தக் கிராம மக்கள். ஏனென்றால் நிலங்களில் பெருவாரியானவை இக்கிராம மக்களுக்குச் சொந்தமாக இல்லாமல் இருந்தன. வெளியூர்காரர்களுக்கு சொந்தமாக இருந்தன. ஆனால் மெள்ள மெள்ளச் கிராமத்தில் ஏற்பட்ட புத்துணர்வும், விழிப்புணர்ச்சியும் கிராம மக்களை விவசாயத்தில் அக்கறை கொள்ளச் செய்தன. முழு மூச்சுடன் இந்தத் துறையில் இறங்கினர். காலம் செல்லச் செல்ல, நிலங்கள் ஊர் மக்களுக்குச் சொந்தமாயின. உழைப்பு பலன் தரத் தொடங்கியது. இன்று ஊரில் உள்ள நிலங்களில் பெரிய அளவில் ஊருக்குச் சொந்தமாகிவிட்டன. இந்த ஊரில் மொத்தம் இப்பொழுது 206 குடும்பங்கள் உள்ளன. அநேகமாக இப்பொழுது எல்லோருக்கும் நிலம் சொந்த மாக இருக்கிறது. நல்ல உழைப்புத் திறன் படைத்த மக்கள் : அருமையான முறையிலே ஆக்க வேலையிலே அவர்களை இயக்குவிக்கும் ஊர்ப் பஞ்சாயத்து : இரண்டும் சேர்ந்து காரைக்கேணியை இலட்சியக்கேணியாக மாற்றி யமைத்துவிட்டது எனலாம். வட்டாரப் பணியாளர்களின் சீரிய ஒத்துழைப்பும் காரைக்கேணி கிராமத்திற்கு தட்டாமல் கிடைத்து வந்தது. கிடைத்துக்கொண்டும் இருக்கிறது. கிராம மக்களின் ஊக்கத்தையும், ஒற்றுமை உணர்ச்சி, ஆக்கத்திறனையும் அரசாங்கம் புரிந்துகொண்டு, அக்கிராம மக்களுக்கு வேண்டிய உதவியைச் செய்கின்றனர். வேளா ண்மைத் துறையில் காரைக்கேணி கிராமம் தன்னிறைவு பெற்று விட்டது. கிராமத்தைச் சுற்றி மரங்களை ஏராள மாக நட்டு உள்ளனர். இவை பசுந்தழை உரமாகப் பயன் படுகிறது. நல்ல தழை அளிக்கும் வாதநாராயண மரங்கள் 1,000 மரங்களுக்கு மேல் நட்டு உள்ளார்கள். அத்தனை மரங்களும் கண்போல் பாதுகாக்கப்படுகின்றன. ஊரில் உள்ள மரங்களில் யாரும் கையை வைக்கமுடியாது. மீறி நடந்தால், கடுமையான அபராதம் விதிக்கப்படும். சுமார் 580 ஏக்கரா புஞ்சை நிலங்களில் பருத்தி பயிரிடப் படுகிறது. 42 கலவை எருக் குழிகள் வெட்டப்பட்டுள்ளன. கிராமத்தில் 22 கிணறுகள் வேளாண்மைக்கு பயன் படும் வகையில் உள்ளன. ரசாயன உரத்தை ஊர்க் கூட்டுறவு ஸ்தாபனம் வாங்கி வழங்குகிறது. புதிய முறைகளைக் கையாண்டு, மக்கள் வேளாண்மைத் துறையில் தன்னி றைவு நிலையை அடைந்துள்ளனர்.

கால்நடை அபிவிருத்தியிலும் காரைக்கேணி கிராமம் சீரிய நிலையை அடைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, மொத்தம் 1,302. உயரிய வகையைச் சார்ந்த கோழிகள் இந்தக் கிராமத் திற்கு அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டன. சமீபத்தில் இக்கிராம மக்கள் அரசாங்கம் அளித்த கடன் உதவிப் பணத்திலிருந்து காங்கேயம் கன்றுக் குட்டிகளை வாங்கி யுள்ளனர். அரை விலையில் ஒரு காங்கேயம் பொலிக் காளை அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் மற்றக் கிராமங்களுக்கும் காங்கேயம் காளைகளை உற்பத்திச் செய்து இக்கிராமம் அளிக்கின்ற நிலையை அடந்துவிடும்.

"சுத்தம் சோறு போடும்"

சுகாதாரம், கிராமத் துப்பரவு வேலைகளில் இக்கிராமம் முன்னணியில் நிற்கிறது. வட்டார வளர்ச்சித் துறை யின் உதவியுடன் இக்கிராம மக்கள் 14 ஆயிரம் அடிக்கு கிராமத்தில் சுற்றி சிமிட்டியால் சாக்கடைத் தண்ணீர் தெருவில் ஓடாமல் இருக்க வடிகால்கள் கட்டியுள்ளனர். இதனால் சாக்கடைத் தண்ணீர் தெருக்களில் ஓடி ஆபா சப் படுத்துவதில்லை. அத்தனைச் சாக்கடைத் தண்ணீரும் சென்றுவிழ இரு குழிகள் (Disposal Pits) சிமிட்டி யால் ஊருக்கு ஒதுப்புறத்தில் கட்டியுள்ளனர். சாக்கடை குழிகளில் தேக்கப்பட்டு அப்படியே அவை உரமாகி விடு கிறது. இதையும் வருடா வருடம் பஞ்சாயத்து ஏலத் திற்கு விட்டு விடுகிறது. இந்த ஊரில் எதுவுமே வீணாகி விடுவதில்லை. எல்லாவற்றையும் காசாக மாற்றி விடு கிறார்கள். கிராமத் தெருக்களில் மரங்களிலிருந்து விழும் இலைகளையெல்லாம் அப்படியே போட்டுவிடாமல், கூட்டி சேகரித்து உரமாக்கி விடுகிறார்கள். ஊர்த் தெருக்கள் குப்பை, கூளம் இல்லாமல் சுத்தமாக இருக்கின்றன. அடுப்பெரிக்க பருத்திமார் பெருவாரியான முறையில் உப யோகப் படுத்துவதினால், எரு மட்டையை அடுப்பெரிக்க உபயோகப்படுத்துவதில்லை, ஊரில் கிடைக்கும் சாணம் அத்தனையும் கவனத்துடன் சேகரிக்கப்பட்டு உரமாகப் பயன் பட உபயோகப்படுத்தப் படுகிறது. ஊரில் 5 குடி தண் ணீர் கிணறுகள் உள்ளன. ஒரு கிணறு மிகப் பெரியது. ஊருக்கு குடித் தண்ணீர் இக்கிணறு அளிக்கும் என்று நிர்ணயிக்கப்பட்டு, இக்கிணற்றின் அருகாமையில் ஒரு தண்ணீர் சேகரித்து வைக்கும் பெரிய டாங்க் ஒன்றை கிராம மக்கள் இப்பொழுது கட்டிக் கொண்டிருக்கின்றனர். இந்த வேலை அநேகமாக முடிவடைந்துவிட்டது. இதற்கு சுமார் 12,000 ரூபாய் செலவாகிறதாம்! ஊரின் குடி

தண்ணீர் பிரச்னை மிகச்சுலபமாகத் தீர்க்கப்பட்டு விடுகிறது. இந்த டாங்கிலிருந்து பெரிய குழாய் எடுத்து ஊருக்கு கேந்திரமான இடத்தில் குழாய் மூலம் தண்ணீர் கிடைக்க வசதி செய்யப் போகிறார்களாம். நான்கு கிராமியமுறைக் நக்கூஸ்கள் ஊரில் கட்டப்ப்பட்டுள்ளன. ஊரின் பொதுச் சுகாதாரம் மிகுந்த சீரிய முறையில் அமைந்துள்ளது. காரைக்கேணி கிராமத்தில் வைத்திய ஆஸ்பத்திரி இல்லை. அருகாமையில் $1\frac{1}{2}$ மைலில் உள்ள கல்லுப்பட்டிக்குச் சென்றுதான் வரவேண்டும்! ஆனால் மக்கள் இதை அவ்வளவு அதிகமாகப் பொருட்படுத்தக்காணோம்.

இந்தக் கிராமத்தில் ஆரம்ப ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடம் ஒன்றுள்ளது. 112 குழந்தைகள் படிக்கிறார்கள். இதில் ஹரிஜன மாணவர்களும் உண்டு. பள்ளிக்குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு அளிக்கப்படுகிறது. இதற்கான ஈட்டுமான்யம் அளிக்கவேண்டி 10 எக்கர் நிலத்தை பஞ்சாயத்து பள்ளிக்கூடத்திற்கு ஒதுக்கியுள்ளது.

ஹரிஜன காலனி ஒன்று கட்டியுள்ளார்கள். வீடுகள் கீழே சிமிட்டியில் கட்டி மேலே கள்ளிக்கோட்டை ஓடு போடப்பட்டுள்ளது. சிறு சிறு வீடுகளாக உள்ளன. காலனியை அங்குள்ள மக்கள் சுத்தமாக வைத்துக் கொள்ளும்படி ஊர்ப்பஞ்சாயத்து பார்த்துக்கொள்கிறது. நான் அங்கே பார்த்த இரண்டு வீடுகளில் ஒரு வீட்டின் உள் அமைப்பு மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. சுவர் எல்லாம் சுத்தமாக வெள்ளையடிக்கப்பட்டு இருந்தன. சுவர்களில் தேசத்தலைவர்களின் படங்கள் மாட்டியிருந்தன. வீடு சுத்தமாக கவர்ச்சிகரமாக இருந்தது. அந்த வீட்டில் இருப்பவர் அருகில் உள்ள கல்லுப்பட்டி சாந்திநிகேதன் ஆசிரமத்தில் தோல் கருவிகள் செய்யும் துறையில் பணியாற்றுபவர் என்று பின்னால் சொன்னார்கள். வீடு சுத்தமாக இருப்பதின் காரணம் எனக்குப் புரிந்து விட்டது. எல்லாம் சூழ்நிலை கற்றுக்கொடுக்கும் பாடம்தானே! அப்படியே காலனியில் உள்ள மற்ற வீடுகளும் சுத்தமாக இருக்க வேண்டுமென்று விரும்பினேன். ஊரில் ஒரு மைல் நீளத்திற்கு பஞ்சாயத்து சாலை போட்டிருக்கிறது. பல்வேறு இடங்களில் ஆறு சிறு பாலங்களைக் கட்டியுள்ளார்கள்.

ஊரில் அநேகமாக எல்லோருக்குமே நூல் நூற்கத் தெரிகிறது. 78 சர்க்கா கிராமத்தில் உள்ளன. கிராம மக்களில் 50 பேர் முழுநேர நூல் நூற்பவர்களாக இருக்கிறார்கள். எண்ணெய் ஆட்டுதல், கைக்குத்தல் அரிசி ஆகியவை மெள்ள மெள்ள கிராம மக்களிடையே பரவி வருகின்றன. இந்த வேலைகளை வெகு சீக்கிரத்தில் ஊரில் உள்ள பல நோக்கு கூட்டுறவு ஸ்தாபனம் எடுத்து நடத்த இருக்கிறது.

“ மகிமைப் பணம் ரூபாய்க்கு $\frac{1}{2}$ அணா ”

காரைக்கேணி கிராமம், பல வகைகளில் மற்ற கிராமங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது எனலாம். இந்த ஊரிலிருந்து வெளியில் விற்பனைக்கு போகும் எல்லாப் பொருள்களும் முன்கூட்டியே பஞ்சாயத்தால் மதிப்பிடப்படுகின்றன. அப்படி விற்பனைக்கு செல்கின்ற பொருள்கள் மீது ரூபாய்க்கு $\frac{1}{2}$ அணா வீதம் “**மகிமைப்பணம்**” என்று வாங்கப்படுகிறது. கிராமமக்கள் கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட எந்தப் பொருளை விற்பனை செய்தாலும் ரூபாய்க்கு $\frac{1}{2}$ அணா என்று மகிமைப் பணம் கொடுத்துவிட வேண்டும். ஒரு விவசாயி 10 ரூபாய்க்கு நெல் விற்பனை செய்கிறார் என்றால் 5 அணா கிராமத்திற்கு “மகிமைப் பணமாகக் ” கொடுத்துவிடவேண்டும். இப்படி வசூலிக்கப்படும் பணத்திற்கு ரசீது கொடுக்கப்பட்டுவிகிறது. நூறு ரூபாய்க்குமேல் வசூல் செய்யப்பட்டு விட்டால், அந்தப் பணத்தை அதற்கான உண்டியில் போட்டுவிடுகிறார்கள். ஊர்க்காரியத்திற்காக இந்தப் பணம் வசூலிக்கப்படுகிறது. இந்த உண்டிப்பெட்டிக்கு ஊரில் பொறுப்பான ஏழு பேரிடம் சாவிகள் உள்ளன. இந்த ஏழு பேரில் ஹரிஜன் ஒருவரும் உள்ளார். இவர்களில் பெண் ஒருவரையும் சேர்த்துக்கொள்ளலாம். தற்சமயம் பெண் உறுப்பினர் இல்லை எனத்தெரிகிறது. இந்த முறையில் ஆண்டொன்றுக்கு சுமார் 2,000 ரூபாய் கிராமத்திற்கு வருமானம் வருகிறது. இப்படி வசூல் செய்யப்படும் பணத்தைக் கொண்டு ஊர்க்காரியங்கள் செய்யப்படுகின்றன. எவ்வளவு வருமானம் வந்தது, எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்பதையெல்லாம் ஊரார்கூடி முடிவுசெய்து கொள்கிறார்கள். எல்லாவற்றிலும் ஊர் கூடி எடுக்கும் முடிவுதான் இறுதியானது. ஆகவே, ஊரில் நல்ல காரியங்கள் பல கூட்டுமனப்பான்மையுடன் நடக்க இந்த முறை வழிவகை செய்துள்ளது.

மரம் நட்டு பல்லாயிரம் ரூபாய் வருமானம் !

ஊரைச் சுற்றியுள்ள ஏரிக்கண்மாயில் ஏராளமான கருவேல மரங்களை கிராம மக்கள் நட்டுள்ளனர். தண்ணீரிலேயே வளரும் மரம் கருவேல மரம். ஆகவே நன்றாக வளர்கிறது. அரசாங்கத்திற்கு மனுச்செய்து இம்மரம் பயிரிடுவதை ஊர் நன்மைக்காக உரிமையாகப் பெற்று அவைகளைவெட்டி விற்று ரூபாய் இருபத்தோரு ஆயிரத்துக்குமேல் பொருளீட்டியுள்ளனர்: இப்பொழுது மீண்டும் வேலமரங்களைப் பயிரிட்டுள்ளனர். இந்த தடவை மரங்கள் செழித்து அடர்த்தியாக வளர்ந்திருக்கின்றன. பருவ மழை இதற்கு காரணம். இன்னும் ஓரிரு ஆண்டுகளில் இதன் மூலம் சுமார் முப்பது ஆயிரம் ரூபாய்க்கு கிராமத்திற்கு வருமானம் வரும் என்று பூரிப்புடனும் பெருமையுடனும் சொல்கிறார்கள் கிராமமக்கள். இந்தக் கிராமத்தில் அடுப்பெரிக்க விறகுக்கு என்று ஒரு பைசா கூட யாரும் செலவழிப்பதில்லையாம்! இதன்மூலம் கிடைத்த வருமானத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாயில் ஒரு அருமையான குளத்தை வெட்டியுள்ளனர் கிராம மக்கள். இந்தக் குளத்தில் மீன்களை வளர்க்கிறார்கள். இப்படி வளர்க்கப்படும் மீன்களை விற்பதினால் ஆண்டொன்றுக்கு சுமார் முன்னூறு ரூபாய் வரைக்கும் வருமானம் கிராமத்திற்குக் கிடைக்கிறது. எதுவுமே வீணாக்கப்படுவதில்லை. எல்லாம்

பொருளாக்கப்படுகிறது. எல்லாப் பொருள்களும் மதிப்புடையனவே என்ற உண்மையை இந்தக் கிராம மக்கள் உணர்ந்துள்ளதுபோல் எல்லோரும் உணர்ந்துகொண்டால், அதனால் விளையும் பயனை எண்ணிப்பார்க்கவே முடியவில்லை.

சண்டை, சச்சரவுகள் இல்லை

பொருள் ஈட்டுவது மட்டுமல்லாமல், பொருள் எந்த வகையிலும் விரயமாக்காமல் பார்த்துக்கொள்கிறது ஊராட்சி மன்றம். எந்த சச்சரவுகள், சிறு பூசல்கள் இந்தக் கிராமத்தில் ஏற்பட்டாலும் அதைக் கிராம மக்களே ஒன்று கூடி சுமுகமாகத் தீர்த்துக்கொண்டுவிடுகிறார்கள். கிராமத்தைச் சேர்ந்த எந்த வழக்கிலும் கிராம மக்களே முடிவு செய்து விடுகிறார்கள். இதனால் கிராம மக்களின் நேரம், பணம் அத்தனையும் பாதுகாக்கப்படுகிறது. கிராமத்திற்கு இது பயன்படுத்தப்படுகிறது. சுற்றுப்புறங்களில் உள்ள வழக்கு மன்றங்களுக்குச் சென்றுபணத்தை விரயம் செய்துவிட்டு, நேரத்தைப் பாழாக்கிக்கொண்டு ஓட்டாண்டிகளாக மாறுகின்ற மற்றகிராமமக்கள் காரைக்கேணி கிராமமக்களிடமிருந்து இந்தப் பாடத்தை தெரிந்து கொண்டால், இந்த நாட்டில் பரவிக்கிடக்கும் லட்சக்கணக்கான கிராம மக்களின் நேரமும், பணமும் தங்கள் தங்கள் கிராமத்தை விட்டு போகாமல் அந்தக் கிராமத்திற்கே பயன்பட வழிசெய்ததாகும். ஒரு வழக்கு என்று வந்தால், உடனே ஊர் கூடுகிறது. விசாரணை செய்கிறார்கள். குற்றம் செய்தவருக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. கிராமத்தில் யாராக இருந்தாலும் ஊரின் சொல்லுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அடங்கித்தான் போகவேண்டும். குற்றம் செய்தவர்கள் தன் குற்றத்தை உணர்ந்து ஊர் மக்களின் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டால் அபராதம் குறைக்கப்படுகிறது. ஊர் பணம், நேரம் வெளியூர்களில் சென்று விரயம் ஆவதில்லை. மக்கள் திருந்துகிறார்கள், வழக்குகள், சச்சரவுகள் குறைகின்றன. இத்துடன் கிராமத்திற்கு இதனால் வருமானமும் கிடைக்கிறது. காரைக்கேணி கிராமத்தில் வழக்குகள் சச்சரவுகள் அதிகமாகக் குறைந்துவிட்டனவாம். "போலீசுக்கு ஒரு கேஸ்கூட காரைக்கேணி கிராமத்திலிருந்து செல்லாமல் பார்த்துக்கொள்வதே எங்கள் லட்சியம்" என்று ஒரு கிராமவாசி என்னிடம் கூறினார்.

சமூகக் கல்வி

கிராம மக்களிடையே சமூகக் கல்வி பரப்பும் தொண்டு சிறப்பான முறையில் நடைபெற்றுவருகிறது. இதற்கென்று ஒரு கமிட்டி உள்ளது. இதில் 20 பேர் உள்ளனர் நூல் நிலையம் ஒன்று கிராம மக்களால் நடத்தப்படுகிறது. இதற்கு "திருவள்ளுவர் நூல் நிலையம்"என்று பெயர். எல்லா முக்கியமான பத்திரிகைகளும் இங்கு வருகின்றன. கிராம மக்கள் படிப்பில் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர். "கிராம நலம்" பத்திரிகை இங்கு ஆவலுடன் படிக்கப்படுவதை நான் கண்டேன். இந்த நூல் நிலையம் ஊருக்கு மத்தியில் உள்ள அழகான மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கே கிராம மக்கள் தினந்தோறும் கூடுகிறார்கள். ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் இங்கே கலந்து பேசுகிறார்கள். ஒரு நிமிடம்கூட வீணாக்கப்படுவதில்லை. எல்லா மக்களும் சுறுசுறுப்புடன் செயலாற்றுகின்றனர். கிராமப்பணி தங்களுடைய சொந்தப் பணி என்று பெருநோக்குடன் எல்லோரும் முன்வந்து ஒத்துழைக்கின்றனர். தமிழ்நாட்டின் கிராமங்களின் விருந்தோம்பல் பண்பை இந்தக் கிராம மக்கள் அனைவரிடமே காணலாம். வருகின்றவர்களை கிராம மக்கள் உள்ளன்புடன் வரவேற்று, அவர்களை நன்கு உபசரித்து தங்கள் கிராமத்தைப் பற்றி அவர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறுவதிலே பெருமையும் பூரிப்பும் அடைகின்றனர் இந்தக் கிராம மக்கள்.

பலநோக்கு கூட்டுறவு ஸ்தாபனம்

காரைக்கேணி கிராமத்தில் ஒரு பலநோக்கு கூட்டுறவு ஸ்தாபனம் கிராம மக்களால் நடத்தப்பெறுகிறது. அதற்கென்று பண்டங்கள் வைக்கும் கட்டிடம் ஒன்று இருக்கிறது. ஒரு மாதத்திற்கு 6 ந.பைசா என்ற விகிதத்தில் ஒரு குறைந்த கட்டணத்தைச் செலுத்தி தங்களுடைய பண்டங்களை இங்கே கிராமவாசிகள் வைத்துக்கொள்ளலாம். அதனால் பண்டங்கள் கெடாமல் இருக்கவும், பண்டங்கள் வைத்துப் பாதுகாக்க இடமில்லாத காரணத்தால், உடனடியாக குறைந்த விலைக்கு விற்றுவிடக்கூடிய துர்ப்பாக்கிய நிலையும் போக்கடிக்கப்படுகிறது. இந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தார் மாநில கதர் போர்டுக்கு இருபது ஆயிரம் ரூபாய்க்கு கடன் உதவி கேட்டுள்ளனர். கிராமத்தில் கைக்குத்தல் அரிசி தொழிலைப் பரப்பவும், எண்ணெய் ஆட்டுதலை விஸ்தரிக்கவும் இந்தத் தொகை வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் ஒரு சிக்கன சேமிப்பு திட்டத்தையும் இந்தக் கூட்டுறவு ஸ்தாபனம் நடத்துகிறது.

பலம் வாய்ந்த பஞ்சாயத்து மன்றம்

இந்தக் கிராமத்தின் பஞ்சாயத்து மிகவும் பலம் பொருந்தியதாகவும் பொலிவுடனும் வலிவுடனும் திகழ்கிறது. இந்தக் கிராமத்தில் நடைபெறும் ஆக்க வேலைகள் அத்தனையும், கிராமப் பஞ்சாயத்து மூலம்தான் நடைபெறுகின்றன. ஊர்ப்பஞ்சாயத்துக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. கிராம மக்கள் அத்தனைபேரும் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு செயல் புரிகின்றனர். இந்தப் பஞ்சாயத்தின் உறுப்பினர்கள் தேர்தல் இன்றியே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் ஒரு பெண் அங்கத்தினரும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார். ஏரிக்கண்மாய்ப் படுகையில் மரம் நட்டு பயிராக்கும் உரிமையை சர்க்காரிடம் இவர்கள் கேட்டுப்பெற்றுள்ளனர். இதனால் பஞ்சாயத்துக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது.

ஊரை உயர்த்தும் ஒற்றுமையும் உழைப்பும்..

காரைக்கேணி கிராமம் ஒரு லட்சிய கிராமமாக மாறி வருவதற்கு மிக முக்கியமான காரணம் ஊர் மக்களி

(11-ம் பக்கம் பார்க்க)

2. தேசிய இயக்கத்தின் வரலாற்றுச் சுருக்கம்

(சென்ற இதழ் தொடர்ச்சி).

1905–ம் வருஷத்திலிருந்து காங்கிரஸின் போக்கில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இதற்குக் காரணமாயிருந்தது வங்காளப் பிரிவினை. அப்பொழுது இந்தியாவின் கவர்னர்–ஜெனரலாயிருந்த லார்ட் கர்ஸன், வங்க மக்களிடையே நெடுங்காலமாக நிலவி வந்த ஒற்றுமையைக் குலைக்கின்ற முறையில், வங்காள மாகாணத்தை இரண்டு நிர்வாகப் பகுதிகளாகப் பிரித்தான். ராஜ்யாதிகாரம் நம் கையில் இருக்கும் பட்சத்தில் இப்படி நடக்குமா, அந்நியர்கள், தங்கள் மனம் போனபடி ஆளுகை நடத்தத் துணிவார்களா என்று ஆங்கிலம் பயின்றிருந்த முதியோர் சிலரும் இளைஞர் பலரும் முணுமுணுக்கத் தொடங்கினர்கள். இந்த முணுமுணுப்பு, சொற்ப காலத்தில், வங்காளப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட, அதாவது வங்காளப் பிரிவினையை எதிர்க்கின்ற பெருங்கிளர்ச்சியாக இந்தியா முழுவதும் பரவியது. இந்தக் கிளர்ச்சியானது, நமக்குச் சுயராஜ்யம் தேவை என்ற எண்ணத்தை மக்களிடையே வளர்த்துக் கொடுத்தது.

தேசிய இயக்கத்தின் முதல் தந்தை....

சுயராஜ்யம் என்ற சொல்லை முதன் முதலாக உபயோகித்தவர் தாதாபாய் நௌரோஜி என்ற பார்ஸி கனவான். இவர் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஓர் அங்கத்தினராகச் சிறிது காலம் இருந்தார். இவர் 1906-ம் ஆம் வருஷம் கல்கத்தாவில் நடைபெற்ற இருபத்திரண்டாவது காங்கிரஸிற்குத் தலைமை வகித்துப் பேசியபோது, "இந்தியாவின் லட்சியம் சுயாராஜ்யம் அடைவதே" என்று குறிப்பிட்டார். அது முதற்கொண்டு, சுயராஜ்யம் என்ற சொல் சர்வ சாதாரணமாக வழங்கப்படலாயிற்று.

திலகர் பிரவேசம்

வங்காளப் பிரிவினை சம்பந்தமான கிளர்ச்சியில், பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரம் முக்கிய அம்சமாயிருந்தது. இந்தப் பகிஷ்கார இயக்கத்தில் இளைஞர்களே பெரும் பாலோராகப் பங்கு கொண்டார்கள். இவர்கள், இந்த பகிஷ்காரத்தோடு நின்று விடாமல், தீவிரமான சில முறைகளைச் கையாண்டு சுயராஜ்ய லட்சியத்தை அடைய வேண்டுமென்ற கொள்கையுடையவர்களாயிருந்தார்கள். அரசியல் அனுபவம் வாய்ந்த முதியோர் சிலர், இவர்களுக்குத் தலைவர்களாயமைந்தனர். இந்தத் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர், லோகமான்ய பால கங்காதர திலகர். இவர் "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை" என்று முழக்கம் செய்தார். இவரும் இவரைப் பின்பற்றியவர்களும் அமிதவாதிகள் என்று அழைக்கப்பட்டார்கள். தீவிரவாதிகள் என்றும் இவர்களைச் சொல்வதுண்டு.

1907-ஆம் வருஷக் கடைசியில் சூரத் நகரில் வழக்கம் போல் காங்கிரஸ் கூடியது. இதில் தான் மிதவாத–அமிதவாத கோஷ்டிப் பிளவு பகிரங்கமாக வெளிப்பட்டது.

திலகரின் அரசியல் செல்வாக்கு

1907-ஆம் வருஷத்திலிருந்து பொதுவாக, காங்கிரஸில் திலகருடைய அமிதவாதக் கோஷ்டியின் செல்வாக்கு மேலோங்கி வரத் தொடங்கியது. அது மட்டுமல்ல. சமுதாய சீர்திருத்தத்தையும் அரசியல் சீர்திருத்தத்தையும் இணைத்துக்கொண்டு அது காறும் பேசி வந்த காங்கிரஸானது, அரசியலுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்துப் பேசத் தொடங்கியது.

திலகர் கோஷ்டிக்கு, காங்கிரஸில் மட்டுமல்ல, பொதுவாக நாட்டிலும், செல்வாக்கு வளர்ந்து வந்தது. தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் இந்தச் செல்வாக்கை உரமிட்டு வளர்த்தவர்கள், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சக்கரை செட்டியார், சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய சிவம், சுரேந்திரநாத் ஆர்யா முதலியோர். அரவிந்த கோஷ், விபின சந்திர பாலர், லஜபதி ராய் முதலியோரும் திலகர் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மீது அரசாங்கம் பலவிதமான அடக்குமுறைகளைப் பிரயோகித்தது. திலகர் முதலானோர், சிறை வாசத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்கள்.

திலகருடைய அமிதவாதக் கோஷ்டியைத் தவிர, பலாத்கார முறைகளைக் கையாண்டேனும் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறவேண்டும், தேசம் சுதந்திரமடையவேண்டும் என்ற கொள்கைகளைக் கொண்ட ஒரு கோஷ்டியும் நாட்டில் இருந்து வந்தது. இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் பொதுவாக, பலாத்கார வாதிகள் அல்லது புரட்சிவாதிகள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்களில் சிலருடைய செயல் காரணமாக, ஒரு சில பிரிட்டிஷார், துப்பாக்கிக்கும், வெடிகுண்டுக்கும் பலியானார்கள். இவர்கள் இங்ஙனம் பலியானதைக் கண்டு அரசாங்கம் மருண்டு விட்டது. இளைஞர்களுடைய

தேசபக்தியே இதற்குக் காரணம் என்று தெரிந்து, அதற்கான சமாதான முறைகளைக் கையாளாமல், கடுமை யான அடக்குமுறைகளைக் கையாண்டு மக்களிடையே பீதியை உண்டு பண்ணி விட்டது. இந்தப் புரட்சிவாதி களில் முக்கியமானவர்கள் என்று கருதப்படக் கூடியவர் கள் விநயக தாமோதர சாவர்க்கார், வ.வே.சு. ஐயர், முதலியோர். வ. வே. சு. ஐயர் பிற்காலத்தில் சிறந்த காந்தியவாதியாக மாறி விட்டார்.

காங்கிரஸில் வேறு வேறு கோஷ்டியினராகப் பிரிந் திருந்த மிதவாதிகளையும் அமிதவாதிகளையும் ஒற்றுமைப் படுத்திவைக்க அன்னிபெசண்டம்மையார் வெகுவாக முயற்சி செய்தார். இதில் ஓரளவு வெற்றியும் கண்டார். 1916-ஆம் வருஷம் லட்சுமணபுரியில் நடைபெற்ற காங் கிரஸில், மிதவாதிகளும் அமிதவாதிகளும் ஒன்று கூடினர்.

அன்னி பெசெண்ட்

இந்திய தேசீய இயக்க வரலாற்றில் பெசண்டம்மை யாருக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. இவர் அந்நிய நாட்டு ஸ்திரீயேயானாலும், இந்தியாவின் பழமையான நாகரிகத்திலும் கலாசார பரம்பரையிலும் பெரிதும் ஈடு பாடு கொண்டிருந்தவர். ஆங்கிலம் கற்ற இந்திய இளை ஞர்கள், அவர்களுடைய கலாசாரங்களைக் கைவிடக் கூடா தென்பதற்காக அந்தத் துறையில் உழைத்தார். தவிர, இந்திய அரசியலில் பெரும் பங்கு கொண்டார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட சுய ஆட்சியை இந்தியா அடைய வேண்டுமென்ற நோக்கங் கொண்ட "ஹோம் ரூல் லீக்" அதாவது "சுயாட்சி சங்கம்" என்ற ஒரு ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தார். இது விஷயத்தில் திலகருடைய ஒத் துழைப்பும் இவருக்குக் கிடைத்தது. அரசியல் கிளர்ச்சியை ஒழுங்காக நடத்துவதற்கு வழி காட்டிய பெருமையும், நாட்டின் ஆக்க சக்திகளை ஒன்றுபடுத்திய பெருமையும் இவருக்கு—பெசண்டம்மையாருக்கு—உண்டு. இவருடைய முயற்சியாலும் பிரசாரத் திறமையினாலும் நாடெங்கெனும் ஹோம் ரூல் கிளர்ச்சி தீவிரமாக நடை பெற்றது. இதைக் கண்டு ஆத்திரமடைந்த அப்பொழுதைய சென்னை அரசாங் கம், இவரையும், இவருடைய சகாக்களான அருண்டேல், வாடியா ஆகிய இருவரையும் 1917-ஆம் வருஷம் ஜூன் மாதம் உதகமண்டலத்தில் காவல் கைதிகளாக வைத்துச் சிறிது காலத்திற்குப் பிறகு பெருங்கிளர்ச்சியின் விளைவாக விடுதலை செய்தது. 1916-ஆம் வருஷத்திலிருந்து 1920-ஆம் வருஷம் வரை பெசண்டம்மையாருடைய செல் வாக்கு உச்ச நிலையில் இருந்ததென்று சொல்லவேண்டும். செல்வாக்கடைந்திருந்த நிலையில்தான், இவர் 1917-ஆம் வருஷம் கல்கத்தாவில் நடைபெற்ற முப்பத்திரண்டாவது காங்கிரஸுக்குத் தலைமை வகித்தார். இவரை தமிழ்ப் பேரறிஞராக விளங்கிய திரு. வி. கலியாணசுந்தர முதலி யார் தாம் நடத்தி வந்த "தேச பக்தன்" "நவ சக்தி" பத்திரிகைகளில் அன்னி பெசண்ட் என்றே குறிப்பிட்டு வந்தார்.

1914-ஆம் வருஷம் தொடங்கிய முதல் உலகப் பெரும் போர் 1917-ஆம் வருஷக் கடைசியில் முடியுந் தறுவாய்க்கு வந்தது. இந்தப் போரில், பிரிட்டன் வெற்றி யடை வதற்கு இந்தியா பெரிதும் உதவி செய்தது. இதற்குக் கிடைத்த கைம்மாறு என்ன? இந்தியாவில் புரட்சி இயக் கம் வலுத்து வருவதாக மருண்டு அதை அடக்கி ஒடுக்க இந்தியா அரசாங்கம் 1919-ஆம் வருஷம் ஒரு விபரீத சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. இது ரௌலட் சட்டம் என்ற பெயரால் அழைக்கப் பெற்றது. புரட்சி இயக்கம் சம்பந்தமாக விசாரித்தறிய இந்தியா அரசாங்கம் 1917-ஆம் வருடம் ஸர் சிட்னி ரௌலட் என்பவருடைய தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தது. ரௌலட் என் பவரைத் தலைவராகக் கொண்டிருந்ததால் இந்தக் கமிட்டி ரௌலட் கமிட்டி என்று அழைக்கப்பட்டது. இந்தக் கமிட்டி செய்த சிபார்சுகளின் விளைவாகவே மேற்படி விபரீதச் சட்டம் இயற்றப்பட்டது.

காந்தியடிகள் காலடி எடுத்துவைத்தல்

இந்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட சமயமும் காந்தியடிகள், இந்திய தேசீய இயக்கத்தில் தீவிர பங்கு கொள்ளத் தொடங்கிய சமயமும் ஏறக்குறைய ஒன்று யிருந்தன. இதற்குமுன் இவர்—காந்தியடிகள்—தென் னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரக இயக்கம் நடத்தி ஓரளவு பெயரும் புகழும் பெற்றிருந்தார். இவருடைய நேர்மை யான போக்கு பலரை இவரிடம் ஈடுபடச் செய்திருந்தது. ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய சகலவிதமான தகுதி களும் இவரிடம் அமைந்திருந்தன. இவர், தென்னாப் பிரிக்காவில் சத்தியாக்கிரகம் நடத்தி தாம் அதில் பெற்ற அனுபவத்தை இந்தியாவில் பெரும் அளவில் பயன் படுத்தத் தீர்மானித்தார். ரௌலட் சட்டத்தை எதிர்த்து 1919-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் சத்தியாக்கிரக இயக் கத்தைத் தொடங்கினர். நாடெங்கெனும் இந்த இயக்கத் தின் வேகம் பரவியது.

பஞ்சாப் படுகொலை

இங்ஙனம் பரவி வந்து கொண்டிருந்த நிலையில், பஞ்சாபிலுள்ள அமிருதசரஸ் நகரத்தில் ஜாலியன்வாலா பாக் என்ற ஒரு தோட்டத்தில் 1919-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி ஒரு பொதுக் கூட்டம் நடை பெற்றது. இதன்மீது எவ்வித முன்னறிவிப்புமின்றி, தளபதி "டையர்" என்பவன், துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். சுமார் முந்நூற்றெண்பது பேர் உயிரிழந் தனர். பஞ்சாப் படுகொலை என்று இதனைச் சரித்திராசிரி யர் அழைப்பர்.

இந்தப் படுகொலையினால் அதிர்ச்சி யடைந்திருந்த பஞ் சாப் மாகாண மக்களுக்கு ஆறுதல் அளிக்கின்ற முறையில் 1919-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் அமிருதசரஸ் நகரில் காங்கிரஸ் கூடியது. காந்தியடிகள், ஏற்கனவே ரௌலட் சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம் தொடங்கியிருந்தா ராயினும், இந்த அமிருதசரஸ் காங்கிரஸில்தான், காங்

G.N. 3

கிரஸ் பணியில் நேரடியாகவும் தீவிரமாகவும் பங்கு கொள்ளத் தொடங்கினார். அவரே இதைப்பற்றித் தமது சுய சரிதையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :—

"அமிருதசரஸ் காங்கிரஸ் நடவடிக்கைகளில் நான் கலந்து கொண்டது, காங்கிரஸின் அரசியல் காரியங்களில் என்னுடைய உண்மையான பிரவேசம் என்றே நான் கொள்ள வேண்டும். இதற்கு முந்திய காங்கிரஸ் மகா நாடுகளுக்கு நான் போனதெல்லாம் காங்கிரஸினிடம், எனக்குள்ள பக்தியை ஆண்டுதோறும் புதுப்பித்துக் கொள்ளுவதைப் போன்றதே யன்றி வேறல்ல."

காந்தியடிகள், காங்கிரஸில் தீவிர பங்கு கொள்ளத் தொடங்கிய சொற்பகாலத்திற்குள் தேசத்தின் தீவிரச் சக்திகளை ஒன்று திரட்டுவதில் முனைந்திருந்தவரும் தீவிர வாதிகளின் தலைவராக மதிக்கப்பட்டு வந்தவருமான லோக மான்ய பால கங்காதர திலகர் பம்பாயில் கால மானார். இவர் காலமானது 1920-ஆம் வருஷம் ஜூலை மாதம் 31-ம் தேதி.

ஒத்துழையாமை இயக்கம்

பாஞ்சாலப் படுகொலைக்குப் பரிகாரம் தேடவும், சுய ராஜ்யம் பெறுவதற்கும் 1920-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் முதல் தேதி—அதாவது லோக மான்ய திலகர் காலமான மறுநாள்—காந்தியடிகள் தலைமையில் ஒத் துழையாமை இயக்கம் தொடங்கப் பெற்றது. இந்த இயக் கத்தை காங்கிரஸ் அங்கீகரித்தது. பலர், பட்டம் பதவி களைத் துறந்தனர். ஆங்கிலம் போதித்து வந்த கல்வி நிலையங்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. இங்ஙனமே சட்டசபை களும் நீதி மன்றங்களும் பகிஷ்காரத்திற்குள்ளாயின.

பொதுவாக இந்த ஒத்துழையாமை இயக்கத்தில் அது காறும் மிதவாத மனப்பான்மை கொண்டிருந்தவர்கள், அரசாங்க அதிகாரிகளுடன் கைகுலுக்கிக் கொண்டிருப் பதில் பெருமை கண்டவர்கள், பணம் படைத்தவர்கள், படித்த மேதையர்கள், இங்ஙனம் சமுதாயத்தின் பலதரத் தினரும் ஈடுபட்டார்கள்.

ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்ட காலத்தி லிருந்து, அதாவது 1920-ஆம் வருஷக் கடைசியிலிருந்து காங்கிரஸில் காந்தியடிகளின் செல்வாக்கு மிகுந்திருந்தது. இந்த இயக்கத்தைத் தீவிரமாக நடத்தும் சகல பொறுப் புக்களும் காந்தியடிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. பல துறைத் தலைவர்களும் இவருடைய ஆத்ம சக்திக்குத் தலை வணங்கினர்.

காந்திய சகாப்தம்

ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்ட பிறகு, இந் தியாவின் சுதந்திரப் போராட்டத்தைப்பற்றிய வரலாறும் காந்தியடிகளின் வாழ்க்கையும் இணைந்தே சென்றன. இந்திய மக்களின் எண்ணப் போக்குகளும் ஆசாபாசங் களும் காந்தியடிகள் மூலமாக வெளியாயின. சுருக்க மாக, 1920-ஆம் வருஷக் கடைசியிலிருந்து 1947-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் வரை சுமார் இருபத்தேழு வருஷ காலம் இந்திய தேசீய இயக்கத்தின் காந்திய சகாப்தம் என்று சொல்லலாம்.

1929-ஆம் வருஷம் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸில் இந்தியாவின் லட்சியம் பரிபூரண சுதந்திரம் அடைவதே என்ற தீர்மானம் நிறைவேறியது. 1930-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 26-ஆம் தேதி நாடெங்கெனும்சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டது. இதற்குப் பிறகு 1949-ஆம் வருஷம் முடிய ஒவ்வொரு வருஷமும் ஜனவரி மாதம் 26-ஆம் தேதி சுதந்திர தினமாகக் கொண்டாடப் பட்டு வந்தது. 1950-ஆம் வருஷத்திலிருந்து பிரதி வரு ஷமும் ஜனவரி மாதம் 26-ம் தேதி குடியரசு தின மாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஏனென்றால் அன்று தான்—1950-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 26-ஆம் தேதி—நம்முடைய நாடு குடியரசு நாடாகியது. அதாவது அன்று முதல் மக்களுக்காக மக்களாட்சி நடைபெறத் தொடங்கியது.

பரிபூரண சுதந்திரம் பெறுவதே இந்தியாவின் லட்சியம் என்று 1929-ஆம் வருஷத்து காங்கிரஸ் தீர்மானித்து விட்ட பிறகு காந்தியடிகள், குறிப்பிட்ட சில அநீதி களுக்குப் பரிகாரம் பெறுவதற்காகத் தொடங்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தை வேறொரு போக்கில் திருப்பி விட்டார். அதாவது ஒத்துழையாமை இயக்கமானது சட்ட மறுப்பு இயக்கமாக மாறியது. பிரிட்டிஷ் அரசாங்கம் அமுல் நடத்திவரும் சில நியாயமற்ற சட்டங்களை மறுப்பதே இந்த இயக்கத்தின் நோக்கமாயமைந்தது.

சத்தியத்தையும், அஹிம்சையையும், அடிப்படையாகக் கொண்டு இந்த இயக்கத்தை காந்தியடிகள் நடத்தினர் 1930-ஆம் வருஷம் முற்பகுதியில் உப்புச் சட்டத்தை மீறும் இயக்கம் தொடங்கப்பெற்றது ; பிறகு மது பானக் கடை மறியல், அந்நிய ஜவுளிகள் விற்பனை செய்யும் கடை கள் முன் மறியல் இப்படிச் சிறிது காலம் மறியல் இயக்கம் நடைபெற்றது. இந்த இயக்கங்கள் நடை பெற்ற காலத்தில் அரசாங்கம் கடுமையான அடக்கு முறைகளை கையாண்டதென்பதைப்பற்றி அதிகம் சொல்லத் தேவை யில்லை.

பின்னர் 1942-ம் வருஷம் ஆகஸ்ட்மாதம் காந்தியடி கள் யோசனைப்படி "வெள்ளையனே வெளியேறு" என்ற இயக்கம் நடைபெற்றது. இதையொட்டி, காந்தியடிகள் உட்பட தலைவர் பலர் சிறைவைக்கப்பட்டனர். இதைக் கண்டு மக்களின் ஆத்திரம் பொங்கியது. காந்தியடிகளின் விருப் பத்திற்கு மாறாக பலாத்காரச் செயல்கள் பல நடை பெற்றன. தவிர, ராணுவத்தைச் சேர்ந்த இந்தியப் போர் வீரர்களிடையே பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு விரோதமான எண்ணங்கள் பரவ ஆரம்பித்தன. மற்றும் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் (1939–1945) விளைவாகவும், ஆசி யாவின் தென் கிழக்குப் பகுதிகளின் மீது ஜப்பான்படை யெடுத்து வேகமாக முன்னேறி வந்தன் விளைவாகவும், இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிலைமை சகிக்க முடியாததாகிவிட்டது.

சுதந்திரம் மலர்ந்தது

கடைசியில் 1947-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி பிரிட்டிஷ் ஆட்சி முற்றுப் பெற்றது. நம்முடைய ஆட்சி ஆரம்பித்தது. அதாவது நாமிருக்கும் நாடு நமதா யிற்று. இந்தியர்களாகிய நாம் சுதந்திர மக்களானோம்.

சுதந்திரம் பெற்றுவிட்ட பிறகு, எந்த விதமான ஆட்சி முறையை அமைத்துக் கொள்வது ? பொதுவாக ஜன நாயக முறைதான் காலத்திற்கேற்றதென்றிருந்தாலும் அஃது எந்தவிதமான அமைப்புடன் கூடியதாயிருக்க வேண்டுமென்பதைப் பற்றி ஆராய்ந்து முடிவு செய்ய ஜனப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபை அமைக்கப் பட்டது. இதற்கு அரசியல் நிர்ணய சபை என்று பெயர். சுமார் இரண்டரை வருஷ காலம் இந்தச் சபை கூடி, பல விதமாக ஆராய்ந்து, சர்வ ஜன வாக்குரிமையை அடிப் படையாகக் கொண்ட குடியரசு முறையே ஏற்றதென்று முடிவு செய்து, அதற்கேற்றவாறு பல ஷரத்துக்களைக் கொண்ட அரசியல் சட்டத்தை உருவாக்கியது. 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ஆம் தேதி இந்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த தேதி யிலிருந்து, மேலே சொல்லிக்காட்டியபடி, நம் நாடு குடி யரசு நாடாகியது. நாமெல்லாரும் இந் நாட்டு மன்னர் களானோம்.

மகாத்மாவின் மகத்தான சாதனை

இந்த நிலைமைக்கு நம்மைக் கொண்டு சேர்த்தவர் காந்தியடிகள். லட்சக்கணக்கான தொண்டர்களின் ஒத்து ழைப்பும் தியாகமும் இவருக்கு உதவியாயிருந்தன என் றாலும் இவர்களனைவரையும் ஒன்று படுத்தி வழி நடத்திச் சென்ற பெருமை இவருடையதே. இதை யாரும் மறுக்க முடியாது.

காந்தியடிகளோ அதற்கு முந்தி திலகரோ தோன்றி யிராவிட்டால் இந்திய தேசிய இயக்கம் எந்தப் போக்கில் சென்றிருக்கும் ? இதற்கு ஓர் ஆங்கிலேய அறிஞன் விடையளித்து இருக்கிறான். அது வருமாறு :—

" அரசியல் வாழ்வில் ஒரு தலைவர் முக்கிய ஸ்தானம் பெறுவது, அவர், மற்றவர்களை முன்னுக்குத் தள்ளிக் கொண்டு போகும் சக்தி பெற்றிருப்பதையும், தாம் நடத் தும் கிளர்ச்சியில் புதிய முறைகளைக் காலத்திற் கேற்ற வாறு கையாள்வதையும் பொறுத்திருக்கிறது. இந்த அளவு கோலைக் கொண்டு பார்த்தோமானால், பால கங்கா தர திலகருடைய பெயரும் மகாத்மா காந்தியின் பெயரும் தான் முன்னணிக்கு வந்து நிற்கின்றன. இந்த இரண்டு தலைவர்கள் தோன்றியிராவிட்டால் இந்தியாவில் தேசிய இயக்கம் என்னவோ தோன்றி நடை பெற்றுத்தான் இருக்கும். ஆனால் சீர்திருத்த மனப்பான்மையுடன் கூடிய தாக இருக்கும். இருபதாவது நூற்றாண்டின கடைசி வரை அஃது எந்த விதமான முன்னேற்றத்தையும் அடைந்திராது."

இந்த வாசகத்தை நாம் சிறிது சிந்தித்து பார்க்கிற போது, காந்தியடிகளின் மகத்தான சாதனை நமக்கு ஒரு வாறு புலப்படும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அவர், இந்திய சுதந்திரம் பெறுவதற்குக் காரண புருஷ ராயிருந்ததோடு, அகிம்சை முறையிலும் அன்பு முறை யிலும் உலக மக்கள் அனைவரும் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் ஒரு குடும்பத்தினர் போல எப்படி வாழ முடியும் என்பதற்கும் வழிகாட்டியிருக்கிறார்.

(தொடரும்)

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

டம் நிலவும் ஒற்றுமை உணர்வும் சேவை மனப்பான் மையும்தான். ஊரை உயர்த்தும் திருப்பணியிலே எல்லோரும் ஒற்றுமையுடனும் ஆர்வத்துடனும் கலந்து கொள்கின்றனர். ஆர்வத்துடன் சேவை செய்கிறார்கள் கிராம மக்கள்: இவர்களுக்கு பரிபூரண ஒத்துழைப்பை அளித்து பாடுபடுகிறார்கள் தே.கல்லுப்பட்டி வட்டார வளர்ச்சி அதிகாரி திரு பாலகிருஷ்ணனும் அவருடைய சகாக்களும். கிராம மக்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையே நிலவும் இந்த சகோதர பாசமும், அன்பும் இந்தக் கிராமத்தை ஒரு லட்சியக் கிராமமாக மாற்றியமைக்க உறுதுணையாக உள்ளது என்றால் மிகையாகாது.

காரைக்கேணியைப்பற்றி நினைக்கும்பொழுது நம் ஞாப கத்திற்கு வருவது அந்த ஊர் முக்கியஸ்தர்களில் ஒரு வராக இருக்கும் பஞ்சாயத்துத் தலைவர் அவர்களும் அவர்களுடைய நண்பர்களும்தான். கிராமப் பஞ்சாயத் துத் தலைவர், மற்றும், அவருடைய நண்பர்கள் ஆகியோரின் சலியாத உழைப்புதான் காரைக் கேணி கிராமத்தின் மதிப்பையே உயர்த்தியிருக்கிறது. இதற்கெல்லாம் மேலாக, இவர்களுக்கெல்லாம் குருவாக விளங்கும் கல்லுப்பட்டி காந்திநிகேதன் ஆசிரமத்தின் செயலாளர் திரு குருசாமி நாடார் அவர்கள் தான் இந்த நல்ல நிலைக்கு எல்லாம் மூல காரணம் என்று கிராம மக்கள் நன்றியுணர்வுடனும் பெருமையுடனும் பேசிக்கொள்கிறார்கள். காரைக்கேணி கிராம மக்கள் தங்களுடைய கிராமத்தைச் சீர்திருத்துவதோடு நின்று விடாமல், சுற்றுப்புறங்களில் உள்ள கிராம மக்களையும் அணுகி, அவர்களையும் இப்படிப்பட்ட நல்ல திருப்பணிகளைச் செய்யுமாறு ஊக்குவிக்க வேண்டும்.

காரைக்கேணி—நாட்டின் இலட்சியக் கிராமம்

காரைக் கேணியிலே ஏராளமான மயில்கள் வேல மரங்களினூடே ஆடித்திரியும் காட்சி உள்ளத்தையெல் லாம் கொள்ளை கொள்ளும் காட்சியாகும். மயில்கள் இப்படி நடமாடித் திரிவதைக் கண்டு நான் திகைத்து நின்ற சமயத்தில், " இன்னும் மாலை நேரத்தில் வந் தீர்களேயானால் பிரமித்துப் போய்விடுவீர்கள். நூற் றுக்கணக்கான மயில்கள் உலவுவதைப் பார்க்கலாம் " என்றார். பக்கத்திலிருந்த நண்பர் நான் என்ன பேச முடியும் ? " மயில் ஏறும் பெருமானின் அருளால் காரைகேணி இந்த நாட்டின் இலட்சியக் கிராமமாகத் திகழ்கின்ற நாள் வெகுதூரத்தில் இல்லை " என்று மனத்திற்குள் நினைத்துக்கொண்டேன்.

கேள்வியும்—பதிலும்

மாவட்டவாரியாக யூனியன்கள் விவரம்

கேள்வி 1 :—நமது மாநிலத்தில் இரண்டாவது தொதியாக அமைக்கப்பட இருக்கும் பஞ்சாயத்து யூனியன்கள் யாவை? மாவட்டவாரி யாக விவரங்கள் தர முடியுமா ?

பதில்.—நமது மாநிலத்தில், தமிழ் வருடப்பிறப்பன்று (13-4-1961) மொத்தம் 131 பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்படவிருக்கின்றன. மாவட்ட வாரியாக, அவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

வட ஆற்காடு

(வேலூர் வடக்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. திருப்பத்தூர், 2. வாலாஜா, 3. சோழிங்கர், 4. காவேரிப்பாக்கம், 5. கனியம்பாடி 6. நெமிலி.

(வேலூர் தெற்கு அபிவிருத்தி மாவட்டம்)

7. சேத்துப்பட்டு. 8. பேரனமல்லூர். 9. செய்யார்.

தென் ஆற்காடு

(கடலூர் வடக்கு அபிவிருத்தி மாவட்டம்)

10. சோலியனூர், 11. காணை, 12. மரக்காணம், 13. உழுந்தூர்ப்பேட்டை.

(கடலூர் தெற்கு அபிவிருத்தி மாவட்டம்)

14. நல்லூர், 15. மொங்கலூர், 16. பரங்கிப்பேட்டை, 17. குறிஞ்சிப்பாடி, 18. தியாகதுர்க்கம். 19. மேல புவனகிரி.

செங்கற்பட்டு மாவட்டம்

20. ஊத்துக்கோட்டை, 21. மதுராந்தகம், 22. பரங்கிமலை, 23. மீஞ்சூர், 24. காட்டான்குளத்தூர், 25. குன்றத்தூர், 26. காஞ்சிபுரம், 27. பூண்டி. 28. கும்மிடிப்பூண்டி 29. வில்லிவாக்கம்.

கோயமுத்தூர்

(கிழக்கு கோயமுத்தூர் அபிவிருத்தி மாவட்டம்)

30. காங்கேயம், 31. குண்டடம். 32. தாராபுரம், 33. துக்கநாயக்கன்பாளையம், 34. கொடுமுடி, 35. மொடக்குருச்சி, 36. பவானிசாகர், 37. பவானி, 38. மூலனூர், 39. அம்மாப்பேட்டை, 40. வெள்ளக்கோயில்.

(மேற்கு கோயமுத்தூர் அபிவிருத்தி மாவட்டம்)

41. சூலூர், 42. கிணத்துக் கடவு, 43, லட்சுமிநாயக்கன் பாளையம், 44. உடுமலைப் பேட்டை, 45. பொங்கலூர், 46. தொண்டாமுத்தூர்.

மதுரை

(வட மதுரை அபிவிருத்தி மாவட்டம்)

47. ஆத்தூர் I. (செம்பட்டி), 48. ஆத்தூர் II (ரெட்டியார் சத்திரம்), 49. திண்டுக்கல், 50. வத்தலகுண்டு, 51. கொடைக்கானல், 52. நிலக் கோட்டை, 53. பழனி, 54. வேடசந்தூர்.

(தென் மதுரை அபிவிருத்தி மாவட்டம்)

55. ஆண்டிப்பட்டி, 56. போடிநாயக்கனூர், 57. திருப்பரங்குன்றம். 58. மேலூர் II , 59. நத்தம், 60. கள்ளிக்குடி, 61. சேடப்பட்டி, 62. செல்லம்பட்டி.

நீலகிரி மாவட்டம்

63. குன்னூர், 64. கோட்டகிரி. 65. கூடலூர்.

ராமநாதபுரம்

(கிழக்கு ராமநாதபுரம் அபிவிருத்தி மாவட்டம்)

66. காளையார்க் கோயில், 67. தேவக்கோட்டை, 68. கல்லல், 69. மானாமதுரை, 70. கடலாடி, 71. முதுகுளத்தூர், 72. மண்டபம், 73. ராமநாதபுரம், 74. போகலூர், 75. கண்ணங்குடி, 76. ராஜசிங்கமங்கலம்.

(மேற்கு ராமநாதபுரம் அபிவிருத்தி மாவட்டம்)

77. ராஜபாளையம், 78. விருதுநகர், 79. சாத்தூர், 80. வேம்பக் கோட்டை, 81. வத்தராயிருப்பு.

சேலம்

(சேலம் வடக்கு அபிவிருத்தி மாவட்டம்)

82. பர்கூர், 83. பெண்ணகரம், 84. ஊத்தங்கரை, 85. மொரப்பூர். 86. வேப்பனப்பள்ளி, 87. பாப்பிரெட்டிப்பட்டி. 88. மேச்சேரி.

(சேலம் தெற்கு அபிவிருத்தி மாவட்டம்)

89. வாளப்பாடி, 90. தலவாசல், 91. திருச்செங்கோடு, 92. பரமத்தி, 93. சேந்தமங்கலம், 94. ஆத்தூர்.

தஞ்சை

(கிழக்கு தஞ்சை அபிவிருத்தி மாவட்டம்)

95. குத்தாலம், 96. செம்பனர் கோயில், 97. ஆனைக்காரன் சத்திரம், 98. குடவாசல், 99. நாகப்பட்டினம், 100. முத்துப்பேட்டை 101. கோட்டூர்.

(மேற்கு தஞ்சை அபிவிருத்தி மாவட்டம்)

102. பூதலூர், 103. அம்மாப்பேட்டை, 104. திருவிடைமருதூர், 105. திருப்பனந்தாள், 106. சேதுபாவாசத்திரம், 107. ஒரத்தநாடு. 108. ஆவுடையார்கோயில்.

திருச்சிராப்பள்ளி

(திருச்சி வடக்கு அபிவிருத்தி மாவட்டம்)

109. தாத்தய்யங்கார்பேட்டை, 110. துறையூர், 111. உப்பிலியபுரம், 112. பெரம்பலூர், 113. திருமானூர், 114. அரியலூர், 115. ஆண்டிமடம் 116. மணி கண்டம்.

(திருச்சி தெற்கு அபிவிருத்தி மாவட்டம்)

117. அரவாக்குறுச்சி, 118. தாந்தோணி, 119. கரம் பக்குடி 120. கீரனூர் (குன்னுண்டார் கோயில்).

திருநெல்வேலி

(திருநெல்வேலி வடக்கு அபிவிருத்தி மாவட்டம்)

121. வாசுதேவநல்லூர், 122. மேலநீலிதநல்லூர், 123. ஒட்டைப்பிடாரம் 124. புதூர் 125, கருங்குளம் 126. சாத்தான்குளம் 137. உடாங்குடி.

(திருநெல்வேலி தெற்கு அபிவிருத்தி மாவட்டம்)

128. வள்ளியூர், 129. ராதாபுரம், 130. ஆலங்குளம், 131. தென்காசி.

கேள்வி 2.—மூன்ருவது கடைசித் தொகுதியாக அமைக்கப்படவிருக்கும் பஞ்சாயத்து யூனியன்கள் யாவை ?

பதில்.—மூன்ருவது கடைசித் தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் காந்தி ஐயந்தியன்று (2-10-61) அமைக்கப்படும். அவையாவன :—

தஞ்சாவூர்

(கிழக்கு தஞ்சை அபிவிருத்தி மாவட்டம்)

1. திருமருகள், 2. நன்னிலம், 3. கொரடாச்சேரி, 4. திருவாரூர், 5. மன்னார்குடி, 6. நீடாமங்கலம்.

(மேற்கு தஞ்சை அபிவிருத்தி மாவட்டம்)

1. தஞ்சாவூர், 2. திருவையாறு, 3. திருவோணம், 4. மதுக்கூர், 5. பெருவூரணி, 6. அறந்தாங்கி.

திருநெல்வேலி

(திருநெல்வேலி வடக்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. திருச்செந்தூர், 2. ஆள்வார்திருநகரி, 3. ஸ்ரீவைகுண்டம், 4, கயத்தாறு, 5. விளாத்திக்குளம்.

(திருநெல்வேலி தெற்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. நாங்குநேரி, 2. களக்காடு, 3. அம்பாசமுத்திரம், 4. கடையம், 5. பாளையங்கோட்டை, 6. கடையநல்லூர், 7. கிழப்பாவூர்.

சேலம்

(சேலம் வடக்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. சோழகிரி, 2. கீழமங்கலம், 3. தல்லி, 4. பாலக்கோடு, 5. நல்லம்பள்ளி, 6. ஹரூர், 7. நங்கவல்லி, 8. ஓமலூர், 9. தாரமங்கலம் 10. கடையம்பட்டி.

(சேலம் தெற்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. கரிப்பட்டி, 2. வீரபாண்டி, 3. சேலம், 4. ஏர்காடு, 5. பனமரத்துப்பட்டி, 6. ராசிபுரம், 7. வெண்ணந்தூர், 8. புதுச்சத்திரம், 9. எருமைப்பட்டி, 10. நாமக்கல், 11. மோஹனூர், 12. கபிலமலை, 13. கொல்லிமலைகள், 14. பள்ளிப்பாளையம், 15. மல்லசமுத்திரம், 16. எழுச்சிபாளையம், 17. மக்டாஞல்ட் சத்திரம், 18. சங்கரி. 19. கொங்கணபுரம்.

கோயமுத்தூர்

(கிழக்கு கோயமுத்தூர் அபிவிருத்தி மாவட்டம்)

1. பெருந்துறை II. 2. ஊத்துக்குழி, 3. நம்பியூர், 4. தாளவாடி. 5. ஆந்தியூர்.

(மேற்கு கோயமுத்தூர் அபிவிருத்தி மாவட்டம்)

1. அன்னூர், 2. மேட்டுப்பாளையம், 3. பேரூர், 4. சிங்காநல்லூர், 5. சிர்கார்சமகுளம், 6. மதுக்கரை, 7. குடிமங்கலம், 8. மடத்துகுளம், 9. பொள்ளாச்சி 10. ஆனைமலை.

செங்கற்பட்டு

1. திருவொற்றியூர், 2. வாலாஜாபாத், 3. திருப்போரூர், 4. சித்தாமூர், 5. லாத்தூர், 6. அச்சரப்பாக்கம் 7. சோழவரம்.

மதுரை

(வட மதுரை அபிவிருத்தி மாவட்டம்)

1. சானூர்ப்பட்டி, 2. வடமதுரை, 3. பாளையம், 4. தொப்பம்பட்டி, 5. ஒட்டன்சத்திரம்.

(தென் மதுரை அபிவிருத்தி மாவட்டம்)

1. தென்கரை, 2. தேனி, 3. சின்னமனூர். 4, உத்தமபாளையம். 5. கம்பம்.

தென் ஆற்காடு

(கடலூர் வடக்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. வல்லம், 2. திருவெண்ணைநல்லூர், 3, மொகையூர், 4. திருக்கோயிலூர், 5. வானூர், 6. மைலம், 7. ஒலக்கூர் ; 8. கண்டமங்கலம், 9. விக்கிரவாண்டி.

(கடலூர் தெற்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. கடலூர், 2. நெல்லிகுப்பம், 3. குமராட்சி, 4 காட்டுமன்னார்கோயில், 5. விருத்தாசலம், 6. கம்மாபுரம், 7. ரிஷிவந்தியம், 8. சங்கராபுரம்.

ராமநாதபுரம்

(கிழக்கு ராமநாதபுரம் அபிவிருத்தி மாவட்டம்)

1. இளையாங்குடி, 2. திருப்புவனம், 3. சிவகங்கை, 4. திருப்பத்தூர், 5. சாக்கோட்டை, 6. திருப்புல்லாணி.

(மேற்கு ராமநாதபுரம் அபிவிருத்தி மாவட்டம்)

1. அருப்புக்கோட்டை, 2. திருச்சுழி, 3. நரிக்குடி.

வட ஆற்காடு

(வேலூர் வடக்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. கந்திலி, 2. வாணியம்பாடி, 3. ஆலங்காயம், 4. காட்பாடி, 5. குடியாத்தம், 6. பேர்ணும்பட்டு, 7, மாதனூர், 8. அணைக்கட்டு, 9. வேலூர், 10. திமிரி. 11. அரக்கோணம்.

(வேலூர் தெற்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. புதுப்பாளையம், 2. தண்டராம்பேட்டை, 3. திருவண்ணுமலை, 4. கீழ் பெண்ணுத்தூர், 5. கலசபாக்கம், 6. வந்தவாசி, 7. தெள்ளார், 8. ஆனைக்காவூர்.

திருச்சிராப்பள்ளி

(திருச்சி தெற்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. கரூர், 2. கிருஷ்ணராயபுரம், 3, மணப்பாறை, 4. வையம்பட்டி, 5. மருங்காபுரி, 6. கடவூர், 7. அரிமழம், 8. திருமயம், 9. பொன்னமராவதி, 10. அன்னவாசல், 11. விராலிமலை.

(திருச்சி வடக்கு அபிவிருத்தி மாவட்டம்)

1. புல்லம்பாடி, 2. மணச்சநல்லூர், 3. ஆலத்தூர், 4. வரகூர், 5. ஜெயங்கொண்டம், 6, செந்துறை, 7. டி. பாலூர், 8. திருவரம்பூர், 9. ஸ்ரீரங்கம்.

III **கேள்வி.**—பொதுச் சாலைகளுக்கும், பொது இடங்களுக்கும் விளக்கு போடுதல், பொதுச் சுகாதார வேலைகள் போன்ற விஷயங்களில், பஞ்சாயத்துக்களுக்கான நிதி வசதிகள் பற்றிய வரையில் முன்பு இருந்த நிலைக்கும் இப்பொழுது உள்ள நிலைக்கும் என்ன வித்யாசம்? ஏதாவது மாற்றங்கள் உண்டா?

பதில் :—1950-வது ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தின் படி நகராண்மைக் கழகங்களின் பிரதேச இன்ஸ்பெக்டரின் குறிப்பிட்ட அனுமதியில்லாமலேயே பஞ்சாயத்துக்கள் "போக்கு வரத்து" "தண்ணீர் வினியோகம்" ஆகியவற்றின்கீழ் குறைந்தபட்சமாக பஞ்சாயத்தின் சாதாரண வருமானத்தில் 20 சத விகிதமும் 10 சத விகிதமும் செலவிடலாம் என்றிருந்தது. அதேபோல், பொதுச் சாலைகள், பொது இடங்களில் விளக்குப் போடுதல், பொதுச் சுகாதார வேலைகளுக்காக 15 சத விகிதமும், 30 சத விகிதம் என்று அதிகபட்சமாக செலவழிக்கலாம் என்றிருந்தது. இதற்கு குறைந்தோ, அல்லது அதிகமாகப் போனாலோ, பிரதேச நகராண்மைக் கழக இன்ஸ்பெக்டரின் அனுமதியைப் பெறவேண்டும்.

2. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் செலவு செய்யக்கூடிய இந்த குறைந்த பட்ச, அதிக பட்ச அளவு முறை பற்றிய பிரச்னை பரிசீலனை செய்யப்பட்டது. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் நிதிகளைச் செலவு செய்வதில் அவ்வளவு கடினமான விதி முறைகள் அனுஷ்டிக்கப்படவேண்டிய தேவையில்லை என்றும், பல வகைப்பட்ட பணிகளுக்காக தங்களுடைய வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான வழி முறைகளை தாங்களே செய்து கொள்ள அவைகள் அனுமதிக்கப்படவேண்டும் என்றும், ஆனால் அப்படிச் செய்யும்போது பஞ்சாயத்து நிர்வாகம் பற்றிய எதிர்கால வரவு செலவுத் திட்டத்தில் தலைக்கு எவ்வளவு செலவிடலாம் என்றுள்ள இலக்களவை கருத்திலிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதுமட்டுமல்லாமல், ஜனநாயக முறையில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் இந்தக் காலத்தில், இந்த விஷயங்களில் அதிகாரிகள் தலையிடுதல் தேவையுள்ளது மட்டுமல்ல, விரும்பத்தக்கதுமாகாது என்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே தான், இந்த விஷயத்தில் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்துக்களுக்கு நிதி வசதிகள் செய்து தருவதுபற்றி உத்தரவுகள் ஒன்றும் பிறப்பிக்கப்படவில்லை.

3. மேற்சொன்ன காரணங்களின்பேரில், நிதிகள் வசதிகள் பற்றிய அளவில், பஞ்சாயத்துக்களின் மீது இப்பொழுது சுமத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அப்படியே வைத்திருப்பது தேவையற்றதுடன், விரும்பத்தக்கதுமல்ல என்று முடிவு செய்யப்பட்டது. சில விஷயங்களில் 1950வது ஆண்டு பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் பஞ்சாயத்து ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிதி வசதி செய்து தருவதுபற்றிய விதி முறைகள் இப்பொழுது எடுக்கப்பட்டுவிட்டன. எந்த விதமான கட்டுப்பாடுமின்றி, வெளியார் அனுமதி பெறுகவேண்டும் என்ற நிலையில் இல்லாமல், பஞ்சாயத்துக்கள் இப்பொழுது தங்களுக்கு ஏற்பட்டுள்ள செலவினங்களைச் சமாளிக்க வேண்டி, தாங்களே தங்களுடைய வரவு செலவுத் திட்டங்களில் வழி முறை செய்து கொள்ளலாம். ஆனல் அப்படிச் செய்வது நிதிகள் கிடைக்கும் வசதிகளைப் பொறுத்து செய்யப்படல் வேண்டும்.

பஞ்சாயத்து ஆட்சி—அரசாங்க ஆணை

(பஞ்சாயத்து யூனியன்கள் வசம் தேசிய நலப் பணிகளை ஒப்படைத்தல்—காலவரையறை நிர்ணயிக்கப்படல்)

[கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையின் 2—3—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 588-ன் சுருக்கம்]

சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 66-வது பிரிவின்படி, ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்தினிடம் சமுதாய அபிவிருத்தியின்கீழ் நடைபெறும் தேசிய நலப் பணிகளை அரசாங்கம் ஒப்புவிக்கவேண்டும். விவசாயம், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அடிப்படையிலோ தனிப்பட்ட முறையிலோ நடத்தப்பெறும் கிராமக் கைத்தொழில்கள் ஆகியவை இதில் குறிப்பாக அடங்கும்.

(2) மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்ற வேலை 1961-ம் ஆண்டு எப்ரல்மீ 1உ துவங்கும். அதனால், பஞ்சாயத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுஜனப் பிரதிநிதிகள் மாவட்ட போர்டுகள் இதுகாறும் செய்து வந்த வேலையோடு மட்டுமல்லாமல், வட்டார அபிவிருத்தி வேலையையும் ஒரு திட்டமிட்ட முறையில் செயலாற்ற அவர்களுக்கு வசதி செய்து தரப்படவேண்டியது இந்த நேரத்தில் சாலப் பொருத்தமுடையதாகும்.

(3) 1960-ம் ஆண்டு ஆகஸ்ட்மீ 16 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 664-ல், அரசாங்கம் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஒன்றை தயாரிக்கும் அடிப்படை அம்சத்தை ஒத்துக் கொண்டுள்ளது. இப்படி தேசிய நலப் பணிகளை நிறைவேற்றும் வேலைகளை பஞ்சாயத்து யூனியன் வசம் ஒப்படைப்பதற்கு முன்னால் அந்த பஞ்சாயத்து யூனியன், வட்டாரத்தில் உள்ள பஞ்சாயத்துக்களின் ஒத்துழைப்புடன், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு இப்படி ஒரு திட்டமிடப்பட்ட வரவு செலவுத் தயாரித்திருக்கிறதா என்பதைப்பார்க்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்டுள்ள விதி முறைகளின்படி இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படவேண்டும். கிராம அபிவிருத்தி தல நிர்வாகத்துறையினரின் 1961-ம் ஆண்டு ஜனவரிமீ 25உ தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 211-ல் மூன்றுவது திட்டக் காலத்திற்கு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு வட்டார அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதுபற்றிய விவரங்கள் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அப்படித் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு வரவு செலவுத் திட்டமும், பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்துடனும் மாநில வரவு செலவுத் திட்டத்துடனும் ஒத்துப்போகிறதா என்பதை மாவட்டக் கலெக்டர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அத்துடன், பஞ்சாயத்து யூனியன் மன்றமானது தங்களுக்குள்ள நிதி வசதிகளுக்குட்பட்டு மேற்கண்ட அரசாங்க ஆணைகள் இரண்டினுள்ளும் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான நடவடிக்கை எடுப்பதை ஒத்துக் கொள்ளும் வகையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும்.

(4) முன்பே அமைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன்கள், 1961-ம் ஆண்டு எப்ரல்மீ 13உ, 1961-ம் ஆண்டு அக்டோபர் 2உ தேதிகளில் அமைக்கப்படப்போகும் 2-வது, 3-வது தொகுதி பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அமைக்கப்பட்டதும், அவை தேசிய நலப் பணிகளை ஏற்று நடத்த ஒத்துக் கொள்வதற்கு முன்னோடியாக, வட்டாரத் திட்ட மிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் வேலையை மேற்கொள்வதற்காக வேண்டி, அரசாங்கம், அப்படிப் பணிகளை அவைகள் வசம் ஒப்படைப்பதில், கீழ்க்கண்ட கால அட்டவணை அனுசரிக்கப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கிறது :—

முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள்—1-4-1961.

இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள்—1-7-1961.

மூன்றுவது தொகுதி ப சாயத்து யூனியன்கள்—1-1-1962

நாட்டை உயர்த்தும் கூட்டுறவு

திருச்சி வாசுதேவன்

நாட்டை யுயர்த்துவது கூட்டுறவாம்—அதை
நன்கு வளர்த்துவந்தால் நலம்பெறலாம் !
வீட்டிற் குதவுபொருள் பற்பலவாம்—அவை
விலைகுறைவில் கிடைக்க வழிசெய்வதாம் !
(நாட்டை)

கலப்பட மில்லாமல் உணவுப் பொருள்—உயர்
கைத்தறியில் நெய்யும் துணி வகைகள்
நிலத்தில் பயிர்விளைக்கப் பொறுக்குவிதை—மற்றும்
நேர்த்தியாய் உரங்களும் வாங்கிடலாம் !
(நாட்டை)

உயர்வட்டிக் கொடுமையாம் வலையினிலே—சிக்கி
உழலாமல் பாதுகாக்கும் வகையினிலே
அயர்வின்றி உழைப்போருக்கு முதலீடு—தந்து
ஆக்கம் பெறச் செய்யும் பண்போடு !
(நாட்டை)

மாதத் தவணைகளில் பணம் செலுத்தி—வீடு
வாங்கிடலாம் சுயமாய்ப் பயன்படுத்தி !
வாதுகள் ஏதுமின்றி ஒற்றுமையுடன்—கூடி
மகிழுவோம், திட்டமெலாம் செயல்படுத்தி !
(நாட்டை).

G.N.—4-a

அளவுள்ள குடும்பம்

ஆயிரத்தி தொள்ளாயிரத்து அறுபத்தோரும் ஆண்டு ஜனவரி மீ 30-ம் தேதியிட்ட (கிராம அபிவிருத்தித் துறை) அரசாங்க ஆணை எண் 266-டன் இணைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பின் பகுதி ஒன்றில் 3-வது பாராவில் உள்ள முதல் வாக்கியம் எல்லா மாவட்டக் கலெக்டர்கள், (சென்னை கலெக்டர் நீங்கலாக) ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள், வட்டார வளர்ச்சி அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

1960-ம் மே மீ 25உ தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1450-லும் (பொதுச் சுகாதாரம்), 1961-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 3உ தேதியிட்ட அரசாங்கஆணை எண் 2260-லும் (பொதுச் சுகாதாரம்) [இவை இரண்டும் 1961-ம் ஆண்டு ஜனவரி மீ 30உ தேதியிட்ட (கிராம அபிவிருத்தி தல நிர்வாகத்துறை) அரசாங்க ஆணை எண் 266-ல்—சேர்க்கப் பட்டுள்ளன] அரசாங்கம், அறுவை சிகிச்சை முறையை தீவிர முறையில் பிரபலப்படுத்த வேண்டி, அப்படி அறுவை சிகிச்சை முறை செய்யும் ஆஸ்பத்திரிகள் என்று சில ஆஸ்பத்திரிகளை அதிகார பூர்வமாகக் குறிப்பிட்டுள்ளது. இப்பொழுது அவைகளுடன் 1961-ம் ஆண்டு பிப்ரவரி மீ 6உ தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 336-ன் (பொதுச் சுகாதாரம்) இணைப்பில் குறிப்பிட்டுள்ள தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளும் இந்தக் காரியத்திற்காக அதிகார பூர்வமாக அறுவை முறை சிகிச்சை செய்யும் இடங்களாகும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது.

3. காஞ்சு காத்தான், வண்ணாரப்பேட்டை ஆகிய இரு இடங்களில் உள்ள அரசாங்க தாய் சேய் ஆஸ்பத்திரிகள் இரண்டு தவிர, மற்றபடி மேற்குறிப்பிட்ட இணைப்பில் கண்டுள்ள எல்லா வைத்திய நிறுவனங்கள் ஒவ்வொன்றின் தலைவருக்கும் தலைக்கு ஒரு தனியான நிரந்தர முன்பணமாக 500 ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. ஆபரேஷன் செய்து முடிந்ததுமே, ஆபரேஷன் செய்து கொண்டவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய அலவன்ஸ் பணத்திற்காகவும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கு அளிக்கவேண்டிய அலவன்ஸுக்காகவும் வேண்டிமட்டும்தான், இந்த அட்வான்ஸ் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

4. தாலுகா தலைமை ஆஸ்பத்திரிகளிலும் அறுவை சிகிச்சையை செய்து கொள்ளலாம் என்றும், அதற்கான அலவன்ஸ் பணம் அப்படிச் செய்து கொள்கிறவர்களுக்கு ஆபரேஷன் செய்து முடிந்ததும் உடனே அவர்களுக்கு அளிக்கப்படும் என்பதையும், எல்லா மாவட்டக் கலெக்டர்களும், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளும், வட்டார வளர்ச்சி அதிகாரிகளும், கிராமங்களிடையே பெருவாரியான முறையில் பரப்பி, விளம்பரம் படுத்த போதிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

[1961-ம் ஆண்டு பிப்ரவரி மீ 23உ தேதியிட்ட கிராம அபிவிருத்தி, தலநிர்வாகத் துறை மெமொ. எண் 32956/பி 3/61-1.]

"கிராம சேவிகைகள் தேர்ந்தெடுத்தல்"

"கிராம சேவிகை" களாகப் பணியாற்ற விரும்புகிறவர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன. பெண்கள் மட்டும்தான் மனுச்செய்ய வேண்டும். 120 இடங்கள் காலியாக உள்ளன. மனுக்கள் பெறும் முடிவு தேதி : 31-3-1961.

வயது : ஷெட்யூல்ட் வகுப்பினர் : 1961-ம் ஆண்டு ஜூலை மீ 1உ-ல் 21 வயதுக்கு மேற்பட்டும் 35 வயதுக்கு அதிகப்படாமலும் இருக்கவேண்டும்.

மற்றவர்களுக்கு : 1961-ம் ஆண்டு ஜூலை மீ 1உ-ல் 21 வயதிலிருந்து 30 வயதுவரை உள்ளவர்கள்.

கல்வி; எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சைக்கு முழுதாக ஆஜராகியிருக்கவேண்டும். தமிழ் பேச, எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

மற்ற விவரங்களை தினசரி பத்திரிகை விளம்பரங்களிலிருந்தும், வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

ஏப்ரல் மாத கிராமிய நிகழ்ச்சிகள் :

வானொலி நிகழ்ச்சிகள்

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து ஏப்ரல் 1961 மாதத்தில் ஒலிபரப்பப்பட இருக்கும் கிராமிய நிகழ்ச்சிகளின் விவரம்.—

பிரதி வெள்ளிக் கிழமை தோறும்.—(1) நம் மாதர் மன் மன்றம் ; "நாடோடிப் பாடல்கள் வகுப்பு".

பிரதி சனிக்கிழமை தோறும்—"முதியோர் கல்வி வகுப்பு"

பிரதி திங்கள் தோறும் —வாராந்திர மார்க்கெட் நில வரங்கள்.

பிரதி செவ்வாய் தோறும்.—திரைப்பட இசை.

பிரதி வியாழன்தோறும்.—மெல்லிசை, நமது திட்டம்.

இதுதவிர, மாதத்திய மற்ற நிகழ்ச்சி விவரங்கள் வருமாறு.—

சனிக்கிழமை (1–4–61) நிகழ்ச்சி நிரல்.

ஞாயிறு (2–4–61)—ஆராய்ச்சிக்கூடம், கிராமம் போவோமா ? (ரேடியோ செய்திக் கதிர்).

திங்கள் (3–4–61)—அகில இந்திய ரேடியோ டி.எஸ்.

ஒலிப்பதிவுகள். "அஸ்வத்தாமா" (நாடகம்) பானு சிம்மன் எழுதியது.

செவ்வாய் (4–4–61)—திருப்புகழ்.

புதன் (5–4–61)—நாடோடிப் பாடல்கள், மண் வளப் பாதுகாப்பின் நன்மைகள்— விவாதம், மணல்மேட்டு மகாநாடு (விசேஷ நிகழ்ச்சி) ஜி. செல்வம் எழுதியது.

வியாழன் (6–4–61)—வானில் விஜயம் (இசை நிகழ்ச்சி) என். ராகவன் எழுதியது.

சனி (8–4–61)—இலக்கியப் பேச்சு—திட்டத்திற்கு உதவுங்கள்—உங்களுக்கே உதவிக்கொள்ளுங்கள். (இசை நிகழ்ச்சி).

ஞாயிறு (9–4–61)—பூதான, கிராம தானத் தொண்டருடன் பேட்டி ; கிராமியக் கலை—லாவணி.

திங்கள் (10–4–61)—பாமாலை ; மாப்பிள்ளை (நாடகம்) எஸ். பூமிநாதன் எழுதியது.

செவ்வாய் (11–4–61)—அருட்பா.

புதன் (12–4–61)—காவடிச் சிந்து, காடுகளைத் தாக்கும் நோய்கள்—விவாதம், "அம்மாஞ்சி ஹரிஹரன்" (விசேஷ நிகழ்ச்சி) பானுசிம்மன் தயாரித்தது.

வியாழன் (13–4–61)—""புதந்தது புத்தாண்டு"—புது வருட தின நிகழ்ச்சி.

சனி (15–4–61)—கிராம நல சங்கம்—விவாதம், பழரச தயாரிப்பாளருடன் பேட்டி.

ஞாயிறு (16–4–61)—பஞ்சாயத்து தண்ணீர்ப்பந்தல் வழக்கு—"வாசு" எழுதியது.

திங்கள் (17–4–61)—நாடோடிப் பாடல்கள், "சுமை தாங்கி"—ஜி.செல்வம் எழுதிய சிறு கதை.

செவ்வாய் (18–4–61)—பாமாலை.

புதன் (19–4–61)—திருப்புகழ், விழாக்களும், நோய் களும்"—விவாதம், "பாட்டும் படிப்பும்"—இசை நிகழ்ச்சி—என். ராகவன்.

வியாழன் (20–4–61)—ஆதி சங்கரர்—சங்கராச்சாரியார் வாழ்க்கை பற்றிய நிகழ்ச்சி.

சனி (22–4–61)—இலக்கியப் பேச்சு "பாட்டைக் கேளுங்கள்" —இசை நிகழ்ச்சி.

ஞாயிறு (23–4–61)—"விஸ்வநாத நாய்க்கர்"—நாடகம். ஜி. செல்வம் எழுதியது.

திங்கள் (24–4–61)—பாமாலை, "கரடி வித்தை" என். ராகவன் எழுதியது.

செவ்வாய் (25–4–61)—காவடிச் சிந்து.

புதன் (26–4–61)—நாடோடிப் பாடல்கள், "மெட்ரிக் இடைகளும் நிறைகளும்"—விவாதம்.

வியாழன் (26–4–61—"நலம் தரும் திட்டம்"—விவாதம்.

சனி (29–4–71)—"திங்களைப் போற்றுவோமே!" இசை நிகழ்ச்சி—என் ராகவன் தயாரித்தது.

ஞாயிறு (30–4–61)—"துறவு" நாடகம் எஸ். பூமிநாதன், எழுதியது. "ஒன்றே குலம்"—நிகழ்ச்சி.

—

"கிராம மக்களும் பயனடையும் வகையில் தமிழ் மொழி வளம்பெற வேண்டும்"

தமிழ் ஆராய்ச்சியாளருக்கு, கல்வி அமைச்சர் வேண்டுகோள்

["தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற"த்தை, தமிழ்நாடு அரசாங்கம், தோற்றுவித்து, சுமார் இரண்டாண்டுகள் ஆயின. 1959-ம் ஆண்டு குடியரசு விழா நாளில் தொடங்கப்பெற்ற இந்த மன்றம், வியத்தகு முறையில் பணியாற்றி வருவது யாவரும் அறிந்ததே. இதைப்பற்றிய விவரங்களை, கிராம மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக, "கிராம நலம்" இதழ்களில், (குறிப்பாக, 1959-ம் ஆண்டு, மே, ஜூன் மாத வெளியீடுகளில்) அவ்வப்போது வெளியிட்டிருக்கிறோம்.

இந்த மன்றத்தின் நான்காவது கூட்டம், 17-2-61-ல், தமிழ்நாடு அரசாங்கத்தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற போது, சில முக்கியமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அச்சமயம், தமிழ் மொழி ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளில் போதனு மொழியாகவும் பயன் படும்போது, எல்லோரும் ஒற்றுமையாயிருந்து, தக்க வகையில் பணிபுரிய வேண்டியதன் அவசியத்தை, மன்றத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் வற்புறுத்தினர். "தமிழை ஆட்சி மொழியாக" கொண்டு வந்ததன் நோக்கம், "சாதாரண கிராம மக்கள்கூட, ஒரு விஷயத்தைத்தாங்களே படித்து அறிந்து கொள்ளவேண்டிய நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான். இன்றைக்கு நாம் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய பணி, அறிவுத் துறை, இலக்கியத்துறை மட்டுமல்லாமல், பொது மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய முறையில் தமிழ் மொழி அமைய வேண்டும் என்பதுதான்", என்று அவர் கூறிய விளக்கம், எல்லோருடைய சிந்தனைக்கும் உரியது.

—ஆசிரியர்]

தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சி மன்றக் கூட்ட நிகழ்ச்சி விவரம்

இந்த மன்றத்தின் தலைவரான திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அக்கூட்டத்திற்கு வந்திருந்த சுமார் 30 உறுப்பினர்களை வரவேற்றுப் பேசுகையில், தமிழ் மொழி வளர்ச்சிக்கான ஆக்க வேலைகளை விளக்கியதோடு, இன்னும் பல புதிய திட்டங்களை மேற்கொள்ள முன் வந்துள்ளதை அறிவித்தார். சிறப்பாக, 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல், கோவையிலுள்ள அரசாங்க கல்லூரியில், தமிழ் மொழியிலேயே பாடம் நடத்தப்பட்டு வரும் திட்டம், வெற்றிகரமாக நிறைவேறுவதை விளக்கினர்.

இதுவரையில், 18 புத்தகங்களை, கல்லூரி தமிழ்க் குழுவினர் வெளியிட்டுள்ளதை அவர் பாராட்டினர். அடுத்த கல்லூரி ஆண்டு ஆரம்பத்துக்குள், 52 புத்தகங்கள் வெளி வருவதற்கான திட்டம் இருப்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்தார். இதற்குக் காரணமான எல்லோரையும், அவர் பாராட்டியதோடு, மாணவர்களும் ஆசிரியர்களும் இந்தப் புதிய திட்டத்தை வரவேற்கிறார்கள் என்பதை, கோவைக் கல்லூரிக்குச் சென்றபோது நேரில் பார்த்து அறிந்துகொண்டதாகக் கூறினர்.

கல்லூரிகளுக்குத் தேவையான இன்னும் பல நூல்கள் வெளிவருவதற்குரிய வழிகளைப் பற்றி ஆராய்ச்சி நடைபெற்றது. நூல்களை எழுதும் ஆசிரியர்களுக்கு வேண்டிய ஓய்வு, சுருக்கெழுத்தாளர்களின் உதவி, கலைச் சொல் ஆக்கப்பட்டியல் மாணவர்களுக்கான உபகாரச் சம்பளம் முதலியவை பற்றி, கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

அடுத்தபடியாக "தமிழ் வெளியீட்டுக் கழகம்" ஒன்று நிறுவுவது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டது. பல்கலைக் கழகங்கள், தமிழ் பணிப் புரியும் பல்வேறு ஸ்தாபனங்களும் அறிஞர்களும் தக்கவாறு இந்தப் புதிய கழகத்தில் உறுப்பினர் ஆவதற்கான வழி முறைகள் ஆராயப்பட்டன. இதைக்குறித்து பின்னர் ஆலோசிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆட்சிமொழிச் சட்ட நிறைவேற்றக் குழுவிற்கு, முன்னல் தலைமைக் காரியதரிசி திரு எஸ். வெங்கடேஸ்வரன், ஐ. ஸி. எஸ். முழு நேரத் தலைவராக பொறுப் பேற்றிருப்பதை, மன்றத் தலைவர் அறிவித்தார். திரு வெங்கடேஸ்வரன் அவர்கள் கொடுத்த அறிக்கையின்படி, மொத்தமுள்ள 3476 மாவட்ட நிலை அலுவலகங்களில், 2473 அலுவலகங்களில், தமிழ் ஆட்சி மொழியாகக் கொண்டுவரப்பட்டுவிட்டது. பாக்கியுள்ள 1003 அலுவலகங்களைப் பொறுத்தவரை, இந்த ஆண்டி முடிவிற்குள் அந்தப் பணி நிறைவேறி விடும்.

குழந்தை இலக்கிய சம்பந்தமான நூல்களை வெளியிடுவது, கல்லூரி மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பொது நூல்கள் வெளியிடுவது, அச்சக வசதிகள், வரலாறு சம்பந்தப்பட்ட தமிழ் அகராதி தயாரிப்பது, நாட்டுப் பாடல்கள் சேகரித்தல், பிற மொழிச் சொற்களின் கலப்பு முதலியவை பற்றியும் ஆய்வுரைகள் நடைபெற்றன.

"தமிழரின் வரலாறு" ஒன்று, செம்மையான முறையில் வெளி வருவதற்கான திட்டமொன்றைப் பற்றி, ஆராய்ச்சி நடைபெற்றது. இறுதியில், இதைக் குறித்து மேலும் ஆராய்ந்து ஓர் அறிக்கையைத் தயாரிக்குமாறு, டாக்டர் மு. வரதராசன், திரு தெ.பொ. மீனுட்சி சுந்தரம், டாக்டர் அ. சிதம்பரநாதன், திரு. ம.பொ. பெரியசாமி தூரன், திரு. கே. ஆர். சீனிவாசன் ஆகிய ஐவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

1961-ம் வருஷம் மே மாதம் முதல், பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரியில், புகுமுகப் பயிற்சி வகுப்பில் தமிழ் போதனு மொழியாகச் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர்களுக்கு, பயிற்சி அளிக்க உத்தேசித்திருப்பதாக, மன்றத் தலைவர் குறிப்பிட்டார். மேலும், கல்லூரிகளில் தமிழைப் போதனு மொழியாக்க முன்வந்த கலைக் கல்லூரிகளுக்கு, ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப்பின் தக்க சலுகைகளை அளிக்க, முடிவு செய்திருப்பதாகக் கூறினுர்.

தமிழ் ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளில் போதனு மொழியாகவும் பயன்படும்போது, எல்லோரும் ஒற்றுமையாகயிருந்து தக்கவகையில் பணி புரிய வேண்டியதன் அவசியத்தை, மன்றத் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் மிகவும் வற்புறுத்தினுர்.

" தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவந்து இருப்பதன் தலையாய நோக்கம், சாதாரண கிராம மக்கள்கூட ஒரு விஷயத்தைத் தாங்களே படித்து அறிந்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான். அப்படியின்றி, தமிழில் எழுதும்போதே, அதில் ஏதேதோ புரியாத வார்த்தைகளைப் போட்டு கிராம மக்கள் புரிந்து கொள்ள முடியாத நிலையில், அதைத் தெரிந்துகொள்ள ஒரு பண்டிதரிடம் போகவேண்டிய நிலையிருந்தால் அதனுல், என்ன பலன் ? இன்றைக்கு நாம் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய பணி, அறிவுத் துறை, இலக்கியத் துறை மட்டுமல்லாமல், பொது மக்களும் விளங்கிக் கொள்ளசகூடிய முறையில், தமிழ் மொழி அமையவேண்டுமென்பதுதான். இதுவே சர்க்காரின் நோக்கம். போகப் போக, எல்லோரும் படித்து முன்னுக்கு வரும்போது, புதிய புதிய சொற்கள் வந்து சேரும் என்பதில் சந்தேகமில்லை " என்று அவர் கூறினுர்.

புனிதத்தூதன் !

புலவர். மு. உலகநாதன்.

கடலுக்குள் இருந்தெடுத்த முத்தைப் போலக்
காலமெனும் கடல்நமக்குத் தந்த சொத்து

படமுடியா தினித்துயரம் என்றே எண்ணப்
பக்கத்துணை யாய்வந்த புனிதத் தூதன் !

கொடுமைகளை வெள்ளையர்கள் தந்த போதும்
கொள்கைசொலி அதற்கென்றே வாழ்ந்த அண்ணல்

அடுத்தவரின் செயலென்ன ? என்ற மாற்றுர்
அதிசயிக்கத் திட்டந்தரும் படித்த மேதை !

துங்கமணி மின்போலும் ஒளியைக் கூட்டித்
தூயஒளி தனைத் உளத்தில் சேர்த்த காந்தி

எங்கள்தந்தை எனமக்கள் பேசும் அண்ணம்
இந்தியத்தின் உளமெல்லாம் ஒன்று சேர்த்துப்

பொங்குபல சமயமெலாம், மனிதர் எல்லாம்
புகழ்மிக்க ஒருகுடும்பப் பிறப்பே என்றே

அங்கங்கே உளபிரிவை விலக்கி வைக்க
அரும்பாடு பட்டுழன்ருர்! துன்ப முற்ருர்!

சமுதாயக் குற்றமெனக் கருதி வந்த
சமஉரிமை இல்லாத எளியர் தம்மை

நமதன்னை மகவன்ரு என்று கூறி
நாமவனைத் தீண்டாதான் என நினைத்த

சுமைச்சொல்லை ஒழித்ததுடன் அவர்களோடு
சுற்றம்போல் வாழ்ந்தவர்யார் ? காந்தி அன்ருே ?

நமதிருளை ஒழித்தவரோ மறைந்து விட்டார்.
நாமந்தப் புனிதன்தனை வாழ்த்தி நிற்போம்!

புதிய முறைகளைக் கையாளும் விவசாயிகளுக்கு

நிதி உதவிதரத் திட்டம்

உற்பத்திகளைப் பெருக்கும் விசேஷ யுக்திகளைக் கண்டு பிடிக்கிற விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளிக்கப்படவேண்டு மென்றும், இவற்றைக் கையாள விரும்புகிற விவசாயி களுக்குப் பண உதவி செய்யப்படவேண்டுமென்றும் உணவு விவசாய மந்திராலயம், சமுதாய அபிவிருத்தி கூட்டுறவு மந்திராலயம், திட்டக் கமிஷன் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய விவசாயக் காரியதரிசி, திரு கே. ஆர். தாம்லே தலைமையில் நடைபெற்ற கூட்டத் தில், விதைப் பண்ணைகளின் தரத்தையும், எண்ணிக்கை யையும் அதிகப்படுத்தவேண்டுமென்றும் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது.

உயர்ந்த ரகச் சுத்தமான விதைகளை உற்பத்தி செய்ய, விதைகளைத் தரம் பிரிப்பதற்கும், அத்தாட்சி அளிப்ப தற்கும், பொருத்தமான முறை அமுல் செய்யப்பட வேண்டும்; உற்பத்திமுறையும் நிர்ணயிக்கப்படவேண்டும். நளகார் கமிட்டி சிபார்சு செய்திருப்பதுபோல, விதைப் பண்ணை அதிகாரிகளடங்கிய விசேஷ உத்தியோகப் பிரி வொன்றை ஏற்படுத்த ராஜ்ய சர்க்கார்கள் கோரப்படுவார் கள்.

பல்வேறு ராஜ்யங்களில் திருந்திய விவசாயக் கருவிகளை துரிதமாகப் பரப்பும் திட்டமொன்றையும் கமிட்டி அங்கி கரித்திருக்கிறது. ராஜ்ய விவசாய இலாகாக்கள், தொழில் இலாகாக்கள், தனிப்பட்ட ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவை இவ்விஷயத்தில் ஒத்துழைக்கவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. விவசாய காரியங்களுக்கு வேண்டிய இரும்பும், உருக்கும் முக்கிய திட்டங்களில் சேர்க்கப்பட்டிருக் கின்றன. உற்பத்தி லாபகரமான கட்டத்தை அடைவது வரையில், திருந்திய கருவிகள் விற்பனை, நிதர்சனம் காட்சிகள் விஷயத்தில் உதவித் தொகை வழங்கப்படும்.

ஒரு பகுதியைச் சேர்ந்த இளம் விவசாயிகள், அதே ராஜ்யத்தில், அல்லது அதற்கு அருகிலுள்ள ராஜ்யத்தில் அதே மாதிரியான பகுதிகளில் கையாளப்படும் திருந்திய விவசாய முறைகளைத் தெரிந்துகொள்வதற்காக இளம் விவசாயிகளைத் தெரிந்தெடுக்கும் திட்டமொன்றுக்கும் அங்கீகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

உழுவோரே! விழித்தெழுக!

புலவர். மு. உலகநாதன்.

கலப்பையினைத் தோளிலெடு !
கதிரவனைக் கிழக்கில் பார் !

உலகத்தைக் காப்பதற்கே
உதிக்கின்றான் கீழ்த்திக்கில !

நிலமென்னும் மண்மகளோ
நின்வரவை நோக்குகின்றாள் !

பலகாலம் நீபிரிந்தே
பாவத்தை ஏன் சுமந்தாய் ?

மண்வெட்டி எடுத்துக்கொள் !
மழைவானம் வருகிறது !

பண்படுத்து ! முளைத்துள்ள
பசுந்தழையை உரமாக்கு !

தண்ணீரை வரப்புயரத்
தகுந்தபடி உயர விடு !

கண்காண விளைவதனைக்
கலங்கலமாய் நீ காண்பாய் !

சோம்பலினை முறித்து விடு !
சுற்றி நிலம் வேலியிடு !

தேம்புமனை மக்களினைச்
சுறுசுறுப்பாய் இயங்கி விடு !

கூம்பியஉன் வாழ்வுவளம்
கொள்ளுவதை நீ காண்பாய்!

ஆம்! முயற்சி யாலுயர்ந்தோர்
ஆயிரமாம் உலகுண்டே !

நாளெல்லாம் உழைப்பதனால்
நலிவடைவதில்லை நீ !

ஆளெவனுள் உழைப்புருஞ்சி
அடித்துண்பான் எனக் காணும்

வேளையதும் வந்ததடா !
விழிப்புக் கொள்! தூங்காதே !

நாளைநிலம் நம் கையில் !
நலிவில்லை ! உழு ! நிலத்தை !

அடுத்த தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்பு

பஞ்சாயத்துத் தலைவர்களின் ஒத்துழைப்பைக் கோரி, தலைமைத் தேர்தல் அதிகாரி வேண்டுகோள்.

[நமது நாட்டில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் வேலை மும்முரமாக நடைபெற்று வருகிறது. இது ஒரு பிரம்மாண்டமான தேசப்பணி. இந்த முக்கிய வேலையில் பஞ்சாயத்துத் தலைவர்களின் பொறுப்பு அதிகம். தமிழ் நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி Chief Electoral Officer திரு. எஸ். பி. சீனுவாசன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளை பஞ்சாயத்துத் தலைவர்கள் கவனத்துடன் படித்து, பூரண ஒத்துழைப்பை அளிக்கவேண்டுமென பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர்]

அன்புள்ள பஞ்சாயத்து போர்டு தலைவருக்கு,

உங்கள் பஞ்சாயத்தின் வாக்காளர் பட்டியல்களைத் தீவிரமாகத் திருத்தும் வேலையை, இந்த ஆண்டு மேற்கொண்டிருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இந்த வேலைத் திட்டப்படி தீவிர திருத்தம் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்போர் (என்யுமரேட்டர்கள்) 15-3-1961 முதல் 29-3-1961 வரை வீட்டுக்கு வீடு சென்று கணக்கெடுக்க வருவார்கள். இதற்கென்று தனியாக நியமிக்கப் பட்டுள்ள மேற்பார்வையாளர்கள் (சூபர்வைசர்கள்) கணக்கெடுப்பவர்களின் வேலையை இந்தக் கால அளவிலும், மேற்கொண்டு 15 நாட்களுக்கு சரிபார்ப்பார்கள். உங்கள் பஞ்சாயத்துக்கு வரவிருக்கும் கணக்கெடுப்பவர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை இதனுடன் அனுப்பியுள்ளேன்.

2. இப்பொழுது தயாரிக்கும் வாக்காளர் பட்டியல்கள் 1962, பொதுத் தேர்தலுக்காகப் பயன்படுத்தப்படும் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். வரும் பொதுத் தேர்தல்களில், ஒருவர் தமது வாக்கைச் செலுத்த விரும்பினால், இந்த ஆண்டு தயாரிக்கப்படும் வாக்காளர் பட்டியலில் அவர் தம் பெயரைச் சேர்த்துக்கொள்ள ஏற்பட வேண்டும். தகுதி பெற்ற ஒவ்வொருவர் பெயரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும். அன்றியும், இறந்து போனவர்கள் ஊரைவிட்டுப் போய் விட்டவர்கள் போன்ற எல்லோருடைய பெயர்களையும் பட்டியலிலிருந்து நீக்கவேண்டும். அப்போது தான் இந்தப் பட்டியலைப் பிழையின்றித் தயாரித்திருப்பதாக நாம் கருதலாம். வாக்காளர் பட்டியல்களை அவ்வாறு பிழையின்றித் திருத்தும் வேலையைத் தேர்தல் அதிகாரிகள் மட்டும் செய்துவிடமுடியாது. உள்ளூர்வாசிகளும், அங்குப் பழக்கமுள்ள உள்ளூர் அதிகாரிகளும், மனமுவந்து ஒத்துழைத்து, உதவினால் ஒழிய, இதைச் செய்ய முடியாது. ஆகவே, வாக்காளர் பட்டியலைத் திருத்தும் வேலையில் ஈடுபட்டுள்ள கணக்கெடுப்போர், மேற் பார்வையாளர்கள், மற்றத் தேர்தல் அதிகாரிகள் இவர்களுக்கு உங்களால் இயன்ற ஒத்துழைப்பையும் உதவியையும் அளித்து, அவர்கள் உங்கள் பஞ்சாயத்து வாக்காளர் பட்டியல்களைக் கூடுமானவரை பிழையின்றித் தயாரிப்பதற்கு, நீங்கள் உதவி புரியவேண்டுமென்று உங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படித் தயாரித்த மசோதா பட்டியல்களின் நகல் ஒன்று, பூர்வாங்கமாக வெளியிடப்பட்ட பிறகு உங்களுக்கு அனுப்பப்படும். அதை நீங்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அதில் ஏதாவது திருத்தம் அவசியமானால் தெரிவிக்கலாம். பட்டியல்களைப் பூர்வாங்கமாக வெளியிட்ட பிறகு அவற்றில் சிலருடைய பெயரைச் சேர்க்கவேண்டுமென்று நீங்கள் கருதினால், அதற்குரிய பாரங்களில் அவர்கள் தங்கள் மனுக்களை அனுப்பும்படி கேட்கலாம். இந்த பாரங்கள், பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளிடமும் நிர்வாக அதிகாரிகள் இல்லாத இடங்களில் கிராம அதிகாரிகளிடமும் கிடைக்கும். பட்டியல்கள் பூர்வாங்கமாக வெளியான தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இவற்றையெல்லாம் செய்தாகவேண்டும். இந்தத் தேதி உங்களுக்கு அறிவிக்கப்படும். இதற்காக தங்களுக்கு ஏதேனும் உதவி தேவையிருந்தால், அதை தாசில்தார்களும், தேர்தல் டிபுடி தாசில்தார்களும் மனமுவந்து செய்வார்கள். அப்படி உதவி புரியுமாறு அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தங்கள் நன்றியுள்ள,

எஸ். பி. சீனுவாசன்

இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் உதயம்

தமிழ் வருடப்பிறப்பன்று (13-4-61) நமது மாநிலத்தில் இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (131) அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கிவிடும்.

முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன்களின் துவக்க விழாச் சமயத்தில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடுகள் போன்ற மகாநாடுகள் இப்பொழுது நடைபெறா. துவக்கப்பட இருக்கும் 131 பஞ்சாயத்து யூனியன்களிலும் யூனியன் துவக்க விழாக் கொண்டாட்டங்கள் முன்பு (2-10-60) அன்று நடைபெற்ற மாதிரியே, இப்பொழுதும் நடைபெறவேண்டும். முன்பு என்ன விதி முறைகள் இது சம்பந்தமாகக் கையாளப்பட்டனவோ, அவையே இப்பொழுதும் கையாளப்படவேண்டும்.

1-10-60 தேதிக்குப்பிறகு அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களில் மட்டும், முன்பு கொண்டாடப்பட்ட மாதிரியே, ஒரு நாள் பஞ்சாயத்துத் தினமாகக் கொண்டாடப்படவேண்டும்.

இதற்காக அரசாங்க நிதியிலிருந்து எதுவும் செலவு செய்யக்கூடாது.

(கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை 13-3-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 749-ன் சுருக்கம்)

தமிழ்நாடு அரசாங்கத்தின் 1961-62-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை

விசேஷ அம்சங்கள்.

* இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் புது வரிகள் ஒன்றும் இல்லை.
* இந்த ஆண்டு 285 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது.
* 10 கோடி ரூபாய் பொது மக்களிடமிருந்து இந்த ஆண்டு அரசாங்கம் கடனாகத் திரட்டும்.
* பதினொன்றாவது வகுப்பு வரையில், ஜாதிமத வித்தியாசமின்றி, எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படும்.
* 1961-62-ல் மூலதனச் செலவு ரூ. 18,10 லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
* சமுதாய நலத் திட்டத்திற்காக, மூன்றாவது திட்டத்தில் 20·36 கோடி ரூபாய் செலவழிக்கப்படும். 1961-62 ஆண்டில் மட்டும் 3·66 கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டுள்ளது.

எழுத்தாளர்களின் கவனத்திற்கு

பிறர் எழுதிய கதைகளையும், நாடகங்களையும், கட்டுரைகளையும் தழுவாமலும், மொழிபெயர்க்காமலும் சொந்த கற்பனை அல்லது அனுபவத்தையொட்டி, எழுதியனுப்பப்படும் சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள். நாட்டுப் பாடல்கள், கிராம நலம் பற்றிய கட்டுரைகள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து **கிராம நலத்தில்** வெளியிடுவதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. **கிராம நலத்தில்** பிரசுரிக்கப்பட்ட பிறகு, அவைகளில், **சிறந்தவற்றிற்கு** ஒவ்வொரு மாதமும் கீழ்க்கண்டவாறு சன்மானம் வழங்கப்படும் :—

சிறு கதை.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இது 5 பக்கங்களுக்குட்பட்டு இருக்கவேண்டும்)—ரூ. 25,

ஓரங்க நாடகம்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், 6 பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 25.

பாடல்கள்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இவை ஒரு பக்கத்துக்குள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

கிராம வளம், காந்திய நிர்மாணத் திட்டங்கள் பற்றிய கட்டுரைகள்.—(இவை "கிராம நலத்தில்" வெளியிட்டால், இரண்டு பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

முக்கிய குறிப்பு—சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள் முதலியவை **பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், காந்திய தத்துவம்** முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதுடன், விவசாயம் பற்றியோ சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் தமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை யொட்டியோ எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும். சிறந்த கதைகளுக்கும், நாடகங்களுக்கும், நாட்டுப் பாடல்களுக்கும், கட்டுரைகளுக்கும் சன்மானமளிப்பது பற்றி ஆசிரியர் செய்யும் முடிவே இறுதியானது. "கிராம நலத்தில்" பிரசுரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் முதலியவற்றைத் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல. எனவே, தங்கள் எழுத்தோவியங்களின் மூலத்தை அனுப்பாமல், நகலை மட்டும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அரசாங்க உத்தியோகச் சார்புள்ளவர்களும், இந்தப்பணியில் நேரடியாகக் கலந்துகொள்ளலாம். அரசாங்கப் பத்திரிகையான "கிராம நலத்திற்கு" எழுத, அவர்களுக்கு எந்த விதத் தடையும் இல்லை. சன்மானம் பெற அவர்களும் உரிமை உள்ளவர் ஆவர்.

சிறப்பாக, புதிய எழுத்தாளர்கள்—கிராம சேவையில் ஊறியவர்கள்—தாம் பெற்ற அனுபவங்களை மற்றவருடன் பகிர்ந்துகொள்ளும் தொண்டுள்ளமும் கலை ஆர்வமும் படைத்தவர்கள்—இந்த வாய்ப்பை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டு, திறமை மிக்க எழுத்தோவியங்களை உடனடியாக அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்,
"கிராம நலம்"
கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9.



1961-62-க்கான நிதி நிலை அறிக்கையைச் சட்டமன்றத்தில் 25-2-61 அன்று நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் சமர்ப்பித்தார்கள்.

1-3-61 அன்று ராஜாஜி மண்டபத்தில் பரிசுப் பத்திரங்கள் மூன்றுவது குலுக்கல் நடைபெற்றது.

ராஜபவனில் மாநிலக் கவர்னர் திரு விஷ்ணுராம்மேதி அவர்களிடம் ஜனத் தொகைக் கணிப்பு விவரங்களைக் கேட்டு சேகரித்துக் கொள்கிறார் மாநில ஜனத்தொகைக் கணிப்பு அதிகாரி திரு பி.கே. நம்பியார், ஐ.ஏ.எஸ்.



இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, இங்கிலாந்தின் முதல் அமைச்சராக இருந்த அட்லி பிரபு 3-3-61-ல் சென்னைக்கு விஜயம் செய்தார். விமான நிலையத்தில் அதிகாரிகள் அவரை வரவேற்றனர்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் மகள் அனிதாபோஸ் (இடது கோடியில் இருப்பவர்) சென்னை வந்தபோது, 25-2-61-ல் ராஜாஜி மண்டபத்தில் அவருக்கு விருந்துபசாரம் நடைபெற்றது.

ராஜபவனத்தில் **17-2-61** அன்று "பூடான்" மகாராஜாவுக்கு சென்னை கவர்னரால் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ருஷ்ய மந்திரி சபையின் முதல் துணைத் தலைவர் திரு. கோசிகின் 27-2-61 அன்று அரசாங்கத் தலைமை அலுவலகத்தில் மாநில அமைச்சர்களைச் சந்தித்துப் பேசினர்.



இந்து அறக்கட்டளைக் குழுவினருக்கு முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் 15-2-61 அன்று ஒரு தேனீர் விருந்து அளித்தார்.

சிக்கிம் கலாச்சாரக் குழுவினர் 9—2—61 அன்று சென்னைக்கு விஜயம் செய்தனர்.



நேபாளத்திலிருந்து 15 உறுப்பினர்கள் அடங்கிய நல்லெண்ணத் தூது கோஷ்டி ஒன்று 2—3—61-ல் சென்னைக்கு விஜயம் செய்தது.

[பூடான், சிக்கிம், நேபாளம் ஆகிய நாடுகள் பாரதத்தின் வடக்கு எல்லையைச் சார்ந்திருப்பவை.]

"ஊருக்கு நல்லது சொல்வேன்"

பாரதியார்

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு

திரு. கோ. வேங்கடாசலபதி, கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

[சென்ற மாதம் தொடங்கி, கிராம அபிவிருத்திக் கமிஷனர், தம்முடைய கருத்துக்களை, "**கிராம நலம்**" பத்திரிகை வாயிலாக, கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுடன் பரிமாறிக்கொள்ள முயன்று வருகிறார். தமிழ் நாடெங்கும் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் சென்று நிலைமையை நேரில் கண்டு ஆவன செய்யும் கடமையும் பொறுப்பும் கொண்ட அவர் கூறும் செய்திகள், பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய "சமூகக் கல்வி" பரவுவதற்குப் பயன் படலாம். பஞ்சாயத்து ஆட்சியின் தூண்களாகத் திகழும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் அவற்றைப் படிப்பதோடு, தம்முடைய அனுபவங்களையும், பொதுப் பிரச்னைகளையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். அப்போதுதான், இந்தக் "**கடிதக் கருத்தரங்கு**", பஞ்சாயத்து அபிவிருத்திக்குப் பெரிதும் துணைபுரியும்.

—ஆசிரியர்]

அன்புள்ள பஞ்சாயத்துத் தலைவருக்கு,

வணக்கம். பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாக, என்னுடைய கருத்துக்களைக் "**கிராம நலம்**" மூலம் தங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது, என்னுடைய விருப்பம் என்று, சென்ற மாதக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

முதலாவதாக, எனக்கு அவசியம் என்று தோன்றும் ஒரு விஷயத்தை இக்கடிதத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

தாங்கள், ஊரிலுள்ள எல்லோருடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். பஞ்சாயத்துத் தலைவராவதற்கு முன்பு, தாங்கள் தங்களுடைய குடும்பத்திற்கு மட்டும், தலைவராக இருந்து, குடும்பத்தினுடைய நல்வாழ்விற்கான விஷயங்களைப்பற்றி யோசித்தும், வேலை செய்தும் வந்திருப்பீர்கள். இப்போது, தாங்கள் கிராமத்தினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால், கிராமத்தார்கள் எல்லோருடைய க்ஷேமத்தையும், நலத்தையும் பேணி வளர்க்கும் பொறுப்பு தங்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. கிராமத் தலைவர் என்ற நிலையில், தாங்கள் தங்களுடைய கிராமமாகிய பெரிய குடும்பத்தின் தலைவராக, ஊழியராக பணிசெய்பவராகஆகியிருக்கிறீர்கள்.

வாழ்க்கை வசதிகள் ஏற்பட..

எனவே, தங்களுடைய கிராமமாகிய பெரிய குடும்பத்திற்கு, எல்லாத் துறைகளிலும் போதுமான வசதிகள் கிடைக்கிறதா, ஊரிலுள்ள உணவுப் பொருள்கள் போதுமானதாக இருக்கிறதா, அல்லது பற்றுக்குறையா, ஊரிலுள்ள அத்தனை ஆண்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், உடுத்துவதற்கும் போதுமான துணிமணிகள் இருக்கிறதா, குடியிருப்பதற்கு எல்லோருக்கும் குறைந்த அளவு வீட்டு வசதி இருக்கிறதா, உணவு, உடை, வீட்டு வசதி செய்து கொள்வதற்கு வேண்டிய பொருள் வருமானம் தரக்கூடிய வேலை வாய்ப்பை, எல்லோரும் பெற்றிருக்கிறார்களா, என்ற விஷயங்களைத் தெரிந்து, ஊரிலுள்ள அத்தனை பேர்களுக்கும், எல்லா வசதிகளும் ஏற்பட வேலை செய்வது, பஞ்சாயத்துத் தலைவர் என்ற முறையில், தங்களுடைய கடமை என்று சொன்னால், அது மிகையாகாது.

"பயிற்றிப் பல கல்வி தந்து.."

மேலே சொன்ன வசதிகளுடன், ஊரிலுள்ள குழந்தைகள் எல்லோரும் நல்ல கல்வி பெறுவதற்கான ஏற்பாடுகளும் ஊரிலிருக்க வேண்டும். பள்ளிக்கூடத்திற்கு வரும் பிள்ளைகளில், பணக்கார வீட்டுப் பிள்ளைகள், ஏழை வீட்டுப் பிள்ளைகள் என்ற வித்தியாசம் இல்லாமல், எல்லாப் பிள்ளைகளுக்கும், மத்தியானம் ஒரு வேளை உணவு கொடுப்பதற்கு, பஞ்சாயத்து மூலம், தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டியதாயிருக்கும். மத்திய உணவு மட்டுமல்ல. மனத் திருப்தியுள்ள ஆசிரியர்கள் ஊரிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் நல்ல கல்வி கொடுத்து, குழந்தைகள் முன்னேறுவதற்காகப் பாடுபட்டு வருகிறார்களா என்பதையும், தாங்கள் கவனிக்க வேண்டியதாயிருக்கும்.

அத்துடன், ஊரிலுள்ளவர்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான வைத்திய வசதிக்கு ஏற்பாடு இருக்கிறதா

இல்லையென்றால் அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றியும், தாங்கள் ஆலோசிக்கவேண்டியதா யிருக்கும். எனவே, ஊரிலுள்ள எல்லா குடும்பங்களையும் ஒரு பெரிய குடும்பமாகத் தாங்கள் எண்ணி இந்த ஊராகிய பெரிய குடும்பத்திற்கு வேண்டும் வாழ்க்கை வசதிகள் ஏற்படுவதற்கான விஷயங்களைப்பற்றித் தாங்களும், தங்களுக்குத் துணைவர்களாயுள்ள பஞ்சாயத்து அங்கத்தினர்களும், இன்னும் ஊரிலுள்ள முக்கியஸ்தர்களும், மாதம் ஒரு முறையாவது கூடி யோசித்து, கிராம நலம் பெருகுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்.

இந்தக் காரியங்களெல்லாம், நினைத்த மாத்திரத்திலேயே ஒரே நாளில் பூர்த்தியாகிவிட இயலாது. எத்தனையோ வருஷக்கணக்காக நம்முடைய கிராமங்கள் பல துறைகளிலும் பாழ்பட்டு, வறுமை, அறியாமை நிறைந்த இடங்களாகியிருக்கின்றன. ஊர்களில் போதிய சுத்தமோ, சுகாதார ஏற்பாடுகளோ இல்லையென்பது, தங்களுக்குத் தெரியும். சில ஊர்களில் சுத்தமான குடிதண்ணீர் வசதிகூட இன்னும் ஏற்படவில்லை. தங்களுடைய கிராமத்தில் குடிதண்ணீர் எப்படி இருக்கிறது, அதை இன்னும் எந்த வழியில் அபிவிருத்தி செய்யலாம் என்பதைப் பற்றியும், தாங்கள் யோசிக்க வேண்டியிருக்கும்.

ஊரே ஒரு பெரிய குடும்பம்

சுருங்கக் கூறின், தாங்கள் தங்களுடைய சொந்தக் குடும்ப நலத்திற்குப் பொறுப்பேற்றிருப்பதுடன், ஊரிலுள்ள அத்தனை குடும்பங்களுடைய நல் வாழ்விற்கும் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். இது செய்து முடிப்பதற்கரிய பெரிய வேலையாயிற்றே, இது நம்மால் முடியுமா, என்று நீங்கள் மனந்தளர வேண்டாம். இந்தச் சமயத்தில், பொய்யாமொழிப் புலவராகிய திருவள்ளுவர் சொல்லியுள்ள ஒரு திருக்குறளை, தங்களுக்குஞாபகப்படுத்த விரும்புகிறேன். "ஊரை எல்லா வசதிகளும் உடையதாக, ஒற்றுமையும் அன்பும் நிறைந்ததாக ஆக்குவது அருமையான வேலையாயிற்றே. இது நம்மால் முடியுமா," என்ற மனச்சோர்வு வேண்டியதில்லை. "பஞ்சாயத்துத் தலைவர், முழு முயற்சி செய்தால், வசதிகள் இல்லாத கிராமங்களை, எல்லா வசதிகளும் பெற்ற நல்ல கிராமங்களாகப் பஞ்சாயத்துத் தலைவர்கள் செய்து விட்டார்கள் என்ற பெருமையை அடையலாம்," என்ற பொருள்படும்படி—

"அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

அதாவது, "தம் சிறுமை நோக்கி நாம் இவ்வினை முடித்தல் அருமையுடையது என்று கருதித் தளரா தொழிக ; அது முடித்தற்கேற்ற பெருமையைத் தமக்கு முயற்சி உண்டாக்கும்" என்பது இதன் பொருள் "முயற்சி திருவினை ஆக்கும்" என்பதையும், தாங்கள் அறிவீர்கள். "விடாது முயற்சித்தால், அரியனவும் எளிதின் முடியும்" என்பது, பலருடைய அனுபவம்.

"ஊரெல்லாம் ஒரு குடும்பம் ஆகவேண்டும், ஊரிலுள்ளபேரெல்லாம் ஒருமித்து உழைக்க வேண்டும். அதற்கு, என்னால் முடிந்ததைச் செய்ய முயற்சிப்பேன்" என்பதே, தங்களுடைய இடையறா எண்ணமாக இருக்கட்டும். சேவை மனப்பான்மையுடன் கிராமங்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றெண்ணி, முயற்சி செய்யும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு, ஊர் மக்களின் ஒத்துழைப்பு பூரணமான அளவு நிச்சயம் கிடைக்கும். இதில் சந்தேகமில்லை. நான் வெளியில் பல இடங்களுக்குச் செல்லும்போது, இம்மாதிரி பஞ்சாயத்துத் தலைவர்களைச் சந்திக்கிறேன். அவர்களின் முயற்சியின் பயனாக, அபிவிருத்தியாகி வரும் கிராமங்களையும் பார்த்திருக்கிறேன். மனப்பூர்வமாக ஊர் அபிவிருத்திக்கு முயற்சி செய்யும் பஞ்சாயத்துத் தலைவர்களின் முயற்சிகளுக்கு, ஊரார், நல்ல ஒத்துழைப்பு கொடுத்து வருவதையும், பல இடங்களில் பார்த்து வருகிறேன்.

எனவே, தங்களுடைய பஞ்சாயத்து எல்லைக்குள்ளிருக்கும் அத்தனை பேர்களையும், ஜாதி, மத வித்தியாசமில்லாமல், தங்களுடைய ஒரு கூட்டுக் குடும்பமாகக் கருத வேண்டும். அந்த எண்ணத்துடன் வேலை செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்பதே, என்னுடைய வேண்டுகோள். இந்த நல்ல வேலையில் ஆண்டவன் அருளும், அரசாங்கத்தின் ஒத்துழைப்பும், தங்களுக்குப் போதிய அளவு கிடைக்கும் என்பதில், சந்தேகமில்லை.

நான் எழுதியுள்ள இந்தக் கடிதத்தில் குறித்துள்ள விஷயங்களைப் பற்றி தங்களுக்கு ஏதேனும் விளக்கம் வேண்டுமாகில், என்னுடைய முந்தைய கடிதத்தில் குறித்துள்ளபடி, "**கிராம நலம்**" ஆசிரியருக்குத் தெரியப்படுத்துவீர்களையானால், எனக்குமிகவும் சந்தோஷமாயிருக்கும். மற்ற விவரங்கள் பின்னால் .

தங்களுடைய அன்பு நிறைந்த ஒத்துழைப்பை விரும்பும்,

தங்கள் அன்புள்ள,

கோ. வேங்கடாசலபதி

பஞ்சாயத்து நிர்வாகம்—

கிராம அதிகாரிகளுக்கு அலவன்ஸ் அளித்தல்

தமிழ்நாடு அரசாங்கம்

கிராம அபிவிருத்தி, தலநிர்வாகத் துறை

1961-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 411.

[பஞ்சாயத்து அபிவிருத்தி—பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ்—ஆகஸ்ட் 9, 1960 தேதியிட்ட கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை அரசாங்க ஆணை எண் 64 -ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள்—சில விஷயங்களில் விளக்கங்கள்—பிறப்பிக்கப்படுகின்றன.]

பார்க்கவும்:— 9-8-60 தேதியிட்ட கிராம அபிவிருத்தித்துறை அரசாங்க ஆணை எண் 644.

ஆணை:

கிராம அபிவிருத்தி, தலநிர்வாகத்துறை அரசாங்க ஆணை எண் 644-ல் பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் சார்பாக, கிராம அதிகாரிகள் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றி குறிப்பிட்டு அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்தது. இந்தஆணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள்பற்றி, அதன் சம்பந்தப்பட்ட பல பிரச்னைகள், சில மாவட்டக் கலெக்டர்களினால் கிளப்பப்பட்டுள்ளன. இந்தப் பிரச்னைகளில் சில ரெவின்யூ போர்டுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, புனராலோசனை செய்யப்பட்டன. அவைகளில் பல, 1961 ஜனவரி 10, 12 தேதிகளில் நடைபெற்ற கலெக்டர்கள்-அரசாங்க அதிகாரிகள் கூட்டத்தில் பெருவாரியான முறையில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. ரெவின்யூ போர்டின் ஆலோசனைகளின் பேரிலும், கலெக்டர்கள் கூட்டத்தில் நடைபெற்ற விவாதங்களை அடிப்படையாகக் கொண்டும், இந்தப் பிரச்னைகளை அரசாங்கம் கவனத்துடன் ஆராய்ந்து பார்த்து, அதன் விளைவாக, சில முடிவுகளைச் செய்திருக்கிறது. எழுப்பப்பட்ட பிரச்னைகளும், அவைகள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட முடிவுகளும் வரிசை வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

2 கேள்வி I

(i) தனக்கென்று தனித்தனியாக பஞ்சாயத்துக்கள் உள்ள இரண்டு கிராமங்களுக்குப பொறுப்பாளியாக ஒரு கிராம அதிகாரி இருக்கும் இடங்களில் :

(அ) வரி வசூல் செய்தல், பதிவுப்புத்தகங்களைப் பராமரித்தல் ஆகிய வேலைகளை இரு கிராமங்களுக்கும் செய்யும்படி கிராம அதிகாரி கேட்டுக்கொள்ளப்படலாம் ?

(ஆ) இரண்டு கிராமங்களுக்கும் கிராமப் பஞ்சாயத்து காரியதரிசி வேலையை கிராம கர்ணம் செய்யலாம ?

(இ) மேற்குறிப்பிட்ட (அ) (ஆ) அம்சங்களில் எந்த விகிதாச்சாரத்தில் அலவன்ஸ் அவருக்கு கொடுக்கப்பட வேண்டும்?

முடிவு:

(ii) (அ) தன் பொறுப்பில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் ரெவின்யூ வேலைகள், அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக தேவைப்படுகிற எல்லா பதிவுக்கட்டுகளையும், பதிவுப் புத்தகங்களையும், பராமரித்து வரும் பொறுப்பு கர்ணத்தினுடையது. அதே போல், தன்னுடைய எல்லைப் பொறுப்பில் உள்ள எல்லாக் கிராமங்கள் பற்றிய வரி வசூல் வேலையை மணியக்காரர் செய்ய வேண்டும்.

ii (ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களில் கிராமப் பஞ்சாயத்துக் காரியதரிசியின் வேலையை கர்ணம் செய்ய வேண்டுவதில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களில் கிராமப் பஞ்சாயத்துக் காரியதரிசி என்ற முறையில் அவருடைய பணி தேவைப்பட்டால், அப்படிப்பட்ட பணிகளை அவர் எந்தக் குறிப்பிட்ட கிராமத்தில் செய்யலாம் என்பதை ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் தீர்மானிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மற்ற கிராமத்தின் பஞ்சாயத்து, தனக்கென்று விசேஷ ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும்படி விட்டுவிடவேண்டும்.

(ii) (இ) தன்னுடைய பொறுப்பில் விடப்பட்டிருக்கும் கிராமங்களுக்கு தன்னுடைய கடமைகளைச் செய்வதற்காக கிராம அதிகாரிக்கு (கர்ணம் அல்லது மணியக்காரர் யார் அதைச் செய்கிறாரோ அவருக்கு) விதிகளின்படி அநுமதிக்கப்பட்ட ஒரே ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ் அளிக்கப்பட்டால் போதுமானது. இதை, சாதாரணப் பொறுப்புகள் என்றோ வருவான பொறுப்புகள் என்றோ நிர்ணயிப்பது கர்ணம், அல்லது மணியக்காரரோ கடைசியாகக் கிடைக்கக்கூடிய 12-ம் நெ. கணக்கில் கண்டுள்ளபடி, அவருடைய எல்லைப் பொறுப்பில் விடப்பட்டிருக்கும் எல்லாக் கிராமங்களின் தேவைகளைப் பொறுத்திருக்கவேண்டும்.

3 கேள்வி II

(i) ஒரு பஞ்சாயத்தில் இரண்டு ரெவின்யூ கிராமங்கள் அடங்கியிருந்து, ஒவ்வொன்றும் ஒரு கர்ணத்தின் பொறுப்பில் இருந்தால் என்ன மாதிரி ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் ?

முடிவு :

(ii) கிராமப் பஞ்சாயத்துக் காரியதரிசியின் கடமைகள் என்று குறிப்பிட்டுள்ள கடமைகள் தவிர, மற்ற எல்லாக்

க்டமைகளில் எல்லாம், ஒவ்வொரு கர்ணமும் தன்னுடைய எல்லைப் பொறுப்பில் விடப்பட்டுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கு உதவி செய்ய வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக் காரியதரிசியின் அலுவல்களைச் செய்ய இரண்டு கர்ணங்களில் யாராவது ஒருவருடைய சேவையைப் பஞ்சாயத்து பெற்றுக் கொள்ளலாம். அல்லது வேறு விசேஷ ஏற்பாடுகளைத் தானே செய்து கொள்ளலாம்.

4 கேள்வி III

(i) ஒரு ரெவின்யூ கிராமத்தில் ஒரு பஞ்சாயத்துக்கு மேல் இருந்தால், கிராம அதிகாரி அதிகப்படியான பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ் பெற அருகதையுடையவரா?

முடிவு :

இந்த மாதிரி விஷயங்களில், அதிகப்படியான அலவன்ஸ் அளிக்கக்கூடாது. கிராம அதிகாரியின் பொறுப்பில் உள்ள மொத்த எல்லை அளவை வைத்து அளிக்கப்பட வேண்டிய பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸின் அளவு நிர்ணயிக்கப்படவேண்டும்.

5 கேள்வி IV

(i) பல ரெவின்யூ கிராமங்கள் ஒரு பஞ்சாயத்தில் சேர்க்கப்பட்டிருந்தால், பல கிராமங்களின் கிராம அதிகாரிகளிடையே பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ் பகிர்ந்தளிக்கப்படலாமா?

முடிவு :

(ii) தன்னுடைய சொந்த எல்லைப் பொறுப்பளவுக்கு ஒவ்வொரு கிராம அதிகாரியும் அவருக்கு உரித்தான பஞ்சாயத்து அபிவிருத்தி அலவென்ஸைப் பெறலாம். ஆகையால், ஒரு அலவென்ஸை ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரிகளிடையே பகிர்ந்தளிப்பது என்ற பிரச்னை எழவேண்டிய அவசியம் இல்லை.

6 கேள்வி V

(i) இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மணியக்காரர் இருக்கும் கிராமத்தில், அளிக்கப்பட வேண்டிய அலவன்ஸின் அளவு என்ன?

முடிவு :

(ii) இந்தக் கேள்விக்குப் பதில், மணியக்காரர், கூட்டு (அல்லது உதவி) மணியக்காரிடையே எல்லைப் பிரதேச பொறுப்பு பிரிக்கப்பட்டிருக்கிறதா இல்லையாயென்பதைப் பொறுத்திருக்கும். அப்படி எல்லைப் பொறுப்புக்கள் பிரிக்கப்பட்டிருந்தால், அந்த மணியக்காரருக்கு, அவருடைய பொறுப்புக்கள் சாதாரண பொறுப்புகளா அல்லது லகுவான பொறுப்புகளா என்பதைப் பொறுத்து அலவன்ஸ் அளிக்கப்படவேண்டும். அப்படி ஒரு பிரிவு செய்யப்படாமல் இருந்தால், அப்படி இருந்தாலும், மணியக்காருக்குமட்டும் அலவன்ஸ் அளிக்கப்படலாம். மற்றவர்களுக்கு அளிக்கக்கூடாது.

7 கேள்வி VI

(i) சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வராத வட்டாரங்களுக்கும் அல்லது பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்படாத வட்டாரங்களில் கூட, அலவன்ஸ் அளிக்கப்படலாமா?

முடிவு :

(ii) இந்த விஷயத்தில் கிராம அபிவிருத்தித்துறை அரசாங்க ஆணை எண் 644-ல் 16-வது பாராவில் கண்டுள்ள உத்தரவுகள் தெளிவாக இருக்கின்றன. எல்லா இடங்களிலும் 1—1—1961 முதல் இந்த அலவன்ஸ் அளிக்கப்படலாம். ஆனால் முதல் தொகுதி வட்டாரங்களில் உள்ள கிராமங்களில் 2—10—60 முதலே இந்த அலவன்ஸ் அளிக்கப்படவேண்டும்.

8 கேள்வி VII

(i) பகுதி நேர குமாஸ்தாவுக்கு அளிக்கப்பட வேண்டிய ஊதியத்தை எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்ய வேண்டும்? அதாவது, அப்படி அளிக்கப்படும் தொகைக்காக உபயோகப்படுத்தப்படும் பஞ்சாயத்தின் வருமானத்தின் அதிகப்படியான சத விகிதம் எவ்வளவு? எந்த ஊதிய விகிதாச்சாரத்தில் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்?

முடிவு :

(ii) பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்களுக்கு சேர வேண்டிய எல்லா நிலவரியை வசூல் செய்யும் பொறுப்பை கிராம மணியக்காரர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசாங்க ஆணை எண் 644-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளில் காணப்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் மணியக்காரர் அவர் இஷ்டப்படி நடந்து கொள்ள முடியாது. ஆனால், இதனால், பஞ்சாயத்துத் தலைவர், அவர் விரும்பினால், இந்த வசூல் வேலையை அவரே செய்வதற்கு தடை ஒன்றுமில்லை. ஆகவே, இந்த வசூல் வேலையை பஞ்சாயத்துத் தலைவர் ஏற்றுக் கொண்டுசெய்யலாம், ஆனால், அப்படி வசூல் செய்யும் வேலையில் யாரையாவது நியமனம் செய்து அதனால் ஏற்படும் செலவிற்காக பஞ்சாயத்து நிதியை உபயோகப்படுத்திக்கொள்ளக் கூடாது.

(ii) பஞ்சாயத்துக் காரியதரிசியின் அலுவல்கள் சம்பந்தப்பட்ட வேலையைப் பொறுத்தமட்டில், இந்த வேலைகளுக்காக கர்ணத்தை அமர்த்திக்கொள்வதா வேண்டாமா என்ற விஷயத்தில் பஞ்சாயத்து தன்னுடைய இஷ்டப்படி நடந்து கொள்ளலாம் என்று அரசாங்க ஆணை எண் 644. வழிவகை செய்துள்ளது. இந்த வேலைக்காக, கர்ணத்தின் சேவையைப் பயன்படுத்துவதில்லை என்று பஞ்சாயத்து முடிவெடுத்தால், இந்த வேலைக்காக ஒரு குமாஸ்தாவை, பஞ்சாயத்து நியமனம் செய்யலாம் ஆனால் இப்படி ஒரு பகுதி நேர குமாஸ்தாவை நியமனம் செய்து அவருக்கு ஊதியம் அளிப்பதினால் ஏற்படும் மொத்தச்

செலவானது, பஞ்சாயத்தின் (வீட்டு வரி ஈட்டு மாணியத்தையும் சேர்த்து, ஆனால் சட்டத்தில் சொல்லாத சர்க்கார் மானியங்களை எல்லாம் சேர்க்காமல்) வருகின்ற வருடாந்திர வருமானத்தில் 6¼ சத விகிதத்திற்கு மேல் போகக்கூடாது.

9 கேள்வி VIII

(i) ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தை முன்னிட்டு, கிராம மணியக்காரர் பதவி தாற்காலிகமாக காலியாக இருந்தால், யார் வரி வசூல் வேலையைச் செய்ய வேண்டும் ?

முடிவு :

(ii) அந்த சந்தர்ப்பங்களில் என்ன ஏற்பாடுகள் செய்தால்நலமாக இருக்குமோ அந்த ஏற்பாடுகள் சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியினால் செய்யப்பட வேண்டும். சாதாரணமாக, நிலவரி வசூல் செய்வதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் இந்த காரியத்திற்கும் போதுமானவையாக இருக்கும்.

10 கேள்வி IX

(i) மணியக்காரர் தன்னுடைய வேலையில் கவனக் குறைவாக நடந்து கொண்டால் யார் அவரைக் கண்காணிப்பது ?

முடிவு :

(ii) வட்டார வளர்ச்சி அதிகாரி அல்லது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் இருக்கும் வட்டாரம் ஒவ்வொன்றிலும் அரசாங்க ஆணை எண் 644-ன் 18-வது பாராவில் சொல்லப்பட்டுள்ள உத்தரவுகள் இதற்குப் பொருந்தும். மற்ற வட்டாரங்களில், அந்த வட்டாரத்திற்கு பஞ்சாயத்து கமிஷனர் நியமனம் செய்யப்படும் வரையில், இந்த வேலையை வட்டாரத் திட்ட அதிகாரி செய்வார்.

(i) (1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 126-வது பிரிவின்படி) அரசாங்க ஆணை எண் 644-ல் கண்டுள்ள உத்திரவுகள் ஒவ்வொன்றும் ரெவின்யூ இலாகாவின் கீழ்த்தர அலுவலர்களின் பொறுப்புகளிலிருந்து அவர்களை விலக்கிவிடவில்லை யென்பதைத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அரசாங்கத்திற்கு சேரவேண்டிய நிலவரி வசூல் விஷயத்தில் செய்வது மாதிரியே, தாசில்தார்கள் பஞ்சாயத்துக்கு சேர வேண்டிய வருமானங்களை வசூல் செய்யும் விஷயத்திலும், கிராம மணியக்காரர்களின் வேலைகளை கண்காணித்து வர வேண்டும்.

(iii) வசூல் செய்யும் வேலையை மிகவும் கவனத்துடனும் தொடர்ந்தும் கண்காணித்து வருவதும், பின்பு அதைக் கிராமப் பஞ்சாயத்து நிதியில் சேர்ப்பதும், அதைப் பற்றி வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு அவ்வப்பொழுது தெரியப்படுத்துவதும் பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரியின் கடமையாகும். ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டிய கேஸ்களில் வட்டார வளர்ச்சி அதிகாரி அரசாங்க ஆணை எண் 644-ல் கண்டுள்ள உத்தரவுகளின் படி நடவடிக்கை எடுப்பார்.

11 கேள்வி X

(i) வசூல் செய்யப்பட்ட பணத்தை எப்படிக் கணக்கில் போடுவது ?

முடிவு :

(ii) மணியக்காரர் இந்தத் தொகையை நேரடியாக பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் சேர்ப்பிக்க வசதி செய்து தரும் வகையில், இப்பொழுது இருக்கிற பணம் செலுத்தும் சீட்டு (Chalan Form) முறை தகுந்த முறையில் மாற்றியமைக்கப்படும்.

12 கேள்வி XI

(i) மணியக்காரருக்கு வசூல் செய்யும் வேலையை ஒப்படைக்க தலைவர், மறுதளிக்கலாமா ?

முடிவு :

பஞ்சாயத்துத் தலைவர், தானே இந்த வசூல் செய்யும் வேலையை ஏற்றுக் கொள்ளலாம். அந்தமாதிரி சந்தர்ப்பங்களில், அப்படி வசூல் செய்யும் வேலைக்காக யாரையாவது நியமனம் செய்து, அதனால் ஏற்படும் செலவுக்கு பஞ்சாயத்து நிதியிலிருந்து ஏற்பாடு செய்து கொள்ளக்கூடாது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

13 கேள்வி XII

(i) கிராமப் பஞ்சாயத்து காரியதரிசியின் அலுவல்களைச் செய்ய, கர்ணத்தை அமர்த்திக் கொள்ளலாமா வேண்டாமா என்பது, பஞ்சாயத்தின் இஷ்டமா ? அதேபோல் அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று அளிக்கப்பட்டால், அந்த வேலையைச் செய்வதா வேண்டாமா என்பதை முடிவுகட்டும் சுதந்திரம், கர்ணத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதா ?

முடிவு :

(ii) இந்த விஷயங்களில் அரசாங்க ஆணை எண் 644-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்திரவுகள் மிகவும் தெளிவாக உள்ளன. அப்படி அளிக்கப்படும் பொழுது, அதை மறுத்துவிட, கர்ணத்திற்கு அதிகாரம் இல்லை. ஆனால், பஞ்சாயத்துக் காரியதரிசியின் அலுவல்களை, கர்ணத்திடம் ஒப்படைக்கலாமா வேண்டாமா என்பதை, பஞ்சாயத்து முடிவு செய்து கொள்ள அதற்கு அதிகாரம் உண்டு.

14 கேள்வி XIII

(i) கிராம அதிகாரிகளால் பராமரிக்கப்பட வேண்டிய பதிவுப் புத்தகங்களும் பதிவுக்கட்டுகளும் (Registers and Records) எவை ?

முடிவு :

(ii) வரி எவ்வளவு வசூல் செய்யப்பட்டது என்பதைக் காட்டும் ரிஜிஸ்டரை பராமரிப்பது பற்றி உத்தரவுகள் முன்பே உள்ளன. இப்பொழுது உள்ள பதிவுப் புத்தகங்கள், பதிவுக்கட்டுகள் பற்றி பரிசீலனை செய்து சிபார்சுகள்

செய்ய ஒரு கமிட்டி நியமனம் செய்யப்படுகிறது. இந்த கமிட்டியின் அறிக்கை கிடைத்ததும் அது பரிசீலனை செய்யப்பட்டு அதன் பிறகு, கிராம பதிவுப் புத்தகங்கள், பதிவுக்கட்டுகள் எப்படிப் பராமரிக்கப்பட வேண்டும் என்பது பற்றிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

15 கேள்வி XIV

(i) வரி வசூல் காட்டும் ரிஜிஸ்டர் பஞ்சாயத்தினிடம் இருக்க வேண்டுமா? அல்லது கர்ணத்திடம் இருக்க வேண்டுமா? கேட்பு வசூல் மிச்சத்தைக் காட்டும் ஸ்டேட்மெண்ட் (Demand Collection Balance Statement) ஒன்றை கர்ணம் அளித்தால் போதுமா?

முடிவு:

(ii) ரிஜிஸ்டர்களும் மற்ற பதிவுக்கட்டுகளும் பஞ்சாயத்து அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அவை கர்ணத்திடம் இருக்கக்கூடாது. கர்ணம் கேட்பு வசூல் மிச்ச ஸ்டேட்மெண்ட் ஒன்றையும் தயாரித்து அதை பஞ்சாயத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

16 கேள்வி XV

(i) குறிப்பிட்ட கால வரையறைக்குள் வசூல்செய்யப்படாத ரெவினியூ இனங்கள் சம்பந்தப்பட்டமட்டில், பஞ்சாயத்துத் தலைவர் மீது சர்சார்ஜ் விதிக்கலாமா?

முடிவு:

(ii) பல் வேறு வகைப்பட்ட பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய வருமானங்களை வசூல் செய்யும் பொறுப்பு மணியக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதினால், அந்தத் தொகையை விடாமல் வசூல் செய்யும் பொறுப்பு மணியக்காரரையே சேர்ந்தது. அப்படிப்பட்ட சமயங்களில், நிர்வாக அதிகாரி (பஞ்சாயத்துத் தலைவர்) வசூல் செய்வதில் ஏற்படும் குறைபாடுகளினால் உண்டாகும் நஷ்டங்களுக்குப் பொறுப்பாளியாகமாட்டார்.

(iii) ஆனால், மணியக்காரருக்கு வசூல் வேலையை ஒப்படைக்க மறுத்து விட்டு, தானே அதை எடுத்துக் கொண்டு செய்யும்பொழுது, மேற் குறிப்பிட்ட சலுகையானது பஞ்சாயத்துத் தலைவருக்கு கிடையாது. அப்படிப்பட்ட சமயங்களில், நிர்வாக அதிகாரி என்ற முறையில் பஞ்சாயத்துத் தலைவர் மீது சர்சார்ஜ் விதிக்கலாம்.

17 கேள்வி XVI

(i) கன்யாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கிராம அதிகாரிகளுக்கு, பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ் அளிக்கப்படவேண்டுமா?

முடிவு:

(ii) அளிக்கப்பட வேண்டியதில்லை. இந்த அலவன்ஸ்கள், பகுதி நேர கிராம அதிகாரிகளுக்குத்தான். கன்யா குமரி மாவட்டம், மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை தாலுக்காவைச் சேர்ந்தவர்கள் முழு நேர அரசாங்க ஊழியர்கள். ஆகவே, அவர்களுக்கு இந்த அலவன்ஸ் கிடையாது.

18 கேள்வி XVII

(i) Triune அதிகாரி, [கர்ணம், மணியக்காரர், முன்சீப் ஆகிய மூன்று அதிகாரிகள் செய்யும் அரசாங்க அலுவல்களை ஒருவராகவே செய்யும் கிராம அதிகாரி] பணி புரியும் கிராமங்களில் அவருடைய அலுவல்கள் என்ன? அவருக்கு என்னென்ன அலவன்ஸ்கள் அளிக்கப்படலாம்?

முடிவு:

அரசாங்க ஆணை எண் 644-ன்படி கர்ணத்திற்கும், மணியக்காரருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவல்களை Triune அதிகாரியும் செய்ய வேண்டும். அவருக்கு கர்ணத்திற்கு கொடுக்கப்படும் அலவன்ஸ் அளிக்கப்படலாம். அதாவது, அவருடைய பொறுப்புகள் சாதாரண பொறுப்புகளா அல்லது லகுவான பொறுப்புகளா என்பதைப் பொறுத்தும், பஞ்சாயத்துக் காரியதரிசியின் அலுவல்களை அவர் செய்கிறாரா இல்லையாயென்பதைப் பொறுத்தும், அளிக்கப்படுகிற 15 அல்லது 12 அல்லது 10 (ரூபாய்) அவருக்கும் அளிக்கப்படலாம்.



தமிழ்நாடு அரசாங்கம்

கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை

கிராம அபிவிருத்தி

(1961, ஜனவரி 25–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 211)

தமிழ் நாட்டின் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்—பஞ்சாயத்து அபிவிருத்திக்கான வட்டாரத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

1960 ஆகஸ்ட் 16-ந் தேதியிட்ட கிராம அபிவிருத்தித் துறை அரசாங்க ஆணை எண் 664-ல், மாநிலம் பூராவுக்குமாக பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஒத்துக்கொண்டது. சென்னை மாநிலத்தின் 374 பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களுக்காக, 142 கோடி ரூபாய் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்த ஐந்தாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம், ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரமும் தன்னுடைய வட்டாரத் திட்டத்தைத் தானே தயாரித்துக்கொள்வதற்கு ஓர் அடிப்படையாக அமையும் முறையில் உண்டாக்கப்பட்டது. வட்டார அளவில் திட்டமிடுவதற்கு கிடைக்கக்கூடிய நிதி வசதிகளுக்கான ஆதாரங்கள் என்று தனித்தனியே இருபது நிதி வசதி அளிக்கும் அம்சங்கள் இந்த ஆணையில் கண்டுள்ளன. அத்துடன், பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அரசாங்கம் அளிக்கக்கூடிய நிதி வசதிகள் பற்றிய ஓர் ஒருங்கிணைந்த அமைப்பு முறையும். இந்த ஆணையில் கண்டுள்ளது.

2. இந்த ஆணையுடன், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு பஞ்சாயத்து அபிவிருத்திக்கான வட்டார அளவில் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் உருவாக்குவதற்கான முறையில் விவரக்குறிப்பொன்றும் (இணைப்பு I) சேர்க்கப்பட்டுள்ளது. தங்களுடைய மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஐந்தாண்டுக்கான பஞ்சாயத்து அபிவிருத்திக்கான வட்டார அளவில் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஒன்றை, தயாரிக்கும் வேலையை உடனடியாக எடுத்துகொள்ள வேண்டும் என்று, எல்லா மாவட்டங்களின் கலெக்டர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

3. வட்டார வளர்ச்சி அதிகாரி முன்பே நியமனம் செய்யப்பட்டுள்ள வட்டாரங்களில், இந்தப் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான வட்டார அளவில் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு, வட்டார வளர்ச்சி அதிகாரியினுடையதாகும். இந்த வேலையில் எல்லா விஸ்தரிப்பு அதிகாரிகளும் அவருடன் ஒத்துழைக்க வேண்டும். வட்டார அபிவிருத்தித் திட்டம் இன்னும் நடைமுறைக்கு அமுலுக்கு வராத மற்ற வட்டாரங்களில், இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் வேலையை, வட்டாரத் திட்ட அதிகாரி (Block Planning Officer) செய்வார். அவர் அதிகாரத்தின்கீழ் உள்ள ரெவின்யு இன்ஸ்பெக்டர், இந்த வேலையில் அவருக்கு ஒத்தாசையாக இருப்பார்.

4. இந்தத் திட்டத்தைப்பற்றி சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றம் ஆகியவைகளுடன் கலந்தாலோசித்து திட்டம் தயாரிக்கப்படவேண்டும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், இன்னும் அமைக்கப்படாத இடங்களில், அந்த வட்டாரத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்கள் அடங்கிய கூட்டங்களை (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில்) கூட்டி, அவர்களுடன் கலந்தாலோசித்து, அவர்கள் வெளியிடுகின்ற அபிப்பிராயங்களுக்கொப்ப, இந்தத் திட்டம் தயாரிக்கப்படவேண்டும்.

5. ஐந்தாண்டுகளுக்கு என்று, ஒரு பஞ்சாயத்து அபிவிருத்திக்கான வட்டார அளவில் தயாரிக்கப்படும் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும்போது, அதில் அடங்கியுள்ள திட்டங்களில் எதற்கும், ஏற்படும் செலவுக்கு நிதிகள் அனுமதிக்கப்படவில்லை என்பதை, தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். மாநில அரசாங்கத்தின் சார்பாக ஏற்படும் செலவினங்கள் ஏதாகிலும் இருந்தால், அவை மாநில அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு இருக்க வேண்டும். அதுவும் இந்த வகையில் அதிகாரம் பெற்றுள்ள அதிகாரிகளால் பல்வேறு தலைப்புகளின்கீழ் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்குதலை அடிப்படையாகக்கொண்டு இருக்கவேண்டும். அதே போல, பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து ஏற்படும் செலவினமானது, அதற்கென்று வரையறுக்கப்

ப்பட்டுள்ள விதிமுறையின்படி, அநுமதிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளை அடிப்படையாகக்கொண்டு இருக்கவேண்டும்.

6. ஒரு வட்டாரத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு முன்னால் அதற்கான நிதி வசதிகள் என்னென்ன இருக்கின்றன என்பது பற்றி முன்னோடியாக ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டியது மிகவும் அவசியம். இது செய்து முடிக்கப்பட்ட பிறகுதான், அடுத்த ஐந்தாண்டுகளில் தனக்குக் கிடைக்கக்கூடிய நிதித் தொகை எவ்வளவு, ஒதுக்கப்பட்ட வருமான இனங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் எவ்வளவு, அபிவிருத்தி வேலைகளுக்காக அரசாங்க மானியமாகக் கிடைக்கும் தொகை எவ்வளவு, தன்னுடைய திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற எந்த அளவுக்கு வசதிகளை வட்டாரத்தில் திரட்ட முடியும் என்பது பற்றியெல்லாம், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தெளிவாகத் தெரிய வரும். தேசியத் திட்டப்பணியின் முக்கியமான நடைமுறைத் திட்டங்களை, பஞ்சாயத்துத் தலைவர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளவும், திட்டத்தை நிறைவேற்ற, பிரதேச நிதி ஆதாரங்களைத் திரட்டித் தருவதில் அவர்களுக்குள்ள மகத்தான பொறுப்பை வலியுறுத்தவும் வேண்டியே, இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

7. பஞ்சாயத்து அபிவிருத்திக்கான வட்டார அளவில் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு, 142 கோடி ரூபாயை 374 வட்டாரங்களுக்கு வகுத்துக் கொடுத்துவிடும் கணக்குப்படி அல்ல என்பதை, தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். இந்தத் திட்டத்தின் பின்னால் உள்ள அடிப்படை நோக்கம், அபிவிருத்தி வேலைகள் சம்பந்தப்பட்டமட்டில், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில், பிரதேசங்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டி, இது வரையில் பின் தங்கியுள்ள வட்டாரங்களின் அபிவிருத்தியை, இன்னும் விரைவான முறையில் நடத்த வேண்டும் என்பதே. அதுமட்டுமல்லாமல், பஞ்சாயத்துச் சட்டத்தில் கண்டுள்ள வரையறைகளின்படி, வசதிகளைத் திரட்டும் சக்திகள் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மாறுபட்டேயிருக்கும் என்பது, இந்தத் திட்டம் போடும்பொழுது ஒத்துக்கொள்ளப்படுகிறது. அதனால் மாநில அரசாங்கத்தின் உதவி சில வட்டாரங்களுக்கு, மற்ற வட்டாரங்களுடன் ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது, சற்று அதிகமாகவேயிருக்கும்.

8. எல்லா வட்டாரங்களுக்கும் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான வட்டார அளவில் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டங்கள் தயாரிக்கும் வேலை, 1961 மார்ச் 31-ம் தேதிக்குள் முடிவடைந்து விடவேண்டும். மாவட்ட அளவில், இந்த வகையில் மாவட்டக் கலெக்டருடன் கலெக்டரின் தனி உதவியாளர், திட்டம் அபிவிருத்தி (Personal Assistant, Planning and Development) ஒத்துழைப்பார். வட்டாரத் திட்ட வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், வட்டாரத் திட்ட அதிகாரிகள் ஆகியோருக்கு, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள் வேண்டிய உதவியைச் செய்வார்கள்.

9. இந்தத் திட்டத்தைத் தயாரிப்பதில், ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால், அரசாங்கத்தில் கிராம அபிவிருத்தி தலைமை நிர்வாகத் துறைக்கு, கலெக்டர்கள் அவைபற்றி எழுதும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த வேலையில் காணப்படும் முன்னேற்றங்கள்பற்றி, கலெக்டர்கள், தலைமைக் காரியதரிசிக்கு, மாதந்தோறும் அனுப்பும் தனிப்பட்ட அறிக்கைகளான நேர்முகக் கடிதங்கள்மூலம், அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

இணைப்பு I

மாநிலத்தின் ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திற்கும் வட்டாரத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான விவரக் குறிப்பு.

பிரிவு I—முகவுரை.

வட்டாரத்திற்கான திட்டத்தை தயாரிப்பதில் முதன்மையானதும் மிக முக்கியமானதுமான நடவடிக்கையான மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திற்கும் ஒரு வட்டாரத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதுபற்றிய விவரங்களை இந்தக் குறிப்பு விளக்குகிறது. 1960 ஆகஸ்ட் 16 தேதியிட்ட கிராம அபிவிருத்தித் துறை அரசாங்க ஆணை எண் 664-ன் **இணைப்பு I**-ல் மாநிலம் பூராவுக்குமாக ஒரு பொதுப்படையான நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதற்கு பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் என்று பெயரிடப்பட்டது. **அந்த நிதிநிலை அறிக்கையில் நான்கு முக்கிய தலைப்புகளின் கீழ்** 20 வகைப்பட்ட வருவாய்த்துறை உபப்பிரிவுகள் கண்டுள்ளன. **இந்த 20 துறைகளும் கீழ்க்கண்ட நான்கு நிதிவகைகளின் கீழ்** பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன: உற்பத்தி நிதி, கல்வி நிதி, பொது நிதி, கிராமப் பஞ்சாயத்து நிதி. 1960 ஆகஸ்ட் 16 தேதியிட்ட கிராம அபிவிருத்தித் துறை அரசாங்க ஆணை எண் 664-ல் காணப்பட்டுள்ள விதி முறைகளின் அடிப்படையிலே, ஒரு

வட்டாரத்திற்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை எப்படித் தயாரிப்பது என்பதை இந்த விவரக் குறிப்பு கட்டங் கட்டமாக விளக்க முயல்கிறது. நான்கு நிதித் தலைப்புகளின் கீழ் உள்ள 20 உப தலைப்புகளுக்கெதிராக 79 இனங்களையும் தனித் தனியாக, ஒரு வட்டாரத்திற்கென்று கணக்கிட்டு, அவைகளை, இரு நெடும்பத்திகளும், நான்கு பெரும் தலைப்புகளாக நான்கு வரிசைப் பதிவுகளும் கொண்டுள்ள அறிக்கையாகத் தயாரித்தால், அது, அரசாங்க ஆணை எண் 664-ன் ஒன்றுவது இணைப்பில் காணப் படும் அறிக்கையைப்போன்று அக்குறிப்பிட்ட வட்டாரத்தின் நிதி அறிக்கையாக உருவாகிவிடும். மாநிலத்திற்கு, 664 எண் அரசாங்க ஆணை இருக்கின்ற அதே நிலையிலே, இந்த அறிக்கை வட்டாரத்திற்காக இருக்கும். வட்டாரத்தில் மூன்றுவது திட்டக் காலத்தில் மூன்று நிதிகளுக்கு ஒப்ப மூன்று பெரிய பிரிவுகளின் நிதி ஒதுக்கீடு என்னவாக இருக்கும் என்பதை ஓரளவுக்கு இது காட்டுகிறது. மூன்றுவது திட்டக் காலத்தில் பஞ்சாயத்துக் கணக்குகளின் மூலம் எவ்வளவு தொகை செலா வணியாகியிருக்கிறது என்பதையும், திட்ட வேலையை நிறைவேற்ற தன்னுடைய அதிகார வரம்புக்குட்பட்ட எல்லையில் திரட்டப்பட வேண்டிய பிரதேச வசதிகளின் பெருமளவுபற்றியும் இது காட்டும். வட்டாரத்திற்கான இந்த நிதி நிலை அறிக்கையை, 1960-ம் ஆண்டு ஆகஸ்டு 16 தேதியிட்ட கிராம அபிவிருத்தித் துறை அரசாங்க ஆணை எண் 664-ன் இணைப்பு ஒன்றில் கண்டுள்ள எண்ணிக்கையை 374 வட்டாரங்களுக்கும் (மாநிலத்தில் வட்டாரங்களின் எண்ணிக்கை இது) சரிசமமாக பகிர்ந்தளிப்பதின்மூலம் அடைய முடியாது என்ற உண்மை மறுபடியும் வலியுறுத்திக் கூறப்படுகிறது. சம்பந்தப்பட்ட வட்டாரத்திற்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரக் குறிப்புகளை வைத்து, ஒவ்வொரு வட்டாரத்திற்கும எவ்வளவு தொகை என்று கண்டுகொள்ளவேண்டும்.

2. ஒவ்வொரு மாவட்டத்திற்கும், கடைசியாக வரையறுக்கப் பட்டுள்ள எல்லைக் கோடுபற்றிய உத்தரவின்படியே, இந்த அறிக்கையைத் தயாரிக்க, ஒவ்வொரு வட்டாரத்தின் எல்லைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

3. இந்தக் குறிப்பில், ஜனத்தொகை என்று குறிப்பிடப்படுவது எல்லை வரையறுக்கப்பட்ட வட்டாரத்தின் 1961-ம் ஆண்டு ஜனத் தொகைக் கணக்கைக் குறிக்கும். 1961-ம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்கு 1961-ம் ஆண்டு கடைசி வரையில் சில கிராமங்களுக்குக் கிடைக்காமலிருக்கலாம். சாதாரண நடைமுறைக்காக, ஒரு கிராமத்தின் ஜனத்தொகை, 1951-ம் ஆண்டு ஜனத்தொகை எவ்வளவோ, அத்துடன் அந்த அளவில் ஆறில் ஒரு பாகத்தைச் சேர்த்துக்கொண்டால், எவ்வளவு வருமோ, அவ்வளவு என்று வைத்துக்கொள்ளவேண்டும். சரியான ஜனத்தொகைக் கணக்கு கள் கிடைக்கும்பொழுது, வேண்டிய மாறுதல்களைப் பின்னல் செய்துகொள்ளவேண்டும்.

4. இந்தத் திட்டத்தை தயாரிக்கும்பொழுது, பல்வேறு வட்டா ரங்களையும் சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின் 130-வது பிரிவின் கீழ் ஏ. பி. சி. டி. வட்டாரங்கள் என்று பிரிக்க வேண்டியிருக் கிறது. இதைப்பற்றிய உத்தரவுகள் இப்பொழுது உருவாகி முடியும் தறுவாயிலிருக்கின்றன. உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரை, மாவட்டக் கலெக்டரால் தற்காலிகமாக செய்யப்பட்டுள்ள பிரிவு வகைகள் கையாளப்படலாம்.

பிரிவு II—உற்பத்தி நிதி.

5. இந்த நிதி, விவசாயம், மீன் பிடி துறை, கதர், கிராமக் கைத் தொழில்கள் ஆகிய துறைகளில், பஞ்சாயத்து யூனியன் வரம்புக்குள், அவை சம்பந்தப்பட்ட வரையில், நடைபெறும் நிதி ஏற்பாடுகளைக் குறிக்கும். கதர், கிராமக் கைத்தொழில்களின் கீழ் பஞ்சாயத்து யூனியன்களுக்கு எவ்வளவு தொகை கிடைக்கும் என்பதை இதுவரை நிர்ணயமாகச் சொல்ல இயலவில்லை. பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பிரதேசப் பாசனங்கள் மானியத்திற்கும், விவசாய மானியத்திற்கும் 950 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முன் சொன்னதற்கு 200 லட்சம் ரூபாய் என்றும் பின்னல் சொன்ன விவசாய மானியத்திற்கு 750 லட்சம் ரூபாய் என்றும் கொள்ள வேண்டும். இந்தத் தொகை அரசாங்க மானியத்தைக் குறிக் கிறது. இதைப்பெற, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன் களும் 200 லட்சம் ரூபாய் ஈட்டு மானியமாகத் திரட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலே குறிப்பிட்டுக் காட்டியபடி, அபிவிருத்தி வேலைகள் சம்பந்தப்பட்ட மற்ற உப- தலைப்புகளின் கீழ் கிடைக்கும் மானியங்களையும் சேர்த்து, அரசாங்க மானியம் இன்னும் அதிகமாக இடம் இருக்கிறது. அப்படி அதிகமாகும்பொழுது, அந்த அளவுக்கு திரட்டப்பட வேண்டிய ஈட்டு மானியமும் அதிகமாகிறது. தற்சமயத்திற்கு, கீழே குறிப்பிட்டுள்ள குறிப்புகள் அரசாங்கத் தொகைகளை பிரதேசப்பாசன மானியம், விவசாய மானியம், பிரதேச வருவாய்கள் ஆகியவைகளுக்காக பிரித்துக் காட்டி, வரையறை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், இந்தத் தொகைகள் மானியங் களைத்தான் குறிக்கும். கடன்களை அல்ல.

6. **பிரதேச நீர்ப்பாசன மானியம்.**—1960, எப்ரல் 16-ம் தேதி யிட்ட கிராம அபிவிருத்தித் துறை அரசாங்க ஆணை எண் 711-ல்

சென்னை பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 85 (1) பிரிவின்படி, ரெவின்யூ இலாகாக்களின் அதிகாரத்தில் இருக்கின்ற சிறிய நீர்ப் பாசன வேலைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு ஆகிய வேலைகள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் கையில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. அதே ஆணையில், இந்த நீர்ப்பாசன வேலைகளைப் பராமரிப்பதற்காக வேண்டி, பஞ்சாயத்து யூனியன்களுக்கு "பிரதேசப் பாசன மானியம்" என்று ஒரு விசேஷ வருட மானியம் கிடைக்கும் என்று குறிப்புக் காட்டப்பட்டுள்ளது. இந்த மானியத் தொகையானது, 1959-60-ல் முடிவடையும் ஐந்தாண்டுகளுக்கு ஆகின்ற மொத்தத்தை அடிப்படையாக வைத்து நிர்ணயிக்கப்பட்டு, சிறிய பாசன வேலைகளுக்கான வருடாந்தர சராசரி தொகையை அடிப்படையாக, வைத்துக் கணக்கிடப்படும். இந்த வகையில், பாசனம் செய்யப் படும் ஒரு ஏக்கராவுக்கு ரூ. 1·50 லிருந்து ரூ. 2·50 வரையில் இந்த மானியத் தொகையானது நிர்ணயிக்கப்படும். மாவட்டக் கலெக்டரால் நிர்ணயம் செய்யப்படுகிற இந்தத் தொகையின் அளவைப் பெற்றுக்கொண்டு, வட்டாரத்திற்கான தொகையைக் கணக்கிட்டு, ஐந்தாண்டுகளுக்கான தொகை எவ்வளவு என்று குறிப்பிடவேண்டும்.

7. அதே 711 எண்ணிட்ட அரசாங்க ஆணையில் சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 85 (2) வது பிரிவு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. அதன்படி, இதுவரை நடைபெற்றுவரும் குடிமராமத்து வேலைகளை ஏற்றுக்கொண்டு, அதற்காகும் செலவிற்காக ஓர் அதிகார பூர்வமான கட்டணத்தை விதிக்க பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதன்படி, பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் இந்தத் துறையில் நீர்ப்பாசன வசதிகளை எவ்வளவு அதிகமாகப் பெற முடியுமோ அந்த அளவுக்கு பெறவேண்டி, இந்த வகையில் தங்களுடைய அதிகாரங்களை செலுத்துவதின் அத்தியாவசியத்தை அவைகளுக்கு உணர்த்த வேண்டும் என்று மாவட்டக் கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். இந்த வேலையை மேற்கொள்ள எந்த அரசாங்க மானியமும் சாதாரணமாகத் தேவை இல்லை. ஆனால், இந்த வேலைகள் நீண்ட காலமாக கவனிக்கப்படாமல் அப்படியே இருப்பதினால், சில குடிமராமத்து வேலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. விவசாயிகள் சாதாரண முறையில் பழுது பார்ப்பதினால், அவைகளை திருந்திய நிலைக்கு கொண்டு வரமுடியாது. ஆகவே, மேற்கொண்டு செலவு ஏற்பட காரணமிருக்கிறது. அரசாங்க ஆணை எண் 664-ன் இணைப்பு 2-ல் 41-வது பாராவில், ஒரு ஏக்கர் ஆயக்கட்டுக்கு ஓராண்டுக்கு ஒரு ரூபாய் செலவு என்பது சாதாரண குடிமராமத்து என்றும், இந்தச் செலவை பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள், ஆயக்கட்டுதாரர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், இதற்குமேல் அப்படி ஏற்படுகின்ற அதிகப்படியான செலவுத் தொகையில் இரண்டில் மூன்று பாகத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி அதிகப் படியான குடிமராமத்துச் செலவில் அரசாங்கத்தின் பங்குக்கு வழி செய்யப்படலாம். இது பிரதேசப் பாசன மானியத்துடன் சேர்க்கப்படும்.

8. **விவசாய மானியம்.**—பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்துக்கொண்டு செய்கின்ற வேலைகளுக்காக, மூன்றாவது திட்டகாலத்திற்கு, மாநிலம் பூராவுக்குமாக இந்த உப-தலைப் பின்கீழ் 750 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வட்டார திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் விவசாயம், கால் நடை, நீர்ப்பாசனம் ஆகியவைகளின் பங்கு, விவசாய, கால்நடைத் துறை இலாக்காக்களின் திட்டம் இவைகளின் மூலமாக கிடைக் கும் நிதி வசதிகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, இந்தத் தொகை அளவு என்று கணக்கிடப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டக்கால அளவுக்கு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இந்த உப-தலைப்பின்கீழ் 2 லட்சம் ரூபாய் மானியத் தொகை என்று ஒதுக்கப்படும்.

9. இந்த இரண்டு லட்சம் ரூபாயில், வட்டாரத்தில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு, கீழ்க்கண்ட வேலைகளுக்காக, ஒரு குறிப் பிட்ட சத விகித மானியம் என்று பிரித்தளிக்க, ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது :—

(i) விறகு, தீவனம், எரு, பசுந்தழை உரம் ஆகியவைகளை உற்பத்தி செய்ய மரம், செடி கொடிகளை நடுதல்.

(ii) கலவை எரு தயாரித்தல்.

(iii) பசுந்தழை உரம் தயாரித்தல்.

(iv) குறைந்த விலையில் பூச்சி மருந்துகளை விநியோகம் செய்தல் : இந்த எல்லா வேலைகளுக்குமாக, பஞ்சாயத்துக்களுக்கு ஏற்படும் செலவில் இரண்டில் மூன்று பங்கு இந்த மானியம் மூல மாகக் கிடைத்துவிடும். ஆனால் இந்தத் தொகை, ஒரு வட்டாரத் திற்கு ஐந்தாண்டுகாலத்திற்கு ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் போகக்கூடாது. பஞ்சாயத்துக்கள் இதற்காக ஈட்டு நன் கொடை யாக 50,000 ரூபாய்க்கு வழி செய்து கொள்ளவேண்டும்.

ஜனத்தொகைக் கணக்கு கிடைக்கும்பொழுது, அதற்குத் தகுந்தாற்போல் மாற்றிக்கொள்ளலாம். ஐந்தாண்டுக்கான தொகை எவ்வளவு என்று கணக்கிடப்படவேண்டும்.

14. **பிரதேசக் கல்வி மானியம்.**—மேலே குறிப்பிட்டுள்ள நில வரி ஒப்படைப்புக்கு ஏற்ப, முதல்படியில் கண்டுள்ள செலவு விகிதாச்சாரத்தைச் சரிக்கட்டிய பிறகு, அரசாங்கம் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கும் ஒரு பிரதேசக் கல்வி மானியத்தை அளிக்கவேண்டும் என்று சட்டத்தின் 128-வது பிரிவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. கல்விக்கான செலவினத்தில், இரண்டாவது படியில் (slab) தலைக்கு 250 நயாபைசாவாக இருக்க வேண்டும் என்று ஒரு வரம்பு முறை சட்டத்தில் கண்டுள்ளது. இந்த இரண்டாவது படியில், வட்டாரங்களின் கீழ்க் கண்ட முறையில் வகைப்படுத்தியிருப்பதற்கு ஒப்ப அரசாங்கம் ஒரு பிரதேசக் கல்வி மானியத்தை அளிக்கும் :—

A பிரிவு வட்டாரம்	அரசாங்கம்	50 சதவிகிதம்	பஞ்சாயத்து யூனியன்	50 சதவிகிதம்
B பிரிவு வட்டாரம்	Do.	60 சதவிகிதம்	Do.	40 சதவிகிதம்
C பிரிவு வட்டாரம்	Do.	70 சதவிகிதம்	Do.	30 சதவிகிதம்
D பிரிவு வட்டாரம்	Do.	80 சதவிகிதம்	Do.	20 சதவிகிதம்

மூன்றாவது திட்ட முடிவுக் காலத்தில் ஆரம்பக் கல்விக்காகும் செலவின் இலக்கு தலைக்கு 350 நயா பைசா தான் இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டதும், ஆசிரியர்களுக்கு அவ்வப்பொழுது அளிக்கப்பட்ட ஊதிய உயர்வுக் காரணத்தினால் அதே பலனை அடையவும் இந்த இலக்கின் அளவு மேலும் உயர்த்தப்பட்டுவிட்டது என்பதும் அரசாங்க ஆணை 664-ன் இணைப்பு II-ன் 18-வது பாராவில் விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. இத்துடன் சமீபத்தில் வெளியான ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் விளைவினால் இந்த உயர்வு இன்னும் அதிகமாகிறது. ஆகவே, ஆசிரியர்களுக்கு அதிகப்படியான ஊதியம் அளிக்கின்ற பொறுப்பை பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்ற வேண்டி, அதற்காக அவைகளுக்கு அதிகார பூர்வமில்லாத ஒரு துணைக்கல்வி மானியம் ஒன்று அளிக்கப்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அத்துடன், பள்ளி உணவு, சமூகக்கல்வி ஆகியவைகளுக்காகும் செலவும் இரண்டாவது படியின் (slab) செலவுக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும். மேற்கண்ட அம்சங்களை விலக்கி, இரண்டாவது படியின் செலவில் பங்குகொள்ள, அரசாங்கம் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் மாநிலம் பூராவுக்குமாக, ஐந்தாண்டு காலத்திற்கு ரூ. 18 கோடி என்று காட்டியுள்ளது.

15. மூன்றாவது திட்ட ஐந்தாண்டுக் காலத்திற்கு பிரதேசக்கல்வி மானியம் மூலம் வட்டாரத்திற்கு எவ்வளவு தொகை வரும் என்று பார்க்க, இரண்டாவது படியின் செலவு எவ்வளவு என்பதை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். இதைப் பின்வரும் முறையில் கணக்கிடலாம்.

(i) வட்டாரத்தில் ஐந்தாண்டுக் காலத்திற்கு ஆரம்பக கல்விக்காகும் செலவைக் கணக்கிடும்பொழுது, பள்ளிக்கட்டிடங்கள், பள்ளி உணவு, சமூகக்கல்வி இவைகளுக்காகும் செலவைச் சேர்க்கக்கூடாது.

(ii) இந்தத் தொகையிலிருந்து புதிய அளவுப்படி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத் தொகையிலிருந்து 20 சத விகிதத்தைக் கழித்து விடவேண்டும். இது துணைக்கல்வி மானியத்தைக் குறிக்கும். ஆரம்பக்கல்வியில் முதல்படி, இரண்டாவது படியில் ஆகும் செலவில் இது சேராது.

(iii) அப்படிக்கிடைத்த தொகையிலிருந்து, 1961-ம் ஆண்டு ஜனத்தொகை கணக்குப்படி தலைக்கு ஒரு ரூபாய் என்ற விதத்தில் கணக்கிடப்பட்ட முதல்படி செலவுத்தொகை, ஐந்தாண்டுகளுக்கு எவ்வளவாகிறது என்று பார்த்து அந்த மொத்தத் தொகையை இதிலிருந்து எடுத்துவிட வேண்டும். மிச்சமிருக்கிற தொகை தான் இரண்டாவது படியில் ஆகும் செலவுத் தொகையாகும்.

(iv) இப்படி கிடைக்கப்பட்ட இரண்டாவது படி செலவினத்திற்காக, மேலே 14-வது பாராவில் சொல்லியுள்ளபடி அரசாங்க பங்கு விகிதாச்சாரம் அளிக்கப்படவேண்டும். பிறகு, மூன்றாவது திட்டக்காலத்திற்கு வட்டாரத்திற்கு பிரதேசக் கல்வி மானியம் கிடைத்துவிடுகிறது.

16. மேற்கண்ட மானியத்தொகையானது 27—9—1960 தேதியிட்ட கல்வித்துறை அரசாங்க ஆணை எண் 2075-ல் 7-வது பாராவில் காட்டியுள்ள குறைந்த பட்ச தொகைக்குமேல் குறையக்கூடாது. 1961-62-லிருந்து 1965-66-வரை உள்ள ஆண்டுகளுக்கு அளிக்கப்படும் பிரதேசக் கல்வி மானியம் 1961-62-ம் ஆண்டில் கொடுக்கப்படும் நிகரச் செலவு மானியத்திற்குக் குறையாது. ஆனால் 1961-62-ல் அளிக்கப்படுகிற நிகர செலவு மானியத்தொகை வட்டாரத்தில் உள்ள யூனியன் பள்ளிகள், அரசாங்க மானிய உதவியுடன் நடத்தப் பெறும் பள்ளிகளுக்கு 1960-61-ல் அளிக்கப்படும் நிகர செலவு மானியத்தொகை ஏழில் ஒரு பங்குக்கு மேல் போகக்கூடாது.

10. ஐந்தாண்டுக் கால அளவுக்கு ஒரு வட்டாரத்திற்கு மிச்சம் இருக்கிற ஒரு லட்சம் ரூபாய், கீழ்க்கண்ட காரியங்களைச் செய்வதற்காக, பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியமாக கிடைக்கும் :—

(i) கிராம சஹாயக் பணிகளைப் பராமரித்தல், பொறுக்கு விதைகளின்பேரில் அவருக்கு மானியம் அளித்தல்.

(ii) பயிர்ப்பாதுகாப்பு சாதனங்களை கூட்டுறவுகளுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் அளித்தல்.

இந்த சந்தர்ப்பத்தில், கிராம உணவு உற்பத்தித் திட்டமொன்றை தயாரிப்பதற்கான வழிவகைகளைக் கொண்டுள்ள 1960-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் தேதியிட்ட உணவு வேளாண்மைத் துறை அரசாங்க ஆணை எண் 3792-ல் கண்டுள்ள விதிமுறைகள் கவனத்திற்குக்கொண்டு வரப்படுகின்றன. மேற்கண்ட ஒரு லட்சம் ரூபாய் அரசாங்கத்தாரால், ஈட்டுமானியமல்லாத முறையில் அளிக்கப்படுகிறது

11. உற்பத்தி நிதியில் அளிக்கப்படும் மானியங்களுக்காக ஈட்டுநன்கொடைகளைத் திரட்டுதல் :—

(i) பிரதேசப்பாசன கட்டணம்.—குடிமராமத்துக்காக அதிகப்படியாக ஏற்படும் செலவுக்காக, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், மேலே ஆறுவது பாராவில் சொல்லியுள்ளபடி, ஓராண்டுக்கு ஒரு ஏக்கர் ஆயக்கட்டுக்கு ஒரு ரூபாய் என்ற அளவுக்குமேல் ஏற்படும் செலவில் மூன்றில் ஒரு பங்கை ஏற்றுக்கொள்ளவேண்டும். சட்டத்தின் 85 (2)-வது பிரிவின்கீழ், யாதொரு பஞ்சாயத்தும், விவசாயிகளுக்காக குடிமராமத்து வேலைகளை ஏற்றுக்கொண்டு செய்யலாம். இதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள அடிப்படையில் ஒரு கட்டணத்தை விதித்து, வசூலிக்க வேண்டும். இந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டு, அப்படி ஒரு கட்டணத்தை பஞ்சாயத்துக்கள் விதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) கிராம அபிவிருத்தி வரிகள்.—மேலே 8-வது பாராவில் பிரதேச வசதிகளிலிருந்து ஈட்டு தொகையாக திரட்டப்படும் 50,000 ரூபாய்க்கு ஈடாக, ஒரு லட்சம் ரூபாய் விவசாய மானியமாக அளிக்கப்படும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக, பஞ்சாயத்து வேளாண்மை செய்யும் நிலத்தின் மீது ஒரு வரி விதிக்கலாம் என்று சட்டத்தின் 119 (3)-வது பிரிவு அதிகாரமளிக்கிறது. தாங்கள் அளிக்க வேண்டிய நன்கொடைப் பங்கைத் திரட்ட, இந்த வரி விதிக்கும் வசதியை பஞ்சாயத்துக்கள் உபயோகப்படுத்திக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

11-ஏ. இந்த நிதியின் கீழ், கீழ்க்கண்ட எட்டு உபதலைப்புகளின் கீழ் நடைபெறும் விவகாரங்கள் காட்டப்பட்டுள்ளன.—நிலவரி ஒப்படைப்பு, பிரதேசக் கல்வி மானியம், துணைக் கல்வி மானியம், பள்ளி உணவு மானியம், சமூகக் கல்வி மானியம், கிராமவேலைகள் மானியம் (பள்ளிக் கட்டிடங்கள்). பிரதேச வருமானங்கள் (விசேஷமானவை). பொது நிதியில் பிரதேச செஸ் சர்சார்ஜ், பிரதேச செஸ் சர்சார்ஜ் ஈட்டுமானியம் முதலிய வசூல்களிலிருந்து மாற்றப்படும் தொகையும் இந்த நிதியில் தான் வந்து சேரும். ஆனால் சௌகரியத்தை முன்னிட்டு, பிரதேச செஸ் சர்சார்ஜ் ஈட்டு மானியம் பூராவும் பொது நிதியிலேயே காட்டப்பட்டுள்ளது.

12. கல்விநிதிக்கு பிரதேச செஸ் நன்கொடை.—1958-ம் ஆண்டு சென்னை பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 115-வது பிரிவின் கீழ் மாநிலத்தின் நில வரியில் ரூபாய்க்கு 45 நயா பைசா என்ற விதத்தில் பிரதேச செஸ் வசூலிக்கப்படுகிறது. இப்படி வட்டாரத்தில் வசூல் செய்யப்பட்ட தொகையில், ஒன்பதில் நான்கு பாகம் அல்லது நிலவரியில் ரூபாய்க்கு 20 நயாபைசா என்ற அளவில் பஞ்சாயத்து யூனியன் கல்விநிதியில் சேர்க்கப்படும். ஐந்தாண்டுகளுக்கு மாநிலத்திற்கான தொகை 500 லட்சம் ரூபாய் என்று காட்டப்பட்டுள்ளது. வட்டாரத்தில் வசூல் செய்யப்பட்ட நிலவரித் தொகைக்கு சமமான ஒரு தொகையை மூன்றுவது திட்ட ஐந்தாண்டு காலத்திற்கு ஒதுக்குவதின் மூலம் வட்டாரத்திற்கு எவ்வளவு தொகை என்பது சுலபமாகத் தெரிந்துவிடும்.

13. நிலவரி ஒப்படைப்பு.—பிரஸ்தாப ஆண்டில் இந்த மாநிலத்தில் வசூல் செய்யப்பட்ட மொத்த நிலவரியிலிருந்து, ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியிலுள்ள நபர் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் என்ற அளவிலுள்ள ஒரு தொகையை அரசாங்கம் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கும் கொடுக்க வேண்டும் என்று சென்னை பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 118-வது பிரிவில் விதிமுறை செய்யப்பட்டிருக்கிறது. தலைக்கு ஒரு ரூபாய் அளிக்க வேண்டுமென்ற இந்தச் சட்டபூர்வமான ஒப்படைப்பானது, சட்டத்தின் 128-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ள கல்வி செலவிற்கான முதல் படியில் (slab) ஆகும் தொகைக்கு வழி செய்கிறது. 1961-ம் ஆண்டில் கிராம மக்கள் தொகை மூன்று கோடி என்ற கணக்கின் அடிப்படையில், இந்தத் துறையின் மூலம் வருகின்ற மாநில வருமானம் 15 கோடியாக இருக்கும். வட்டாரத்திற்கான வருமானம், எவ்வளவு என்று தெரிந்துகொள்ள, 1951-ம் ஆண்டு ஜனத்தொகை கணக்குடன் அதன் ஆறில் ஒரு பாகத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் . பின் 1961-ம் ஆண்டு

17. மேற்கண்ட கணக்கு முறைகள் வட்டாரத்தில் ஆரம்பக் கல்விக்காகும் மொத்தச் செலவை நிர்ணயிக்கிறது. இந்த நிர்ணயம் கீழ்க்கண்ட புள்ளி விவரக் கணக்குகளை உள்ளடக்கியிருக்கும் :—

(i) (யூனியன் பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள்) ஆகிய பள்ளிகளுக்கு 1965-ம் ஆண்டில் தேவைப்படுகிற ஆசிரியர்களின் எண்ணிக்கை மதிப்பீடு;

(ii) 1961 மார்ச் மாதத்தில் யூனியன் பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள் ஆகியவைகளில் வேலைபார்க்கின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(iii) ஆரம்பக் கல்விக்காக ஒரு தனி ஆசிரியருக்கு ஆகும் செலவு. மேற்கண்ட மூன்று அம்சங்களைப்பற்றிய தொகைகள் கிடைத்துவிட்டால், இந்த சுலபமான அடிப்படையில் திட்டமிடும் வேலைகளுக்காக மூன்றுவது திட்டக்காலத்தில் வட்டாரத்தில் ஆரம்பக் கல்விக்காகும் மொத்தச் செலவு என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

18. மூன்றுவது திட்டக்காலத்தில் வட்டாரத்தில் தொடக்கக் கல்விக்காகும் மொத்தச் செலவு, மார்ச் 1961-ல் பஞ்சாயத்து யூனியன், உதவிபெறும் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களின் தொகையை இருமடங்காக்கி அத்துடன் 1965-ம் ஆண்டில் யூனியன் உதவி பெறுகிற பள்ளிகளுக்கு தேவைப்படுகிற ஆசிரியர்களின் எண்ணிக்கையை மூன்று மடங்காக்கி அதைக் கூட்டி, இந்த மொத்தத்தை ஒரு ஆசிரியருக்கு ஆரம்பக் கல்விக்காகும் செலவு தொகையினால் பெருக்கினால் எந்தத் தொகை வருகிறதோ, அதற்குச் சமமாகும்.

19. அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்கு ஒவ்வொரு வருடத்திற்கும் பிரதேசக் கல்விமானியம் எவ்வளவு என்று கணக்கிட இந்த விவரக்குறிப்புகளின் விளக்கத் திட்டம் (இணைப்பு II) கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பஞ்சாயத்து யூனியன் தன்னுடைய கல்வித் திட்டத்தை செயலாக்கி நடத்த ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பிரதேச வசதிகளை அது திரட்ட வேண்டும் என்பதும் அந்தத் திட்டத்தில் கண்டுள்ளது.

20. 1961-62-ல் நிகரச் செலவு மானிய அடிப்படையில் பிரதேசக் கல்வி மானியம் பகிர்ந்தளிக்கப்படும். 1961-62-க்கு பிறகு 14, 15, 16 பாராக்களில் சொல்லிய முறைபடிதான் பிரதேசக் கல்வி மானியம் பகிர்ந்தளிக்கப்படும். தொடக்கக் கல்வியில் மேலும் அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால், 14-வது பாராவில் காட்டியுள்ளபடி, இரண்டாவது, மூன்றுவது படியில் கண்டுள்ள விகிதாச்சாரத்தின் பங்கை நிறைவேற்ற, பஞ்சாயத்து யூனியன்கள் பிரதேச வசதிகளைத் திரட்டித்தாக வேண்டும். இந்தக் காரியத்திற்காக பிரதேச வசதிகளைத் திரட்ட வேண்டி, சட்டத்தின் 116-வது பிரிவில் பஞ்சாயத்து யூனியன்கள் ஒரு பிரதேச செஸ் சர்சார்ஜை விதிக்கலாம் என்று அவைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேச செஸ் சர்சார்ஜுக்கு ஈடாக 129-வது பிரிவின்கீழ் அரசாங்கம் ஒரு ஈட்டு மானியம் அளிக்கும். இந்த ஈட்டு மானியம் வட்டாரமானது எ, பி, சி, டி, என்ற வகையில் வகைப்படுத்தப் படுவதற்கேற்ற விகிதாச்சாரத்தில் 75, 100, 125, 150 என்ற சதவிகிதங்களில் கணக்கிட்டு அளிக்கப்படும். பிரதேச செஸ் சர்சார்ஜ் விதிப்பது மூலமாக பிரதேச வருவாயைப் பெருக்கிக் கொண்டால் அல்லாமல், மூன்றுவது திட்டக் காலத்தில் ஆரம்பக் கல்வி விஷயத்தில் குறிப்பிட்ட இலக்குகளை அடைவது என்பது பஞ்சாயத்து யூனியன் மன்றங்களினுல் இயலாமல் ஆகிவிடும்.

21. **துணைக்கல்வி மானியம்.**—இதைப்பற்றி 14-வது பாராவில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி விதிக்கப்பட்ட அதிகப்படியான சம்பளத்தை பஞ்சாயத்து யூனியன்கள் அளிக்க வேண்டி அவைகளுக்கு வேண்டிய வசதிகளை செய்து தருவது அரசாங்கத்தின் கடமையாகிறது. அப்படி அதிகமாகக் கொடுக்கப்படும் ஊதியமானது எல்லா ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் புதிய சம்பளத் தொகையில் (பஞ்சப்படியையும் சேர்த்து) 20 சதவிகித அளவிற்கு சமமான தொகையாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. புதிய செலவைச் சமாளிக்கவேண்டி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் புதிய சம்பள விகிதப்படி பஞ்சாயத்து யூனியனில் உள்ள எல்லா ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத் தொகையின் 20 சதவிகித அளவுத் தொகையை அதிகார பூர்வமில்லாத ஒரு துணைக்கல்வி மானியமாக அடையும். மாநிலத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு இந்தத் துறையில் மொத்தத் தொகை என்று 1,200 லட்சம் ரூபாய் காட்டப்பட்டுள்ளது. ஐந்தாண்டுகளுக்கு ஆசிரியர்களுக்காகும் செலவின் தொகையை அடிப்படையாகக் கொண்டு, வட்டாரத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு எவ்வளவு ஆகிறது என்பது கணக்கிடப்படவேண்டும்.

22. **பள்ளி உணவு மானியம்.**—கல்விச் செலவின் முதல் இரண்டு படிகளிலிருந்து பள்ளி உணவுக்காகும் செலவை ஈடு செய்ய முடியாது என்பது முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆகும் அதிகப் பட்ச செலவு பள்ளிகளில்

மாணவர்கள் சேர்க்கப்படும் எண்ணிக்கையின் அதிகரிப்புக்கு தக்கவாறு இருக்கும். மாநிலம் பூராவுக்கும் இந்த வகையில் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 600 லட்சம் ரூபாய்க்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி ஒரு குழந்தைக்கு ஒரு வேளை உணவுக்கு அரசாங்கம் 6 நயா பைசா அளிக்கும். அதற்கு ஈடாக ஒரு குழந்தைக்கு ஒரு வேளை உணவுக்கு 4 நயா பைசா வீதம் பிரதேச வசதிகளிலிருந்து திரட்டிக்கொள்ளவேண்டும். ஐந்தாண்டு களுக்கு வட்டாரத்திற்கு எவ்வளவு ஆகும் என்ற கணக்கை கல்வித் துறையினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள முறையான மாணவர்கள் சேர்க்கும் திட்டத்தின் அடிப்படையில் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

23. *சமூகக் கல்வி மானியம்.*—இது ஈட்டு மானியம் அல்ல. தலைக்கு, ஆண்டொன்றுக்கு 10 நயா பைசா வீதமும், ஐந்தாண்டு களுக்கு தலைக்கு 50 நயா பைசா வீதமும் இது அளிக்கப்படும்.

24. *கிராம வேலைகள் மானியம்.*—பள்ளிக்கட்டிடங்கள் கட்டு வதற்கான மானியம் இது. இதன்படி 50 சத விகிதம் அரசாங்கத் தின் நன்கொடையாகவும், 50 சதவிகிதம் உள்ளூரிலிருந்து திரட்டும் நன்கொடை மூலமாகவும் கிடைக்கும். மாநிலம் பூரா வுக்குமாக, ஐந்தாண்டுகளுக்கு 200 லட்சம் ரூபாய்க்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் புதி தாகப் பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக் கையை வைத்து புதிய பள்ளிக்கான இடங்கள் துவக்குவிப்பதைக் கொண்டு இந்தத் தொகையானது வட்டாரங்களிடையே பகிர்ந் தளிக்கப்படும். மூன்றாவது திட்டக்காலத்தில் அவ்வாறு புதிதாகத் துவக்கப்படும் ஒவ்வொரு பள்ளி இடத்திற்கும் ரூ. 15 ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அளிக்கப்படும். இந்த பகிர்ந்தளிப்பு, மாணவர் களைப் புதிதாக சேர்ப்பதற்குக் கணக்கிடப்படும் மாநில இலக்கு அளவை வட்டார வாரியாகப் பிரித்துப்பார்த்து அதன் பேரில் செய்யப்படும்.

25. *பிரதேச சிறப்பு வருமானங்கள்.*—இந்த வகையில், மாநிலம் பூராவுக்குமாக ஐந்தாண்டுக்காலத்திற்கு பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் 600 லட்சம் ரூபாய்க்கு வழி செய்யப்பட்டுள்ளது. கல்வி நிதியைப் பொருத்த வரையில், இது கிராம அபிவிருத்தி வரிகள் மூலமாக வும் தாளைக் கொடுக்கும் அபிவிருத்தி நன்கொடைகள் மூலமாக வும் தான் முடியும். இந்த வகையில் திட்டத்தில் பிரதேச நன் கொடையின் பங்காக ஐந்தாண்டு காலத்திற்கு பஞ்சாயத்து யூனி யன் திரட்ட வேண்டிய ஈட்டு நன்கொடைத் தொகை ரூபாய் 400 லட்சத்திற்கு இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெருவாரியாக தற்பொழுது இந்தப் பிரதேச நன்கொடை எல்லாம் உள்ளூர் மக்களிடமிருந்து நன் கொடைகளாவே திரட்டப்படு கிறது. ஒரு கணிசமான அளவுக்கு இது தொடர்ந்து திரட்டப் படும். அத்துடன், பஞ்சாயத்து சட்டத்தின் 119 (3) வது பிரிவின் கீழ் பஞ்சாயத்துக்கு இதற்காக ஒரு வரி விதித்து வசூல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இது முன்பே மேலே 10-வது பாராவில் கிராம அபிவிருத்தி வரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், ஒரு பள்ளிக்காக கட்டிடம் கட்டவேண்டுமென்றால், கட்டடத்தின் செலவில் 50 சதவிகிதம் பிரதேச நன்கொடையாக இருக்க வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாகும். இதைத் திரட்ட வேண்டுமென்றால் பிரதேச மக்களிடமிருந்து நன்கொடை யாகத் திரட்டுவது மூலமோ அல்லது கிராம அபிவிருத்தி வரி விதித்து வசூலிப்பதுமூலமோ தான் முடியும். ஆகவே, இந்த தலைப்பின்கீழ் வகை செய்யப்பட்டுள்ள தொகையை கணக்கிடும் பொழுது, பள்ளி மதிய உணவுத் திட்டத்திற்காகவும், பள்ளிக் கட்டிடங்களுக்காகவும் வட்டாரத்தின் தேவைகள் என்னென்ன என்பதை அடிப்படையாகக்கொண்டு கணக்கிடப்படல் வேண்டும்.

பிரிவு IV—பொது நிதி

26. *பிரதேச செஸ்.*—மாநிலத்தின் நிலவரி வருமானத்தில் ரூபாய்க்கு 45 நயா பைசா வீதம் ஒரே அளவான முறையில் பிர தேச செஸ் விதிக்க 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 115-வது பிரிவு அதிகாரம் அளிக்கிறது. அப்படிச் செஸ் விதிக்கப்பட்டதினால் கிடைக்கும் வருமானத்தை பஞ்சாயத் துக்கள் பஞ்சாயத்து யூனியன்கள் இவைகளிடையே பகிர்ந்தளிக்க வும் சட்டம் அதிகாரம் அளிக்கிறது. மேலே 12-வது பாராவில் காட்டப்பட்டுள்ளபடி, இப்படி பிரதேச செஸ் மூலம் வசூலிக்கப் பட்ட தொகையில் ஒன்பதில் நான்கு பாகம் பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதிக்காக ஒதுக்கப்படல் வேண்டும். மிச்சத் தொகையில் ஒரு அளவானது கிராமப் பஞ்சாயத்து நிதிக்கு ஒதுக்கப் படல் வேண்டும். இதனால் பஞ்சாயத்துக்களுக்கு தலைக்கு 20 நயா பைசா மூலம் வருமானம் கிடைக்கும். மிச்சமிருக்கிறதொகை பஞ்சாயத்து யூனியன் பொது நிதிக்கு ஒதுக்கப்படல் வேண்டும். நகரப் பஞ்சாயத்துக்களாக இருந்தால் நகரப் பஞ்சாயத்து பிர தேசத்தில் பிரதேச செஸ் மூலம் வசூலிக்கப்பட்ட தொகையில் ஒன்பதில் இரண்டு பங்கு மட்டும் நகரப் பஞ்சாயத்து நிதிக்கு ஒதுக்கப்படல் வேண்டும். இந்த உப தலைப்பின்கீழ் மாநிலம்

பூராவுக்குமாக ஐந்தாண்டுக் காலத்திற்கு 375 லட்சம் ரூபாய் இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

27. **பிரதேச செஸ் சர்சார்ஜ்.**—பஞ்சாயத்துச் சட்டத்தின் 115-வது பிரிவின் கீழ் விதிக்கப்படும் பிரதேச செஸ்ஸுடன், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றமும், சரியென்று படுகிற அளவில், ஒரு பிரதேச செஸ் சர்சார்ஜை விதிக்க பஞ்சாயத்து சட்டத்தின் 116-வது பிரிவு அதிகாரம் அளிக்கிறது. அதிகபட்சமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற வரம்பிற்குமேல் இது போகாமல் இருக்க வேண்டும். இப்படி விதிக்கப்பட்ட சர்சார்ஜ் மூலம் வரும் தொகை முதலில் பஞ்சாயத்து யூனியன் பொது நிதியில் போய்ச் சேரும். ஆரம்பக் கல்வியின் இரண்டாவது படிக்காக ஆகும் செலவில் பஞ்சாயத்து யூனியன்கள் தங்களுடைய பங்கை அளிக்க வேண்டி, இந்தத் துறையில் வரும் வருமானத்தில் ஒரு பகுதி (அதே போன்ற ஈட்டு மானிய அளவும்) பஞ்சாயத்து யூனியன் கல்விநிதிக்கு மாற்றப்படல் வேண்டும். 1965-ம் ஆண்டுக்குள் எல்லோருக்கும் கட்டாய தொடக்கக் கல்வி அளிப்பது என்ற இலக்கை பஞ்சாயத்து யூனியன் அடையவேண்டு மென்றால் இப்படி பிரதேச செஸ் சர்சார்ஜ் விதிப்பது தவிர்க்க முடியாததாகும். இது முன்பே 20-வது பாராவிலும் விளக்கப்பட்டுள்ளது.

28. **பிரதேச சிறிய வருமானங்கள்.**—மார்கெட் வரி, கேளிக்கை வரி, லைசன்ஸ் கட்டணங்கள், தொழில் வரி, வாகன வரி, மீன் விற்கக் குத்தகை ஆகியவை இதில் அடங்கும். இதில், தற்சமயத்திற்கு முதல் அம்சமான பஞ்சாயத்து யூனியன் மார்க்கெட்டுகளில் வசூல் செய்யப்படும் மார்க்கெட் வரி மட்டும் தான் பஞ்சாயத்து யூனியன்களுக்கு போய்ச் சேரும். வசூல் வேலை செய்யும் கட்டணத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும் பத்து சத விகிதத்தைக் கழித்துக்கொண்டு மிச்சம் கேளிக்கை வரி வருமானம் தற்சமயம் பஞ்சாயத்துக்களுக்கு அப்படியே கொடுக்கப்பட்டுவிடுகிறது. இந்தச் சட்டத்தின் கீழ், கேளிக்கை வரியை கேளிக்கை யார் அதிகாரத்திலுள்ள பகுதியில் நடக்கிறதோ அந்த பிரதேச அதிகாரம் பெற்ற ஸ்தாபனத்திற்கும் மற்ற அருகாமையில் உள்ள பிரதேச அதிகாரம் பெற்ற ஸ்தாபனத்திற்கும் இடையே பிரித்தளிப்பதற்கான அதிகாரத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி, கேளிக்கை வரி மூலம் வருமானத்தில் 90 சத விகித அளவு பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்து யூனியனுக்குமிடையே குறிப்பிட்ட அளவு முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடலாம். லைசன்ஸ் கட்டணங்கள், தொழில் வரி, வாகன வரி இவை பஞ்சாயத்துக்களுக்கு கிடைக்கும் வருமான வகைகள். மீன் விற்க அளிக்கும் குத்தகைத் தொகையும் பஞ்சாயத்து யூனியன்களைச் சேர்ந்தது. ஐந்தாண்டுகளுக்கு இந்தத் துறைகளில் வருமானங்கள் சரியாக எவ்வளவு கிடைக்கும் என்பது கணக்கிடப்பட வேண்டும். அரசாங்க ஆணை 664-ன் இணைப்பு இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதாச்சார முறையை அப்படியே அமுலுக்குக் கொண்டுவரத் தேவையில்லை.

29. **பிரதேச செஸ் சர்சார்ஜ் ஈட்டு மானியம்.**—சட்டத்தின் 116-வது பிரிவில் கண்டபடி, பஞ்சாயத்து யூனியன் விதிக்கின்ற பிரதேச செஸ் சர்சார்ஜுக்கு ஈடாகவே அரசாங்கம் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு ஈட்டு மானியம் அளிக்க வேண்டும் என்று சட்டத்தின் 129-வது பிரிவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த அம்சம் பஞ்சாயத்து பொது நிதியில் நேரடியாகச் சேர்க்கப்படும். பிரதேச செஸ் சர்சார்ஜ் போலவே, இந்தத் தொகையில் ஒரு பகுதி பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதிக்கு பின்னால் மாற்றப்பட வேண்டும். அப்படி அரசாங்கம் அளிக்கும் மானியம் வட்டாரத்தின் ஏ, பி, சி, டி, என்ற வகையில் பிரிக்கப்பட்டிருப்பதை ஒட்டி, வசூலிக்கப்பட்ட பிரதேச செஸ் சர்சார்ஜின் 75, 100, 125, 150 சத விகிதங்களாக இருக்கும். முன்பே குறிப்பிட்டுள்ளபடி, இந்தக் காரியத்திற்காக தற்சமயத்திற்கு கலெக்டர் அறிவித்துள்ள பகுதிப் பிரிவு முறை அனுஷ்டிக்கப்படவேண்டும்.

30. **பிரதேச சாலை மானியம்.**—பஞ்சாயத்து யூனியன் சாலைகளை பராமரிப்பதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கும் நபர் ஒன்றுக்கு தலைக்கு 40 நயாபைசா என்கிற அளவில் ஒரு தொகையானது மானியமாக அளிக்கப்பட வேண்டுமென்று சட்டத்தின் 131-வது பிரிவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இப்படிக்கிடைக்கின்ற தொகை பஞ்சாயத்து யூனியன் பொது நிதியில் சேர்க்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன் சாலைகளை சீரான முறையில் பராமரிக்கமட்டும்தான் உபயோகப்படுத்தப்பட வேண்டும். இந்த வகையில் ஐந்தாண்டுகளுக்கு எவ்வளவு வருகிறது என்று மதிப்பிடப்படவேண்டும்.

31. **தாய் சேய்நல மானியம்.**—ஐந்தாண்டு காலத்திற்கு இந்த தலைப்பில் 100 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படிக் கிடைக்கின்ற மொத்த வருமானமும் வட்டாரங்களிடையே சமமான முறையில் ஜனத்தொகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும். இதன்படி ஐந்தாண்டு காலத்திற்கு தலைக்கு 33-1/3 நயா பைசா வரும். இத்துடன் மேலும் குடும்பக் கட்டுப்பாடு வேலைகளுக்காக மானியத் தொகை கிடைக்கவும் செய்யலாம். இது நேரடியாக கொடுக்கின்ற மானியம். ஈட்டு மானியம் அல்ல.

பிரிவு V—கிராமப் பஞ்சாயத்து நிதிகள்

32. கீழே குறிப்பிட்டுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களுக்கான வருமானங்கள் பற்றிய விவரங்கள் அடுத்த ஐந்தாண்டு காலத்திற்கு ஒரு அபிவிருத்தி வட்டாரத் தொகுதியில் உள்ள எல்லாக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் சேர்த்து சொல்லப்படுவதாகும்.

33. *பிரதேச செஸ்.*—பஞ்சாயத்து யூனியன் பொது நிதியின் கீழ் இந்த உபதலைப்புப்பற்றி முன்பே சொல்லியுள்ளபடி, பஞ்சாயத்துக்களுக்கு ஆண்டொன்றுக்கு தலைக்கு 20 நயா பைசா விதம் வருமானம் கிடைக்கும். கிராமப் பஞ்சாயத்துகளுக்கு மட்டும் ஜனத்தொகை அடிப்படையில் இந்தப் தலைப்பின்கீழ் ஐந்தாண்டுகளுக்கு தலைக்கு ஒரு ரூபாய் என்று வசதி செய்து தரப்படல் வேண்டும்.

34. *ஸ்டாம்பு வரி சர்சார்ஜ்.*—இதற்கான விதி முறை 124-வது பிரிவில் காணப்பட்டுள்ளது. இதன் மூலம் வருகின்ற முழு வருமானமும் கிராமப் பஞ்சாயத்து நிதியுடன் சேர்க்கப்படும். தற்பொழுது உள்ள நான்கு சதவிகிதம் என்ற அளவு முறையிலிருந்து ஸ்டாம்பு வரி சர் சார்ஜ் 5 சதவிகிதத்திற்கு உயர்த்தப்படல்வேண்டும். மாநிலம் பூராவுக்குமாக இந்த வகையில் ஐந்தாண்டுகளுக்கு 500 லட்சம் ரூபாய் கிடைக்கும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த சர்சார்ஜிலிருந்து வரும் வருமானத்தை பகிர்ந்தளிக்கும் முறையிலும் ஒரு மாறுதல் இருக்கிறது. அதனுடைய அதிகாரத்திற்குட்பட்ட எல்லையில் வசூல் செய்யப்பட்ட சர்சார்ஜ் தொகையை அந்தப் பஞ்சாயத்துக்கு அளிக்கவேண்டும் என்ற தற்பொழுது அமுலிலிருக்கும் முறைக்குப் பதிலாக, ஒரு வட்டாரத்தில் வருமானத்தையெல்லாம் ஒன்று சேர்த்து வட்டாரத்தில் உள்ள பஞ்சாயத்துக்களிடையே கிராமப் பஞ்சாயத்துக்களின் நிலவரி வருமானத்திற்கு ஒப்ப பகிர்ந்தளிக்கப்படல்வேண்டும்.

35. *கிராம வீட்டு வரி.*—சட்டத்தின் 119 (1) வது பிரிவின்படி, கிராம வீட்டு வரி விதிப்பது கட்டாயமாக்கப்படுகிறது. இதன் மூலம் வருகின்ற வருவாய் முழுவதும் கிராமப் பஞ்சாயத்துகளுக்காக பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரையில குடிசைகளுக்கு இந்த வரியிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இந்த விதி விலக்கு எடுக்கப்பட்டு விட்டது. இந்த முறையில் ஒரு நல்ல தூண்டுதலை உண்டாக்கும் முறையில் ஓர் இணைமானியம் அளிக்கப்பட்டுள்ளது. கிராம அதிகாரிகளால் இந்த வரியை வசூல் செய்யும் வேலை ஏற்றுக் கொள்ளப்படும். கிராம வீட்டு வரி ஒரு முக்கியமான வருவாய்த் துறையாகும். கிராமங்களுக்கு மேலும் வசதிகளை அளிக்கவும், கிராம வேலைகளுக்கு தங்களுடைய இணையான பங்கை அதிகப்படுத்திக்கொள்ளவும் வேண்டி, கிராமப் பஞ்சாயத்துக்கள் இந்த வருவாய்த்துறையை மேலும் அதிகப்படுத்திக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உப தலைப்பின்கீழ் ஐந்தாண்டுகளுக்கு எவ்வளவு வரும் என்று மதிப்பீடு போடப்படல் வேண்டும்.

36. *பிரதேச சிறிய வருமானங்கள்.*—பஞ்சாயத்து மார்கெட்டுகளின் மார்க்கெட் வரிகள், கேளிக்கை வரி, லைசன்ஸ் கட்டணங்கள், தொழில் வரி, வாகன வரி, மீன் விற்கக் குத்தகை ஆகியவை பிரதேச சிறிய வருமானங்களில் சேரும். பஞ்சாயத்துக்கள் மார்க்கெட்டுகளை மேலும் அபிவிருத்தி செய்து கொள்ளலாம். லைசன்ஸ் கட்டணங்கள்மூலம் வரும் வருமானம் மேலும் வளர்ந்து கொண்டே போகும் தன்மையது. சட்டத்தின் 119 (1)-வது பிரிவின்கீழ் தொழில் வரி கட்டாயமானதாகும். இதிலிருந்து கிடைக்கும் வருமானமும் அதிகமாகலாம். வாகன வரியும் இதே மாதிரிதான். அபிவிருத்தி வட்டாரத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களும் இந்தத் துறைகளிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு என்று மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.

37. *கிராம வீட்டு வரி ஈட்டு மானியம்.*—சட்டத்தின் 132-வது பிரிவு இதைப்பற்றி சொல்கிறது. 120-வது பிரிவின்கீழ் பஞ்சாயத்துக்கள் எப்படி வீட்டு வரியை விதித்து வசூல் செய்கின்றனவோ, அதற்கு ஈடாக அளிக்கப்படும் ஈட்டு மானியம் இது. இதன்படி வருகின்ற தொகை பூராவும் பஞ்சாயத்து

நிதியுடன் சேர்க்கப்படல்வேண்டும். வீட்டு வரிமூலம் வருகின்ற வருமானத்திற்கு இது சமமாக இருக்கும். 35-வது பாராவில் வலியுறுத்திக் காட்டியுள்ளபடி, கிராமங்களின் வசதிகளை மேன்மேலும் பெருக்கிக்கொள்ளவும், கிராம வேலைகளுக்கு தங்களுடைய பங்கின் அளவை அதிகப்படுத்திக்கொள்ளவும் வேண்டி, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு கிராம வீட்டு வரிக்கு சமமான இந்த ஈட்டு மானியம் மிக முக்கியமான வருவாய்த் துறையாக அமையும்.

38. **கிராம வேலைகள் மானியம்.**—தற்பொழுது கீழ்க்கண்ட முக்கியமான திட்டங்களின் கீழ் கிடைக்கக்கூடிய நிதிவசதிகளை பொறுத்து, கிராம வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன :—

(1) வட்டாரப் பிரதேசங்களில் வட்டார அளவில் திட்டமிடப் பட்ட வரவு செலவுத் திட்டம்; (2) வட்டாரம் அல்லாத பிரதேசங் களில் பிரதேச அபிவிருத்தி வேலைகள்; (3) ஒருங்கிணைந்த கிராமக் குடி தண்ணீர் விநியோகத் திட்டம்; (4) தேசியக் குடிதண்ணீர் வசதி, துப்புரவுத் திட்டம்; (5) ஐந்தாண்டுத் திட்ட சாலைகள் வேலை முறைகள். இப்பொழுது இருக்கிற அமைப்பு முறையின் கீழ், ஒரே மாதிரியான வேலையானது பல்வகைப்பட்ட திட்டங் களின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டங்களில் உள்ள எல்லா வசதிகளையும், தேசிய குடித் தண்ணீர் வசதித் திட்டம் ஒன்று தவிர, ஒருமுகப்படுத்தி, எல்லா வட்டாரங்களிலும் ஒரு முகப்படுத்தப்பட்ட துறையில் இதைச் செயலாற்றுவது என்று இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது. சில விஷயங்களில், பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் நன்கொடையின் சதவிகித விதாச்சாரம், செயல்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள் ஒரே மாதிரியாக இருந்தபோதிலும், ஒவ்வொரு திட்டத்திற்கும் வித்தியாசப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட வித்தியாசங்களைப் போக்கவும் இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்படி ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ், குடி தண்ணீர் வசதி, சாலைகள் இணைக்கும் வேலை ஆகிய வசதிகளுக்காக ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு கிராம வேலைகள் மானியம் கிடைக்கும்.

39. வட்டார ரீதியாக இந்தத் தொகையை பகிர்ந்தளிக்கும் பொழுது, "இரண்டு, மூன்றுவது திட்டக் காலமாகிய பத்தாணடு காலத்திற்கு ஒவ்வொரு வட்டாரமும் சமமான ஒரு தொகையைப் பெறவேண்டும்" என்ற விதிமுறையை அனுஷ்டிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட அடிப்படையில் இந்தப் பத்தாண்டு காலத்திற்கு ஒவ்வொரு வட்டாரமும் பெறும் பங்கு 6·67 லட்சம் ரூபாயாக இருக்கும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. ஆகவே, மூன்றுவது திட்டக் காலத்தில் இந்த இரண்டு காரியங்களுக்காக கணக்கிடப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள 6·67 லட்சம் ரூபாயிலிருந்து அந்த வட்டாரத்தில் பல்வேறு திட்டங்களின்கீழ் இந்த இரண்டு காரியங்களுக்காக இரண்டாவது திட்டத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகையை கழித்துக் கொண்டு மிச்சம் வரும் தொகையை ஒவ்வொரு வட்டாரமும் அடையும். அதே சமயத்தில், ஈட்டு நன்கொடையைத் திரட்டு வதில் வட்டாரத்தின் சக்திகளையும் அந்தத் தொகையை செலவழிக்கும் வகைகளையும் மனத்தில் கொண்டு, அத்துடன் இந்தத் துறையில் பெருவாரியான முன்னேற்றம் கண்டுள்ள வட்டாரங்களுக்கும் ஒரு குறைந்தபட்ச திட்டமாக இருக்க வேண்டுமென்பதையும் எடுத்துக்கொண்டு பார்த்து அதன்படி மேற்கண்ட விதிமுறைப்படி வரும் தொகை மேலும் அதிகமாக்கப் படவேண்டியிருந்தால், அப்படிப்பட்ட நிலையில் ஒரு வட்டாரத் திற்கு 4 லட்சம் ரூபாய் என்பதை வரம்பாகக் கொள்ளலாம் என்பது மிகவும் சிலாக்கியமானதொன்றாகும். அதேபோல், மேற் கண்ட விதி முறைப்படி கணக்கிடப்படும் தொகை மிகவும் குறைந்திருந்தால் அந்த நிலையில் இரண்டு லட்ச ரூபாய் அளிக்க வேண்டும் என்பதைக் குறைந்தபட்ச வரம்பாகக் கொள்ள வேண்டும் என்பதும் சிலாக்கியமானதே. இந்த திட்டத்திற்காக ஐந்தாண்டுக் காலத்திற்கு செலுத்தப்படும் நிதி அளவானது மக்களின் தேவைகளின் அளவை மட்டும் பொருத்திராமல், அத்துடன் தேவையான ஈட்டு நன்கொடையைத் திரட்டுவதில் பஞ்சாயத்துக்களுக்குள்ள திறமையையும் பொருத்துத்தான் அமையும் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதிகமாக பிற்பட்ட பிரதேசங்களுக்கு உதவிகள் புரியும் வகையில் போதிய முறையில் சற்று தாராளமாகவே அவை கவனிக்கப் பட்டுள்ளன என்பதைக் குறிப்பிடவேண்டும். கீழே 34 பாராவில் அரசாங்க ஆணை எண் 664-இணைப்பு (ii) விவரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, கிராமப் பஞ்சாயத்துக்கள் எழுப்பும் ஈட்டு நன்கொடையின் அளவைப் பொறுத்துத்தான் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ஒதுக்கப்படும் தொகை நிர்ணயிக்கப்படும்.

40. **பிரதேச சிறப்பு வருமானங்கள்.**—இதில் கிராம அபிவிருத்தி வரிகள், கிராம அபிவிருத்தி நன்கொடைகள் அடங்கும். மேலே 11-வது பாராவில் (ii) முந்தியதைப்பற்றிய விளக்கம் உள்ளது. சட்டத்தின் 119 (3)-வது பிரிவின் கீழ் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக விவசாயம் செய்யப்படுகின்ற நிலங்களின் மீது விதிக்கின்ற வரியாகும் இது. கிராம அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்ற வேண்டிய ஈட்டு நன்கொடைகளுக்கு நிதி வசதி செய்ய பஞ்சாயத்துக்களுக்கு உதவி செய்ய இந்த வரி விதிப்பதின் மூலம் வசதிகள் செய்து கொள்ளலாம். தற்சமயம் கிராம அபிவிருத்தி வேலைகளும் வட்டார வேலைகளும் பிரதேசத்தில் திரட்டப்படும் நன்கொடையின் ஈட்டு தொகை அளிப்பிலிருந்து செய்யப்படுகின்றன. கணிசமான அளவுக்கு ஈட்டு நன்கொடைகள் இந்த முறையில் தொடர்ந்து செய்யப்படும். ஐந்தாண்டு காலத்திற்கு பிரதேச சிறப்பு வருமானங்கள் என்ற வகையில் எவ்வளவு வசதிகள் உள்ளன என்பதை ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரமும் மதிப்புப்போடவேண்டும். 39-வது பாராவில் முன்பே சொல்லியுள்ளபடி, ஒரு வட்டாரத்தில் மாநில அரசாங்கத்தினிடமிருந்து பிரதேச வேலைகள் மானியமாகக் கிடைக்கப்பெறும் தொகையின் அளவு அந்த வட்டாரத்தில் உள்ள பஞ்சாயத்துக்கள் பிரதேச சிறப்பு வருமானங்கள் என்ற வகையில் அதற்கு ஈடான தொகையை வசூலிப்பதைத்தான் பெருமளவுக்கு சார்ந்திருக்கும்

பிரிவு VI—முடிவுரை

41. பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும்பொழுது, பஞ்சாயத்து யூனியனும், பஞ்சாயத்துக்களும் திட்டவேலையை நிறைவேற்றுவதில் தங்களுடைய வரம்பிற்குட்பட்ட அளவில் வேண்டிய வசதிகளைத் திரட்டுவதில் குறிப்பான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அழைக்கப்படுகிறார்கள். ஆரம்பக் கல்வி, கிராம வேலைகள், விவசாயம், பள்ளி உணவுத் திட்டம் இதுபோன்ற அபிவிருத்தி வேலைகளுக்காக அளிக்கப்படும் அரசாங்க மானியங்கள் எல்லாம் அந்த அளவு ஈட்டுத்தொகையை திரட்டுவதைப் பொறுத்திருக்கும். பஞ்சாயத்து யூனியன்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் வேண்டிய அதிகப்படியான வசதிகளைத் திரட்டுவதற்கு போதிய அதிகாரத்தை சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டம் அளித்திருக்கிறது. உதாரணமாக, பிரதேச செஸ் சர்சார்ஜ், விவசாயம் செய்யப்படுகின்ற நிலங்களின்மீது வரிவிதித்தல் மற்றும் இது போன்றவை இப்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களாகும். அத்துடன் பிரதேச செஸ் சர்சார்ஜ், ஈட்டு மானியம், வீட்டுவரி ஈட்டு மானியம் போன்ற ஈட்டு மானியத் தொகையை அப்படிப்பட்ட வசதிகளை பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் திரட்டுவதற்காக அரசாங்கம் அளிக்கவேண்டும் என்று சட்டம் வகை செய்திருக்கிறது. மேல் சொல்லப்பட்ட குறிப்புகளின்படி பஞ்சாயத்து யூனியன்-பஞ்சாயத்துக்கள் திரட்டுகின்ற ஆதாரங்களை மேற்கொண்டும் அபிவிருத்தி வேலைகளுக்காக ஆகும் செலவைப் பொறுத்த வரையில், வரையறை முறையற்ற சதவிகித விதாச்சாரத்தைக் குறிக்காவிட்டாலும், மிகவும் முக்கியமானவையாகும். திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், எந்த அளவு முறை குறிப்பிட்டுள்ளதோ, அந்த அளவுக்கு பிரதேச வசதிகள் திரட்டப்படாவிட்டால், பஞ்சாயத்து யூனியன் குறைந்த அளவில் தான் அரசாங்க மானியங்களைப் பெறமுடியும் என்பதையும், அவைகளுடைய அபிவிருத்தித் திட்டம் குறைந்துதான் இருக்கும் என்ற உண்மையை பஞ்சாயத்துத் தலைவர்கள் தெள்ளத் தெளிந்த வகையில் புரிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். பகிர்ந்தளிக்கக் கிடைக்கக்கூடிய அரசாங்க மானியங்களின் தொகை வரையறைக்குட்பட்டது என்பதையும் மாநிலத்தின் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் அந்த அளவு வறையறுக்கப்பட்டுள்ளது என்பதையும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். பிரதேச ஆதாரங்களைத் திரட்ட போதிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் எந்த வட்டாரம் கவனக் குறைவாக இருந்து விடுகிறதோ, அந்த வட்டாரம், கிடைக்கக்கூடிய நிதிகள் மற்ற வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்டுவிடுகின்ற நிலையை பின்னால் காண நேரிடும். ஆகவே, ஒவ்வொரு வட்டாரமும், இந்த குறிப்புகளின்படி அவைகளுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய அரசாங்க மானியத் தொகையின் அதிகபட்ச அளவுக்கு ஈடாக பிரதேச வசதிகளைத் திரட்ட இடையறுமல் பாடுபட வேண்டியது மிகவும் முக்கியம்.

இணைப்பு II

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்ற வட்டாரத்தின் ஆரம்பக் கல்வித் திட்டம்

I. ஜனத்தொகை—

(1) 1951-ம் ஆண்டு ஜனத்தொகை கணக்குப் படி வட்டாரத்தின் ஜனத்தொகை.. 77,247 அல்லது மொத்தமாக 77,000

(2) 1965–66-ல் ஜனத்தொகை (ஜனத்தொகையின் அளவு 15 ஆண்டுகளில் 25 சதவிகிதம் அதிகமாகலாம் என்று மதிப்பிடப்படுகிறது) .. $77,000 \times \frac{125}{100}$

(3) முதல் வகுப்பிலிருந்து ஐந்தாவது வகுப்பு வரையில் 6-விருந்து 11 வயது வரை உள்ள மாணவர்கள் 1965–66-வரை சேர்க்கப்பட வேண்டிய எண்ணிக்கை (ஜனத்தொகையில் 12½ சத விகிதங்களிலிருந்து 11 வயதுவரை உள்ளவர்களாக இருப்பார்கள் என்ற அநுமானத்தின் பேரிலும் இந்த ஜனத்தொகைப் பிரிவில் 90 சதவிகிதம் அல்லது மொத்த ஜனத்தொகையில் 11 சதவிகிதம் மூன்றுவது திட்டக்கால முடிவில் அடையவேண்டிய இலக்கு என்ற அடிப்படையிலும்) .. .. $77,000 \times \frac{125}{100} \times \frac{11}{100} = 10,615$

(4) பஞ்சாயத்து யூனியனில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் (உதவி பெறுகிற, யூனியன், அரசாங்கத்துறைகள் நடத்துபவை) முதல் வகுப்பிலிருந்து 5-ம் வகுப்பு வரை இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை .. 7,552

(5) சேர்க்கவேண்டிய புது மாணவர்களின் தொகை 10,615—7,552=3,063

II. ஆசிரியர்கள்—

(1) வட்டாரத்தில் உள்ள ஆரம்பப்பள்ளிகள், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள். 51
உதவிபெறும் பள்ளிகள். 7
ஹரிஜன நல இலாகா நடத்தும் பள்ளிகள். 7
65

(2) 1960–61-ம் ஆண்டில் ஆசிரியர்களின் எண்ணிக்கை—

பஞ்சாயத்து யூனியன்	162
உதவிபெறும் பள்ளிகள்	32
ஹரிஜன நலப் பள்ளிகள்	14
	208

(3) 1965–66-ஆண்டில் வட்டாரத்திற்கு அவசியமாகத் தேவைப்படுகிற ஆசிரியர்களின் எண்ணிக்கை—
40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று ஒரே அளவு முறை கையாளப்பட்டால் ஆசிரியர்களின் எண்ணிக்கை— $\frac{10,615}{40} = 265$

(4) 1965–66-ஆம் ஆண்டில் வட்டாரத்திற்கு தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை—
புதிதாகச் சேர்க்கப்படுகிற 45 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற கணக்கு கையாளப்பட்டால். .. $\frac{208+3,063}{45}$
இப்பொழுது இருப்பது, 208+68 =276

அதிகப்படியாக வேலையில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய ஆசிரியர்கள் எவ்வளவு என்பதை புதிதாகச் சேர்க்கப்படும் 45 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் இருக்கலாம். ஆனல், 1965–66-ல் சேர்க்கப்பட்டிருக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் 40-க்கு ஒரு ஆசிரியர் என்ற வரம்பு முறைக்கு உட்பட்டிருக்கவேண்டும்.

(5) ஆகவே 1965–66வரை ஆரம்பக் கல்விக்காக திருக்கழுக்குன்றம் வட்டாரத்தில் வேலையில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை.

III. ஆரம்பக் கல்விக்காகும் செலவு—

ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம், பள்ளிக்கூட அவசர செலவுகள் ஆகிய இதற்காக ஏற்படும் செலவு இங்கே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அரசாங்க உதவி பெற்று நடக்கும் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்திற்காக அளிக்கப்படும் மானியங்கள், பராமரிப்புக்கான மானியங்கள் அடிப்படையில் கல்விக்கான செலவு கணக்கிடப்படுகிறது. 1960-61 ஆண்டுக்கான புள்ளி விவரங்கள் வருமாறு.—

யூனியனால் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் 162 ஆசிரியர்களுக்காகும் செலவு. — ரூ. 1,81,123

அரசாங்க உதவி பெற்று நடத்தும் பள்ளிகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் 32 ஆசிரியர்களுக்காகும் செலவு. — ரூ. 32,497

[ஹரிஜன நல இலாகாவினால் நடத்தப்பெறும் பள்ளிகளில் ஆகும் செலவு உடனடியாகக் கிடைக்கவில்லை. ஆகவே ஒரு ஆசிரியருக்கு ஆகும் செலவு எவ்வளவு என்பதைக் கணக்கிடும் பொழுது இது சேர்த்துக்கொள்ளப்படவில்லை.]

(1) ஆகவே ஆரம்பக் கல்விக்காக ஆண்டொன்றுக்கு 194 ஆசிரியர்களுக்காகும் செலவு. — ரூ. 2,13,620

(2) ஆகவே ஆண்டொன்றுக்கு ஆரம்பக் கல்விக்காக ஒரு ஆசிரியருக்காகும் செலவு. — ரூ. 1,100

இந்த செலவுக் கணக்கில் ஊதியக் குழுவினர் அளித்த சம்பளவிகித அடிப்படையில் கொடுக்கப்படும் ஆசிரியர் சம்பளத் தொகையும், பள்ளிகளில் சில்லறைச் செலவுகளுக்காகும் தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆகவே கடைசியாக வரும் தொகை—

1960–61-ல் ஆசிரியர்களின் எண்ணிக்கை.	208
1965–66-ல் ஆசிரியர்களின் எண்ணிக்கை.	265
ஒரு ஆசிரியருக்கு ஆரம்பக்கல்விக்காகும் செலவு.	ரூ. 1,100 ஆண்டொன்றுக்கு.

(3) ஆகவே ஆரம்பக் கல்விக்காகும் மொத்தச் செலவு—

$(2\times208+3\times265) \times 1,100 = 1,211\times$ 1,100 அல்லது ரூ. 13,32,100 (மூன்றுவது ஐந்தாண்டு காலத்தில்).

இந்தத் தொகை ஆரம்பக் கல்விக்காக ஐந்தாண்டுகளில் ஆகும் செலவைக் காட்டுகிறது.

IV. நிதி ஆதாரங்கள்—

(1) துணைக் கல்வி மானியம்—

ஐந்தாண்டுகளுக்கு மொத்தச் செலவான ரூ. 13·32 லட்சத்தில் 90 சதவிகிதம் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தைமட்டும் குறிப்பிடுகிறது. (பள்ளி சில்லறைச் செலவுகளுக்காக 10 சதவிகிதம் ஆகிறது).

புதுச்சம்பள விகிதத்தின்படி ஆசிரியர்களுக்கு அளிக்கும் ஊதியத்தில் 20 சதவிகிதம் துணைக்கல்வி மானியமாக அளிக்கப்பெறும். ஆகவே, ஐந்தாண்டு காலத்திற்கு, பஞ்சாயத்து யூனியன் இதற்குச் சமமான ஒரு தொகையை துணைக்கல்வி மானியமாக பெறும்.

$$\frac{13{\cdot}32\times90\times1}{100\quad 5}$$

= 2·4 லட்சம்.

(2) முதல்படி நிலவரி ஒப்படைப்பின் மூலம் சமாளிக்கப்படுகிறது

1961-ல் வட்டாரத்தின் ஜனத்தொகை $= \frac{77,247\times7}{6} = 90,122$

ஆகவே தலைக்கு ஓராண்டுக்கு ஒரு ரூபாய் வீதம் நிலவரி ஒப்படைப்பு மூலம் ஒதுக்கப்படுகிற தொகை. — ரூ. 90,122 ஒரு ஆண்டுக்கு.

ஆகவே முதல் படியின்கீழ் நிலவரி ஒப்படைப்பின் மூலம் ஐந்தாண்டு காலத்திற்கு ஒப்படைக்கப்படுகிற வருமானம் ரூ. 4·5 லட்சம்.

(3) இந்த இரண்டு அம்சங்களுக்கு மேற்பட்டு ஆகும் செலவு இரண்டாவது படியைச் சார்ந்தது. ஆகவே, ஐந்தாண்டு காலத்திற்கு ஆரம்பக் கல்விக்காக இரண்டாவது படியின்கீழ் ஆகும் செலவு. =13·32—(2·4+4·5)= 6·42 லட்சம்.

(4) திருக்கழுக்குன்றம் ஒரு பி வகுப்பு. வட்டாரம். ஆகவே இந்த வட்டாரத்திற்கு இரண்டாவது படியின்கீழ் ஆகும் செலவில் 60 சதவிகிதம் பிரதேசக் கல்வி மானியமாக அளிக்கப்பட வேண்டும். ஆகவே பிரதேசக் கல்வி மானியம்—

$$= \frac{6·42 \times 60}{100} = 3·85 \text{ லட்சம் ரூபாய்.}$$

(5) மிச்சமிருக்கிற 40 சதவிகிதம் பிரதேச ஆதாரங்களிலிருந்து சமாளிக்கப்பட வேண்டும். இந்தத் தொகை ஐந்தாண்டுகளுக்கு ரூ. 2·57 லட்சமாகிறது.

(6) பிரதேச செஸ்—

ஓராண்டுக்கு வட்டாரத்தில் நிலவரி வருமானம். 1·28 லட்சம் ரூபாய்.

கல்விக்காக பிரதேச செஸ்ஸிலிருந்து பங்கு—ஓராண்டுக்கு நிலவரி வருமானத்தில் ஒரு ரூபாய்க்கு 20 நயா பைசா. ஆகவே, ஓராண்டுக்கு பிரதேச செஸ்ஸிருந்து கல்விக்காகக் கிடைக்கும் தொகை ·256 லட்சம் ரூபாய்

ஆகவே பிரதேச செஸ்ஸிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு கிடைப்பது 1·28 லட்சம் ரூபாய்

மிச்சம் வேண்டிய தொகை. ரூ. 1·29 லட்சம் ரூபாய்.

(7) ஐந்தாண்டுகளுக்கு மிச்சம் வேண்டிய இந்த 1·29 லட்சம் ரூபாயை சாதாரணமாக பிரதேச செஸ் சர்சார்ஜிலிருந்தும் ஈட்டு மானியத்திலிருந்தும் சமாளிக்க வேண்டும்.

திருக்கழுக்குன்றம் ஒரு பி வகுப்பு வட்டாரமாக இருப்பதால், வசூலிக்கப்படும் பிரதேச செஸ் சர்சார்ஜில் 100 சதவிகிதத்தை ஈட்டு மானியமாகப் பெற அருகதை உள்ளது, ஆகவே திரட்டப்பட வேண்டிய பிரதேச செஸ் சர்சார்ஜ்.

1.29 × ½ லட்சம் அல்லது ·645 லட்சம் ரூபாய் ஐந்தாண்டுகளுக்கு.

V. ஆண்டுத் திட்டமும் நிகர செலவும்—

1960–61-ல் ஆசிரியர்களின் எண்ணிக்கை	..	..	208
1965–66-ல் ஆசிரியர்களின் எண்ணிக்கை	..	..	265
ஐந்தாண்டுகளில் அதிகமான தொகை	..	..	57
அடுத்த ஐந்தாண்டுகளில் இந்த உயர்வு விகிதாச்சாரம், 12, 12, 9 என்ற எண்ணிக்கையில் ஐந்தாண்டுகளில் என்ற விகிதாச்சாரத்தில்)			8,16, 2: 4: 3. 3:2
1960–61-ல் 208 ஆசிரியர்களுடன் ஆரம்பக் கல்விக்காகும் செலவு.			2,28,000
1961–62-ல் 216 ஆசிரியர்களுடன் ஆரம்பக் கல்விக்காகும் செலவு.			2,37,000

இது கீழ்க்கண்ட முறையில் பிரிக்கப்படும்;—

(i) துணைக் கல்வி மானியம்	..	..	..	42,700
(ii) நிலவரி ஒப்படைப்பு (முதல் படி)	..		..	90,000
(iii) நிலவரி ஒப்படைப்பு (இரண்டாவது படி)			..	1,04,300
இதில் 60 சதவிகிதத்தில் அரசாங்கத்தின் பங்கு			..	62,600
40 சதவிகிதத்தில் பஞ்சாயத்து யூனியன் பங்கு			..	41,700
பிரதேச செஸ் மூலம்	..	..	..	25,600
(iv) 1961–62-ல் நிகர செலவு மானியம் 62,600+ (41,700–25,000)	..	..	..	78,700

1962–63

ஆசிரியர்களின் எண்ணிக்கை	..	..	..	232
மொத்தச் செலவு	..	..	..	2,54,600
(i) துணைக் கல்வி மானியம்	..	..	..	45,800
(ii) நிலவரி ஒப்படைப்பு (முதல் படி)		..	..	90,000

	ரூ.
(iii) நிலவரி ஒப்படைப்பு (இரண்டாம் படி) ..	1,18,800
அரசாங்கத்தின் பங்கு (பிரதேசக் கல்வி மானியம்) ..	71,300
பஞ்சாயத்து யூனியனின் பங்கு	47,500
பிரதேச செஸ்	25,600
பிரதேச செஸ் சர்சார்ஜும் ஈட்டு மானியமும் ..	21,900

1963–64—

ஆசிரியர்களின் எண்ணிக்கை— 244

மொத்தச் செலவு	2,67,800
(i) துணைக் கல்வி மானியம்	48,200
(ii) நிலவரி ஒப்படைப்பு (முதல் படி)	90,000
(iii) நிலவரி ஒப்படைப்பு (இரண்டாவது படி) ..	1,28,600
அரசாங்கத்தின் பங்கு (பிரதேசக் கல்வி மானியம்) ..	77,200
பஞ்சாயத்து யூனியன் பங்கு	51,400
பிரதேச செஸ்	25,600
பிரதேச செஸ் சர்சார்ஜும் ஈட்டு மானியமும் ..	25,800

1964–65—

ஆசிரியர்களின் எண்ணிக்கை— .. 256

மொத்தச் செலவு	2,81,000
(i) துணைக் கல்வி மானியம்	50,600
(ii) நிலவரி ஒப்படைப்பு (முதல் படி)	90,000
(iii) நிலவரி ஒப்படைப்பு (இரண்டாவது படி) ..	1,40,400
அரசாங்கத்தின் பங்கு	84,200
பஞ்சாயத்து யூனியன் பங்கு	56,200
பிரதேச செஸ்	25,600
பிரதேச செஸ் சர்சார்ஜும் ஈட்டு மானியமும் ..	30,600

1965–66—

ஆசிரியர்களின் எண்ணிக்கை— 265

மொத்தச் செலவு ..	2,90,000
(i) துணைக் கல்வி மானியம்	57,600
(ii) நிலவரி ஒப்படைப்பு (முதல் படி) ..	90,000
(iii) நிலவரி ஒப்படைப்பு (இரண்டாவது படி) ..	1,42,300
அரசாங்கத்தின் பங்கு	85,400
பஞ்சாயத்து யூனியன் பங்கு	56,900
பிரதேச செஸ்	25,600
பிரதேச செஸ் சர்சார்ஜும் ஈட்டு மானியமும் ..	31,300

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

ராணியின் சென்னை விஜயம்

பிப்ரவரி 19, 20 ஆகிய இரண்டு தினங்களிலும் சென்னை மாநகரமே திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. ராணி எலிஸெபத் அவர்களின் சென்னை விஜயத்தைப்பற்றி மக்கள் நெடுநாளைக்குப் பேசிக்கொண்டிருப்பர் என்பது உறுதி.

No. M 7277



©
தமிழ்நாடு அரசாங்கம்.
1961.

சென்னை நகரமே இதுவரை கண்டிராத அளவில் எலிஸெபத் ராணிக்கும் அவர் கணவரான எடின்பரோ கோமகனுக்கும் மகத்தான வரவேற்பளிக்கப் பட்டது. அவர்கள் கலந்துகொண்ட வைபவங்கள் சிலவற்றை இங்கே காணலாம்.